
Design: Sinan

# அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

மலர்: 39 இதழ்: 08

ஆகஸ்ட் 2013 ஷவ்வால் 1434



## எகிப்து:
## யதார்த்தத்தின் துவக்கம்

ஏன் தோற்றுப் போகின்றோம்?

ரமழான் கற்றுத் தந்த தக்வா-பிர்-இஹ்ஸான்

50/-

ISLAMIC MONTHLY இஸ்லாமிய இலட்சியக் குரல்

# பெண்களின் இம்மை, மறுமை வாழ்வுக்காக!



- குடும்ப நலனுக்கும், எதிர்கால நலனுக்கும்
- சிறுதொழில் வாய்ப்புக்கும், கைத்தொழிலுக்கும்
- வீட்டிலிருந்தே சம்பாதிப்பதற்கும்
- ஓய்வு நேரத்திலும், பகுதிநேரத்தில் சம்பாதிப்பதற்கும்
- விரைவில் தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கும்
- தொழில் புரிந்துக்கொண்டுள்ளோர் மேலும் தகைமை பெற்று உயர்வடைவதற்கும்.
- வெளிநாட்டில் உயர்கல்வி, தொழில், மைக்ரேஸன் பெற்றுக் கொள்ள உள்ளவர்கள் (விசாவுக்கு உதவி)

## தொழில் சார் பாடபயிற்சிகள் நவீன தொழில் நுட்பங்களுடன்

- மொண்ட சூரி டீச்சர் டிரைனிங் (AMI)
- தையல் கலை
- மணப்பெண் அலங்காரம்
- அழகியற் கலை
- சிகை அலங்காரம்
- சர்வதேச தரத்திலான குக்கரி
- பேஷ்ட்ரி
- கேக் வடிவமைத்தல்
- பேக்கரி வகைகள்
- ஆங்கிலம் கதைப்பதற்கு பயிற்சிகள்
- கிரெபிக் டிசைன்
- கொம்பியூட்டர் எகவுண்ட்
- ஒடோ கட்
- மரவை அலங்காம்
- போகே அலங்காரம்
- மருதாணி வரைதல்
- திருமண இதழ் அமைத்தல்

**10 சான்றிதழ்கள் வழங்கப்படும்.**

## 6 மாதக் காலங்கள்

காலை முதல் மாலை வரையில் தினசரி

பாதுகாப்பான தங்குமிட வசதியும் 3 வேளை உணவும்
(பார்வையிடுவது .... காட் வசதிகளுக்கு)

- திருமணத்திற்காக காத்திருக்கும் பெண்களுக்கும்
- எதிர்கால சவால்களை மேற்கொள்வதற்கும்
- மார்க்க விளக்கங்கள்
- அதிஸ் - பயான்கள்
- இபுல் முறைபடி ஓதுதல்
- துவாக்கல் மனனம் செய்தல்
- நியத்துக்கல் - துவாக்கல்
- தொழுகை, நோன்பு, கடமை விளக்கம்
- கணவனுக்கு நல்ல மனைவியாக வாழும் விதம்
- குழந்தை வளர்க்கும் முறைகள்

குழுக்களாகவும் வர முடியும்
தெரிந்தவர்கள் உறவினர்களுடன் வரமுடியும்

**எமது நிறுவனத்தில் பெண்களுக்கு கீழ் உள்ள வசதிகள் உண்டு**

- வாசிகசாலை
- சிகை அலங்கார அறை
- மொன்டசூரி பயிற்சி அறை (AMI)
- சமையல் பயிற்சி அறை
- கணனி பயிற்சி அறை
- தொழுகைக்கான அறை
- உடற்பயிற்சி வசதிகள்

சகல வசதிகளுடன் London College
புதிய கிளை இப்பொழுது **கண்டி நகரில**

**Hot Line : 0779 32 31 31**

**No. 48 3A, William Gopallawa Mawatha, Kandy. (Heerassagala Junction)**

## மேலும் கிளை நிறுவனங்கள் அமைப்பதற்கு

இடம் வசதி (முஸ்லீம்கள் சேர்ந்து வாழுமிடத்தில்) அதிபர்கள், மௌலவியாக்கள், ஆசிரியர்கள் ரெஜீஸ்டர் தபால் மூலம் அல்லது நேரில் வரவும் சம்பளம், உணவு, தங்குமிடவசதிகள் வழங்கப்படும்.

**0774833444 / 0114384462 / 0772166222**

## அனுமதிகள் நடைபெறுகின்றன உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்

எமது கிளை நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்

| பம்பலப்பிட்டி | நூகேகொடை | டேவிட்சன் ரோட் பம்பலப்பிட்டி |
|---|---|---|
| 0711 601040 | 0774323131 | 0114384460 |

## லண்டன் கொலேஜ் இஸ்லாமிக் லேடிஸ் சென்டர்

இல 176 கொலன்னாவ வீதி தெமடகொடை- கொழும்பு 9.
(குற்ற புலனாய்வு பொலிஸ் அருகில் CCD)

தொடர்புகளுக்கு: மிஸ்கோல், ஈமெயில், sms செய்யவும் **011 438 4463**

"என் இரட்சகனே! என் எலும்புகள் பலவீனமடைந்து என் தலையும் நரைத்து விட்டது. எனக்குப் பின்னர் என் உறவுகள் குறித்து நான் அஞ்சுகின்றேன். மேலும் என் மனைவியும் பிள்ளைப் பேறற்றவராகி விட்டாள். ஆகவே, நீ எனக்கொரு வாரிசையளிப்பாயாக! அவர் எனக்கும் யஃகூபின் சந்ததியினருக்கும் வாரிசாக இருப்பார். அவரை பொருந்திக் கொள்ளப்பட்டவராகவும் ஆக்கி வைப்பாயாக! எனது பிரார்த்தனை உன்னிடம் அங்கீகரிக்கப் படாததாக மாட்டாது என நம்புகின்றேன் என (ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாம்) தன் இறைவனிடம் தாழ்ந்த குரலில் பிரார்த் தித்த போது..." (ஸூரா மர்யம்: 26)

மலர்: 39 இதழ்: 08

2013 ஆகஸ்ட் ஷவ்வால்: 1434

ISSN : 1391 - 460X

**விலை விபரம்:**

**உள்நாடு**

தனிப் பிரதி: ரூபா 50.00
வருட சந்தா: ரூபா 800.00
ஆறு மாதம்: ரூபா 400.00

**வெளிநாடு**

இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர்: 2250.00
மலேசியா: 2300.00
மத்திய கிழக்கு நாடுகள்: 2350.00
அவுஸ்திரேலியா, ஜப்பான், தென் கொரியா: 3000.00
இங்கிலாந்து, நியூசிலாந்து: 3700.00
ஐக்கிய அமெரிக்கா, கனடா: 4300.00

• • •

**வெளியீடு:**
**இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி**

**தொடர்புகளுக்கு:**
அல்ஹஸனாத்
77, தெமடகொட வீதி, கொழும்பு-09, இலங்கை
தொலைபேசி:(011) 2689324, தொலைநகல்:(011) 2686030
மின்னஞ்சல்: alhasanath@gmail.com
இணையதளம்: www.alhasanath.lk

அல்குர்ஆன் விளக்கம்
4-5 **ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் பிரார்த்தனையில் குடும்பத் தலைமைகளுக்கான செய்தி**
மௌலவி எம்.எச்.எச்.எம். முனீர்

அல்ஹதீஸ் விளக்கம்
6-8 **அரச அதிகாரிகளும் மோசடிகளும்**
அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)

தஃவா களம்
9-12 **ஏன் தோற்றுப் போகின்றோம்?**
முனைவர் பேராசிரியர் அப்துல் காதர்



13-16 **எகிப்து**

18-20 **ஷெய்க் கர்ளாவியின் தகிய்யாவுக்கு எதிரான கூற்றின் ஒளியில் சிரிய யுத்தம்!**

அந்நிஸா

**எளிமை வாழ்வின் இலக்கணம்** 21-23

**பேனா முனைச் சந்திப்பில்...** 24-26

| | |
|---|---|
| ரமழான் கற்றுத் தந்த தக்வா, பிர், இஹ்ஸான் | (32-34) |
| ஜம்இய்யா | (40-41) |
| வரலாற்று ஒளியின் நிழலில் | (36) |
| ஸீரா | (47-48) |
| சுவனத்தில் தடம்பதியச் செய்யும் பொறுமை | (49-50) |

அல்ஹஸனாத் இதழுக்கு சந்தாக்கள் அனுப்ப நாடுவோர் ALHASANATH என்ற பெயருக்கு Money Order எடுத்து தபாலகம் DEMATAGODA எனக் குறிப்பிட்டு அனுப்பவும். வங்கியில் வைப்பிலிட நாடுவோர் Srilanka Jamath - E-Islami AC NO: 1320009182, Commercial Bank, Maradana அல்லது Srilanka Jamath - E-Islami AC NO: 372132, B.O.C, Maradana எனும் வங்கிக் கணக்கில் குறித்த தொகைப் பணத்தை வைப்பிலிட்டு பற்றுச்சீட்டை அனுப்பவும்.

## சிறந்த உயர்கல்விக்கு or தொழிலுக்கு உங்களை தயார்படுத்தும் முழுநேர/பகுதி நேர ஆங்கில பாடநெறிகள்...

**02 மாத வதிவிட / வதிவிடமற்ற**
கணனி
பயிற்சியுடன் கூடிய **ஆங்கில பாடநெறி**

தினமும் 02 மணிநேரத்துக்கும் அதிகமான பேச்சுப் பயிற்சி

# ENGLISH +
## IT & SKILLS TRAINING

WITH GRAMMAR

| Reading | Writing |
| Listening | Speaking |

மாணவர்கள், பட்டதாரிகள், தொழில் எதிர்பார்ப்போர், உயர்கல்விக்கு தயாராகுவோர், வெளிநாடு செல்லவிருப்போர் மற்றும் ஆங்கிலத்தில் எழுத, பேச விரும்பும் அனைவருக்கும்

பாடநெறி முடிவில் சர்வதேச தரம் வாய்ந்த **03 Diploma** சான்றிதழ்கள் வழங்கப்படும்

**02 Months**
**(Full Time)**
**Weekly 06 Days**

HOTLINE:
0777 44 62 52

**Diploma in**

ஆரம்பத்திலிருந்து கற்பதற்கு ஏற்றவிதத்தில் வடிவமைக்கப்பட்ட பாடநெறி

# Spoken English

**Duration:**
**03 Months**
Monday - Thursday
8:30am - 12:30pm
1:00pm - 5:00pm

Weekend Batches: 04 Months | Saturdays or Sundays - 9:00am - 2:00pm

**WITH GRAMMAR**

## நீங்களும் Auto CAD / MEP Draftsman ஆக விரும்புகிறீர்களா?

மத்திய கிழக்கு நாடுகளில் அதிக தொழில் வாய்ப்பை பெற்றுத் தரும் இப்பாடநெறியில் இணைந்து மிகக் குறுகிய காலத்தில் மிகச் சிறந்த தொழிற் தகைமையொன்றை பெற்றுக் கொள்ளுங்கள்!

**AUTO CAD 2014**

- Diploma in Auto CAD 2014 | [illegible] | [illegible] | Mechanical |
- Advance Diploma in Auto CAD 2014 | Architectural | Electrical | Mechanical |
- Diploma in Auto CAD 2014 | Architectural |
- Diploma in Auto CAD - MEP | Mechanical | Electrical | Plumbing |

**Full Time / Part Time**

100% Practical சூழலில்
Saudi, Qatar, Dubai, Oman போன்ற நாடுகளின் Drawings பயிற்சிக்காக கொடுக்கப்படும்



## DIPLOMA IN AIRLINE

**SPECIAL IN AIR TICKETING**

IATA/UFTA தகைமையுடன் பல வருடகால உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களில் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளரிடம் பாடநெறியை தொடர்வதற்கான சந்தர்ப்பம்

**Duration: 01 - 02 Months**
**Full Time/Part Time**
**(Weekdays/Weekends)**

Individual classes also available

Small group classes, Individual & Night Classes also Available


**Target Group**
| Students | Site Engineers
| Foreman | Supervisors | Job Seekers |

தூர பிரதேச மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்

ETS TOEIC
LCM
City & Guilds
TVEC

# GOLDEN COLLEGE
## CITY CAMPUS
548, Peradeniya Road, Kandy.

0812 20 55 44
0777 91 25 97



# திரும்ப வேண்டிய திசை திருக்குர்ஆனை நோக்கியே!

அல்குர்ஆன் இறங்கப்பட்டதால் மணம்பெற்ற மாதம் ரமழான். இந்த மாதத்தில் பூத்துக் குலுங்கும் நன்மைகள் ஏராளம்! எனினும், இவற்றை அறுவடை செய்தவர்கள் எத்தனை பேர்?

**"நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக இதனை அரபியிலான குர்ஆனாக நிச்சயமாக நாமே இறக்கி வைத்தோம்" (12: 2)** என அல்லாஹ் அரபிகளை பார்த்துக் கூறுகிறான். எனவே, அல்குர்ஆனை ஓதுவதன் நன்மை அதனை விளங்கிக் கொள்வதிலேதான் தங்கியுள்ளது. "அல்குர்ஆனை விளங்கி ஓதும் முயற்சியில் நாம் ஈடுபட்டோமா?" என நாம் ஒவ்வொருவரும் நம்மையே வினவிக் கொள்வதன் மூலம்தான், ரமழானை சரியான முறையில் பயன்படுத்தினோமா என்பதைத் தீர்மானிக்க முடியும்.

அமல்கள் அனைத்தும் எமது ஈமானுக்கு உயிரூட்டுவதற்கே. இந்த உயிரூட்டல் எம்மை ஒரு விடயத்தின் பால் செயல்பட உந்துசக்தியாக மாற வேண்டும். தீனை இவ்வுலகில் நிலைநிறுத்த வேண்டும் என்பதுவே அந்த விடயம். அதுதான் எமது குறிக்கோள்; எமது உலக வாழ்வின் இலட்சியம்; இறுதி இலக்கு. எனவே, அபரிமிதமாக அமல்களை அள்ளிக் கட்டிக் கொண்டு, ரமழான் முடிந்த கையோடு மீண்டும் நம் பழைய வாழ்க்கைக்குத் திரும்புவோமானால், அது மாபெரும் நட்டமேயன்றி வேறில்லை. சரியான பாதையில் பயணிப்பதற்காகவே வழியில் எரிபொருளை நிரப்பிக் கொள்கிறோம். அதன் பின் வாகனத்தை நிறுத்திவைத்து விடுவதாலோ அல்லது தவறான வழியில் பயணிப்பதாலோ நாம் நமது இறுதி இலக்கை அடைந்து கொள்ள முடியாது.

அல்குர்ஆன் வெறுமனே ஒரு புத்தகமாக இறங்கிவிடவில்லை. மாறாக, தீனை இவ்வுலகில் நிலைநிறுத்தும் நபியவர்களின் அந்த 23 வருட பயணத்தில் அல்குர்ஆன் வசனங்கள் அவர்கள் முன்னால் ஒளிபாய்ச்சிச் செல்கின்றன. பாதை தெளிவானது; பயணம் உறுதியானது. இறுதியாக இந்த தீனை நிலைநிறுத்தி எமக்காக, உலக மக்களுக்காக விட்டுச் சென்றார்கள். இந்தப் பாதையை, இந்தப் பயணத்தை நாம் விளங்கிக் கொள்ளவில்லை என்றால்... அந்தப் பாதையில் நாம் பயணிப்பதில்லை என்றால்... அதற்கான காரணம் நாம் அல்குர்ஆனை விளங்கிக் கொள்ளவில்லை என்பதுதான்.

நாம் எம் சமூகத்தின் இன்னோரன்ன பிரச்சினைகளைப் பற்றி ஆராய்கின்றோம். நமது விமோசனத்துக்கு வழி இப்பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்த்துக் கொள்வதிலேதான் தங்கியுள்ளது என முடிவு செய்கிறோம். அவ்வாறெனில், கற்றுத் தேர்ந்தவர்கள், பொருளாதாரத்தில் கொடிகட்டிப் பறப்பவர்கள் எல்லோரும் தமது பாதையையும் தமது பயணத்தையும் விளங்கி வைத்திருக்கின்றார்களா என்றால்...?


அவர்களது கல்வி அந்தப் பாதையை தெளிவாகக் காட்ட உதவவில்லை. அவர்களது பணம் அந்தப் பயணத்திற்கு உதவுவதாக இல்லை. அவர்களது கல்வியும் அவர்களது பணமும் பயணத்திற்கான கட்டுச்சாதனமாக அமையலாம்- அவர்கள் பாதையை, பயணத்தை விளங்கிக் கொள்ளும்போதுதான்!

ரமழான் மாதத்தில் பள்ளிவாசல்கள் நிரம்பி வழிகின்றன. வருபவர்கள், தாம் பயணிக்க வேண்டிய திசையைப் புரிந்து கொண்டார்களா? புரிந்திருந்தால் பள்ளிவாசல்கள் ரமழானின் பின் வெறிச்சோடிக் கிடக்குமா? ஸகாத்தின் மூலம் ஏழைகளை வாழவைக்க முயல்கிறோம். ஆனால், அதனைப் பெற்றுக் கொண்டு அவர்கள் பயணிக்கும் பாதையோ எதிர்த் திசையில்!

மொத்தமாக சமூகம் பயணத்தைப் புரிந்து கொள்ளவில்லை. பாதை அவர்களுக்கு சரியாகத் தெளிவுபடுத்தப்படவில்லை. அல்குர்ஆனை ஓதுவது வெறுமனே ஓதி மூடிவைப்பதற்காக... தொழுவது தொழ வேண்டுமே என்பதற்காக... ஸகாத்தைப் பெறுவது உலக வாழ்வை செப்பனிட்டுக் கொள்வதற்காக... ஹஜ் செய்வது ஹாஜி பட்டத்தை அடைந்து கொள்வதற்காக அல்லது கடமையை நிறைவேற்றுவதற்காக... சிந்தனை இவ்வாறுதான் செல்கிறது.

எமது இறுதி இலக்கு சுவனம்தான் என்பதை விளங்கி வைத்திருக்கிறோம். வெறும் அமல்கள் மூலம் அதனை அடைய முயல்கிறோம். ஆனால், அல்லாஹுத் தஆலா அமல்களை ஏற்படுத்தியிருப்பது அவற்றைக் கொண்டு நம்மை அலங்கரித்துக் கொண்டு சரியான பாதையில் பயணிப்பதற்காகத்தான். பாதை தெளிவில்லையென்றால், பயணம் எவ்வாறு இறுதி இலக்கை அடைய முடியும்?

அல்குர்ஆனை விளங்கிக் கொள்வோம்! அதன் ஒளியில் எமது வாழ்வை அமைத்துக் கொள்வோம்! இந்தப் புனித ரமழான் எமது பயணத்தை ஆரம்பிக்கப் பயன்படட்டும்!



# ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்)களின் பிரார்த்தனையில் குடும்பத் தலைமைகளுக்கான செய்தி

மௌலவி எம்.எச்.எச்.எம். முனீர், அதிபர், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி, புத்தளம்

*"என் இரட்சகனே! என் எலும்புகள் பலவீனமடைந்து என் தலையும் நரைத்து விட்டது. எனக்குப் பின்னர் என் உறவுகள் குறித்து நான் அஞ்சுகின்றேன். மேலும் என் மனைவியும் பிள்ளைப் பேறற்றவராகி விட்டாள். ஆகவே, நீ எனக்கொரு வாரிசையளிப்பாயாக! அவர் எனக்கும் யஃகூபின் சந்ததியினருக்கும் வாரிசாக இருப்பார். அவரை பொருந்திக் கொள்ளப்பட்ட வராகவும் ஆக்கி வைப்பாயாக! எனது பிரார்த்தனை உன்னிடம் அங்கீகரிக்கப் படாததாக மாட்டாது என நம்புகின்றேன் என (ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாம்) தன் இறைவனிடம் தாழ்ந்த குரலில் பிரார்த் தித்த போது..."*

*(ஸூரா மர்யம்: 2-6)*

ஸூரதுல் மர்யம் அபீஸீனிய ஹிஜ்ரத்துக்கு முன்னர் இறங்கிய ஒரு ஸூரா. அபீஸீனிய மன்னனும் அதன் மக்களும் கிறிஸ்தவர்கள். ஹிஜ்ரத் மேற்கொள்ளும் முஸ்லிம்கள் அவர்களோடு உரையாடத்தக்க அம்சங்களை இந்த ஸூரா கொண்டிருந்தபோதும், ஸூராவின் மையக் கருத்து மார்க்க சிந்தனையை அடுத்தடுத்த பரம்பரையினருக்கு நகர்த்துதல் குறித்துப் பேசுகின்றது. அந்த வகையில் நாம் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொண்ட ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது பிரார்த்தனையும் அதனை அடுத்து கூறப்படும் நபிமார்களின் செய்தியும் முஸ்லிம் குடும்பங்களின் மகத்தான பணியாக அமைய வேண்டியது எது என்பதைப் போதிக்கின்றன.

நபி ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் பனூ இஸ்ராயீல் சமூகத்தில் தோன்றிய ஒரு நபியாவார். அவரது அழைப்புப் பணியின் இறுதித் தறுவாயில் தனது இரட்சகனிடம் முன்வைத்த முறையீட்டையே இங்கு காண்கின்றோம். அல்குர்ஆன் கூறும் பனூ இஸ்ராயீல் சமூகம் பற்றிய சிந்தனைப் பதிவுடனேயே நபி ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் சந்தித்த பனூ இஸ்ரவேலர்களையும் நோக்க வேண்டும்.

அல்லாஹ்வின் ஓர் உயர்ந்த அடியார் தனது இரட்சகனிடம் முறையிடும் விதம் அலாதியானது, வித்தியாசமானது... உணர்வுபூர்வமானது... ஞானமிக்கது. தான் தள்ளாடும் வயதை அடைந்த போது இம்மகத்தான நுபுவ்வத்தின் வாரிசுகளாக யார் அமையப் போகிறார்கள், மீராஸுந் நுபுவ்வாவை சுமக்கத் தகுதியானவர் என்னைச் சூழ யார் இருக்கிறார், எனக்குப் பின்னால் இந்த சமூகத்தை அல்லாஹ்வின்பால் வழி காட்டி அவர்களை நெறிப்படுத்தி அழைத்துச் செல்ல பொருத்தமானவர்களைக் காணவில்லையே என்ற கவலைகள் அலையலையாய் நபி ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் உள்ளத்தில் தோன்றுகின்றன.

அப்போது மனிதர்களின் பார்வையிலிருந்து தூரமாகி பணிவுற்ற நிலையில், தாழ்ந்த குரலில் எவ்விதமான இடைத்தரகு நிலைகளுமின்றி பிரார்த்திக்கின்றார்கள். நிச்சயமாக அல்லாஹ் தனது அடியார்கள் பிரார்த்திக்காமலேயே அவர்களைப் பார்ப்பவனாக, கேட்பவனாக, அவர்களது உள்ளத்து உணர்வுகளை, அசைவுகளை அவதானிப்பவனாக இருக்கின்றான். இருந்தபோதும் தனக்கு ஏற்பட்ட அனர்த்தத்தை, கஷ்டத்தை, தேவையை தனது இரட்சகனிடம் அழகிய, மெல்லிய வார்த்தைகளில் முன்வைக்கும்போது அமைதியும் நம்பிக்கையொலியும் பிரலாபிக்கத் துவங்குகின்றன.

**பிள்ளைப் பேறுக்கான எவ்விதமான பௌதிக சாத்தியப்பாடு அற்ற நிலையிலும் எலும்புகள் பலவீனமடைந்து தலையும் நரைத்து ஒட்டுமொத்த உடல் முழுவதுமே பலவீனம் அடைந்து தள்ளாடி நிற்கும் வேளையிலும்கூட தனது நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கின்றார்கள். இந்த நிலைப்பாடு தனது அந்தஸ்தைப் பாதுகாப்பதற்கான, தனது சொத்துக்களை பராமரிப்பதற்கான, தனது இரத்த உறவுகளைக் கட்டிக்காப்பதற்கானதுமல்ல.**

நபி ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் 'பதானத்' எனும் மதிநுட்பமும் விவேகமும் வியூகம் வகுக்கும் திறனும் தனது சூழலை மிகத் துல்லியமாக எடைபோடும் திராணியும் மிக்கவர்களாக இருந்தார்கள் என்பதையும் பொதுவான பௌதிக விதிகளுக்கு அப்பாலும் அல்லாஹ் செய்து காட்டுவான் என்ற அல்லாஹ்வைப் பற்றிய ஆழ்ந்த நம்பிக்கையின் வெளிப்பாட்டையும் இப்பிரார்த்தனை வரிகளில் அவதானிக்கின்றோம்.

'எனக்குப் பின்னால் இந்த சமூகத்தை வழிநடத்த ஒரு புத்தம் புதிய மனிதர் வேண்டும் என்ற முடிவுக்கு அவர் வருகிறார். அத்தகைய ஆளுமைகள் அப்போது இருக்கவில்லை என்ற காரணத்தினாலேயே அவர் அந்த முடிவுக்கு வந்திருக்க வேண்டும். இதன் மூலம் ஒரு நபியின் செயல் தளத்தில் கூட புதிய தலைமைகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது என்ற உண்மையை உணரக்கூடியதாக உள்ளதோடு, நவீன முஸ்லிம் சமூகங்களும் இவ்வாறான நிலைகளைச் சந்திக்கும் என்ற யதார்த்தத்தை விளங்கிக் கொள்ள வேண்டும்.

"என் எலும்புகள் பலவீனமடைந்து என் தலையும் நரைத்து விட்டது. என் மனைவியும் பிள்ளைப் பேறற்றவளாகி இருக்கின்றாள். இருந்தபோதும் எனக்கோர் வாரிசைத் தருவாயாக!"

நபி ஸகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் ஆழ்ந்த ஞானத்தின் இறுதித் தீர்மானம் இது. இது குடும்ப, கோத்திர அந்தஸ்தின் வெளிப்பாடல்ல. இந்த மார்க்கம் பற்றிய ஆழ்ந்த அறிவும் மார்க்கத்தின் மீது கொண்ட வரையறையற்ற நேசமும் தன்னைச் சூழ உள்ளவர்கள் பற்றிய துல்லியமான எடை போடுதலின் நாகரிகமிக்க வார்த்தைகளும்தான் இவை.

பிள்ளைப் பேறுக்கான எவ்விதமான பௌதிக சாத்தியப்பாடு அற்ற நிலையிலும் எலும்புகள் பலவீனமடைந்து தலையும் நரைத்து ஒட்டுமொத்த உடல் முழுவதுமே பலவீனம் அடைந்து தள்ளாடி நிற்கும் வேளையிலும்கூட தனது நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கின்றார்கள். இந்த நிலைப்பாடு தனது அந்தஸ்தைப் பாதுகாப்பதற்கான, தனது சொத்துக்களை பராமரிப்பதற்கான, தனது இரத்த உறவுகளைக் கட்டிக்காப்பதற்கானதுமல்ல. மாறாக, சர்வ உலகங்களின் இரட்சகனாகிய அல்லாஹ்வைத் தூய்மைப்படுத்தி அவனது கட்டளைகளுக்கு வழிப்பட்டு வாழும் உத்தமமான நிலையை நிர்வகிப்பதற்கே ஆகும்.

தனது பிரார்த்தனைகளுக்கு எப்போதும் விடையளித்து தன்னை கண்ணியப்படுத்திய எனது இரட்சகன் இப்போதும் விடையளிப்பான் என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன் தான் கிழடாகி தனது மனைவி மலடாகி நின்ற நிலையிலும் தனக்கொரு வாரிசை தன்னிலிருந்தே தருவது தனது இரட்சகனுக்கு ஒரு பெரிய விடயமல்ல என்ற ஆழ்ந்த ஈமானுடன் முறையிடுகின்றார்கள். அப்போது அல்லாஹ் நபி யஹ்யா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை வாரிசாகக் கொடுத்தான். அவர் தௌஹீதின், அகீதாவின், நுபுவ்வத்தின் பாரம்பரியத்தை முன்னெடுத்துச் சென்றார்.

ஒரு குடும்பத் தலைவரின் கனவாக, ஆசையாக, கவலையாக எது இருக்க வேண்டும் என்பதையும் ஒரு குடும்பம் தமது இளைய சந்ததியினரை எதனை நோக்கி வழிநடத்த வேண்டும் என்பதையும் இப்பிரார்த்தனையின் வரிகள் வெளிச்சமிட்டுக் காட்டி நிற்கின்றன.

தப்ஸீர் ஆசிரியர் வஹ்பதுஸ் ஸுஹைலி அவர்கள், "குடும்பம் என்பது சமூகத்தின் வேர். அதனால்தான் சமூகம் நெய்யப்படுகிறது. அது சீரானால் சமூகம் சீராகும். அது நெறிபிறழ்ந்தால் சமூகம் அழிந்து போய்விடும். சமூக வாழ்வுக்காக அல்லாஹ்வால் வழங்கப்பட்ட வாழ்வொழுங்கு (ஹலால், ஹராம், ஆதாப், அஹ்காம்)க்கான அடிப்படைகள் ஆகும். குடும்ப வாழ்விலிருந்தே ஆரம்பமாகி நீண்டு செல்கிறது. அங்கிருந்தே இஸ்லாமிய நாகரிகம் தோற்றம் பெறுகிறது" எனக் குறிப்பிடுகிறார்கள்.

## குடும்ப வாழ்வின் நோக்கமும் கடமைகளும்

குடும்ப வாழ்வு இறையருள் நிறைந்த அன்பும் அமைதியும் ஆரோக்கியமும் அறிவும் நிறையப் பெற்றதாக இருக்க வேண்டும். அப்படியாயின், குடும்ப வாழ்வுக்கான நோக்கமும் கடமைகளும் மிகத் தெளிவாக புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

1. அல்லாஹ்வுக்கு எந்நிலையிலும் இணைகற்பிக்காத ஏகத்துவவாதிகளைக் கொண்ட, அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு அவனுக்கு இபாதத் செய்து வாழும் மனிதர்களைக் கொண்ட குடும்பமாக இருத்தல்.

2. வெளிப்படையான பொழுதிலும் மறைவான பொழுதிலும் அல்லாஹ் அவதானித்துக் கொண்டிருக்கின்றான். என் சிந்தனையில் ஹராம்களிலிருந்தும் பாவங்களிலிருந்தும் தூரமாகி நிற்கும் தக்வா நிறைந்த அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பமாக இருத்தல்.

3. அறிவும் ஆற்றலும் அனுபவமும் பெற்ற பிள்ளைகளை உருவாக்குதல். இதன் மூலம் தமது சொந்த விவகாரங்களில் வெற்றியாளர்களாக, எதிரிகளை வெற்றி கொள்ளத்தக்க அறிவுப் பலமும் உடல் பலமும் மிக்கவர்களாக இருத்தல்.

4. பெற்றோருக்கு, அயலவர்களுக்கு, இரத்த உறவினருக்கு, முஸ்லிம்களுக்கு, ஏனைய மனிதர்களுக்கு நிறைவேற்ற வேண்டிய உரிமைகளை விளங்கி அதற்குரிய மனப்பாங்கைப் பெற்று நடைமுறைப்படுத்தும் திறனை பெற்றிருக்கச் செய்தல்.


5. அவர்களது உடையில், நடையில், பேச்சில், பொழுதுபோக்கில், கற்றலில் பண்பாட்டு விழுமியங்கள் உருவாகி அது வளர்ந்து செல்லுதல்.

6. அல்லாஹ்வின் திருப்தியை எதிர்பார்த்தவர்களாக முஸ்லிம்களினதும் முஸ்லிம் அல்லாதவர்களினதும் விவகாரங்களில் பங்குகொள்ளும் ஆர்வத்தையும் திறமையையும் பெற்றிருத்தல்.

7. ஹைர உம்மத்துக்கான (தலைமைத்துவ, கடமைசார்) சிறப்பங்கத்தவர்களை உருவாக்கும் இடங்களாக குடும்பங்கள் திகழ்தல்.

இவை போன்ற அடிப்படைகளையும் நோக்கங்களையும் குடும்ப நிறுவனங்கள் கொண்டிருக்க வேண்டும். அதற்குப் பின்னாலேயே பௌதிகத் தேவைகளும் உபரியான அம்சங்களும் திட்டமிடப்பட வேண்டும். அப்போதுதான் ஸூரா மர்யம் கூறும் அடுத்தடுத்த பரம்பரையினருக்கு மார்க்கத்தை நகர்த்துதல் என்ற மகத்தான பொறுப்பை கச்சிதமாக நிறைவேற்ற முடியும்.

# அரச அதிகாரிகளும் மோசடிகளும்




◆◆அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி), விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி, புத்தளம்

அப்துர் ரஹ்மான் இப்னு ஸஃத் அஸ்ஸாஇதி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அஸ்த் கோத்திரத்தைச் சேர்ந்த இப்னு லுத்பிய்யா என்றழைக்கப்படுகின்றவரை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஸகாத் வசூலித்து வருவதற்காக நியமித்தார்கள். ஸகாத் பொருட் களைச் சேகரித்துக் கொண்டு வந்த அவர் (மக்களை நோக்கி) இவை உங்களுக்குரியவை. இவை எனக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டவை எனக் கூறினார். உடனே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மிம்பரின்மீது ஏறி நின்று அல்லாஹ்வைப் புகழ்ந்து பின்வருமாறு கூறினார்கள்: அல்லாஹ் எனக்கு வழங்கிய பொறுப்பை நிறைவேற்ற உங்களில் ஒருவரை நான் நியமிக்கின்றேன். அப்பொறுப்பை நிறைவேற்றுவதற்காச் சென்று (ஸகாத் பொருட்களுடன்) திரும்பி வந்த அவர், இவை உங்களுக்குரியவை இவை எனக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டவைஎனக் கூறுகின்றார். அவர் உண்மை சொல்பவராக இருந்தால் அவருக்கான அன்பளிப்புப் பொருட்கள் அவரிடம் வந்து சேரும் அளவுக்கு அவர் அவரது தாய் தந்தையரின் வீட்டில் இருந்திருக்கலாமே! அல்லாஹ்வின் மீது ஆணையாக, உங்களில் ஒருவர் தனக்கு உரிமையில்லாத ஒன்றை அநியாயமாக அபகரித்துக் கொண்டால் அதனை சுமந்த நிலையில் (மறுமை நாளில்) அல்லாஹுத்தஆலாவை சந்திப்பார். எனவே, உங்களில் யாரும் (மோசடி செய்து அபகரித்துக் கொண்ட) ஒட்டகம், மாடு அல்லது ஆடு போன்றவை சப்தமிட்டு அலறிக் கத்திக் கொண்டு அவரை இனங்காட்டிக் கொடுக்கும் விதத்தில் அவற்றைச் சுமந்து கொண்டு அல்லாஹ்வை சந்திப்பதை நான் காணக் கூடாது. பின்னர் அண்ணலார் தனது வெள்ளை நிற அக்குள் தென்படக் கூடிய அளவுக்கு இரு கரங்களையும் உயர்த்தி அல்லாஹ்வே! நான் எத்திவைத்து விட்டேனா? என மூன்று முறை கேட்டார்கள். (புகாரி, முஸ்லிம்)

அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சமூகத் தலைவர். அவர்களது வாழ்நாளில் சமூக நீதிக்கான வலுவான அடித்தளம் ஒன்றை அவர்கள் இட்டார்கள். சமூக நீதி ஆட்டங்காணுகின்றபோது மனித உரிமை மீறல் பரவலாகின்றது. இத்தகைய ஆரோக் கியமற்ற நிலை பொதுவாக மக்களை ஆட்சி செய்கின்ற ஆட்சியாளர்கள், அதிகாரிகள், நிர்வாகிகள், உத்தியோகத்தர்கள் முதலானவர்களினால் தோற்றுவிக்கப்படுகின்றது. அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் மோசடி, ஊழல், துஷ்பிரயோகம், இலஞ்சம் போன்றவை இஸ்லாமிய சமூகத்தில் அன்றாட நிகழ்வாக மாறிவிடாமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கையை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் விடுக்கின்றார்கள்.

ஹதீஸின் ஆரம்பப் பகுதி அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்களிடம் குடிகொள்ள வாய்ப்புள்ள தீங்குகளை விவரிக்கின்றது. பொதுச் சேவையிலும் சமூக நலப் பணிகளிலும் அரச கருமங்களிலும் ஈடுபடுகின்றபோது பொதுவாக அரச அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் சுயநலம் மற்றும் இலாபகர நோக்குடன் செயலாற்ற விரும்புகின்றனர். நிர்வாக இயந்திரத்தை நேரடியாக இயக்குவிக்கின்ற பணி இவர்களிடமே ஒப்படைக்கப்படுகின்றது. குறிப்பாக, மக்களுக்குப் போய்ச் சேர வேண்டிய உரிமைகள் இவர்கள் மூலமாகவே பரிமாற்றம் செய்யப்படுகின்றன. இதன்போது தம்மிடம் வந்து குவியும் நிதி, நிவாரணப் பொருட்கள்

**அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் இன்னொரு வகையிலும் மோசடியில் ஈடுபடுவர். அதாவது நீதியான பங்கீட்டை மக்களுக்கு மத்தியில் மேற்கொள்ளாமல் பாகுபாடு காட்டுதல், தமக்குத் தேவைப்பட்டோருக்கு மட்டும் நியாயமான காரணங்கள் இன்றி அள்ளி வழங்குதல், ஏனையவர்களைப் புறந்தள்ளுதல், பாதிக்கப்படாதோருக்கு நிவாரணப் பொருட்கள் விநியோகித்தல் என்பன சாதாரணமாக நடைபெறுகின்ற பெருந்தவறுகளாகும்.**

**நிவாரணப் பொருட்களை மக்களுக்கு கிடைக்கச் செய்யாது ஒளித்து மறைத்து புதைத்து வைத்து சந்தர்ப்பம் வரும்போது விற்றுப் பணமாக்குவது ஹராமாகும். இது குறித்து அண்ணலார் எச்சரிக்கின்றார்கள்.**

தொடர்பில் இவர்களுக்கு தவறான சிந்தனை உருவாகின்றது. இத்தகைய சிந்தனை அன்று இப்னு லுத்பியா என்ற மனிதருக்கும் ஏற்பட்டது. வஹி இறங்குகின்ற காலப் பிரிவிலேயே இத்தகைய மோசமான சிந்தனை உருவானதென்றால், நாம் வாழுகின்ற காலப்பிரிவு குறித்து பெரிதாக சொல்ல வேண்டிய அவசியமில்லை.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மனித உரிமை மீறல் தொடர்பான சிந்தனைளுக்கு சாவு மணி அடித்தார்கள். அதற்காக இஸ்லாத்தின் மிக உயர்ந்த பிரசார சாதனமான மிம்பரைப் பயன்படுத்தினார்கள். மனித உரிமையை உத்தரவாதப்படுத்துவதற்கான பிரகடனம், பூட்டிய அறைக்குள் செய்யப்படலாகாது. மாறாக, அது மக்கள் மன்றத்தில் பகிரங்கமாக நடைபெறுதல் வேண்டும்.

அண்ணலார் நேரடியாக நின்று வசூலிக்க வேண்டிய ஸகாத்தை தனது பிரதிநிதி ஒருவர் மூலம் அமுலாக்க விரும்பினார்கள். ஆனால், அப்பிரதிநிதியோ அரச கருமத்தில் தனது சுய இலாப நோக்கை உட்புகுத்த விரும்பினார். இதனைப் பார்த்துக் கொண்டு அந்த ஆட்சியாளர் மௌனித்து நிற்கவில்லை. அவரது பிழையான கண்ணோட்டத்தை விமர்சித்து கண்டனக் கணைகளைத் தொடுத்தார்கள். அந்தக் கண்டனக் கணைகளில் நாகரிகம் இழையோடியிருந்தது. ஆனாலும், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவரை நேரடியாக விளித்துப் பேசாமல் யாரோ ஒருவர் அத்தவறை விட்டதைப் போல உரையாற்றினார்கள். முன்மாதிரி மிக்க இஸ்லாமிய அழைப்பாளனுக்கு அண்ணலாரின் ஆக்கபூர்வமான விமர்சனத்தில் அழகிய முன்னுதாரணம் உண்டு.

ஸகாத் பொருட்கள், நிவாரணப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள், நன்கொடைகள் முதலானவை மக்களுக்குரியவையாக இருக்கும் நிலையில், அவற்றைப் பங்கீடு செய்வதற்காக நியமிக்கப்பட்டவர் தந்திரோபாயமான முறையில் கையாடல் செய்வதற்கான நியாயங்களை முன்வைப்பது விசனிக்கத்தக்கது. "அவர் தாய், தந்தையரின் வீட்டில் இருந்திருக்கலாமே!" என்ற அண்ணலாரின் வார்த்தைப் பிரயோகத்தின் மூலம் அவர்களது கோபாவேசத்துடன் கூடிய முகபாவனையை இவ்விடயத்தில் காணமுடிகிறது.

அரச அதிகாரிகளினதும் உத்தியோகத்தர்களினதும் மோசடி பல்வேறு வகையில் அமையும். முதலாவதாக அவர்கள் பொதுச் சொத்துக்களை சட்ட அனுகூலங்களைப் பயன்படுத்தி அப்படியே அபகரித்து விழுங்கி விடலாம். இது நெருப்பைச் சாப்பிடுவதை நிகர்த்ததாகும். இதனையே அல்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது.

"நிச்சயமாக அநாதைகளின் சொத்தை அநியாயமாக விழுங்குகின்றவர்கள் தங்களது வயிறுகளுக்குள் நெருப்பையே விழுங்குகின்றார்கள். அவர்கள் சுட்டெரிக்கும் நரகத்துக்குள் புகுவார்கள்." (ஸூரா அந்நிஸா 10)

நிவாரணப் பொருட்களை மக்களுக்கு கிடைக்கச் செய்யாது ஒளித்து மறைத்து புதைத்து வைத்து சந்தர்ப்பம் வரும்போது விற்றுப் பணமாக்குவது ஹராமாகும். இது குறித்து அண்ணலார் எச்சரிக்கின்றார்கள்.

"உங்களில் ஒருவரை ஸகாத் வசூலித்து வருகின்ற ஒரு பொறுப்புக்காக நாம் நியமித்து பின்னர், அவர் சேகரித்து வந்த பொருட்களில் ஊசி அல்லது அதைவிட அற்பமான பொருளை எமக்குத் தராமல் மறைத்தால் மறுமை நாளில் அதனை சுமந்த நிலையில் மோசடிக்காரராக அவர் வருவார்" என நபியவர்கள் கூறியபோது அன்ஸார்களைச் சேர்ந்த கறுப்பு மனிதர் ஒருவர் எழுந்து நின்று -அவரை இன்றும் நான் பார்ப்பதைப்போல உள்ளது- "அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் எனக்கு வழங்கிய பொறுப்பை நான் உங்களிடம் ஒப்படைக்கின்றேன். அதை நீங்கள் என்னிடமிருந்து ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றார். "உமக்கு என்ன நேர்ந்தது?" என நபியவர்கள் கேட்டார்கள். அதற்கவர் "நீங்கள் இவ்வாறு இவ்வாறு கூறியதாக கேள்விப்பட்டேன். (என்னால் இப்பொறுப்பை நிறைவேற்ற முடியாது)" என்றார். அப்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இப்பொழுதும் கூறுகின்றேன் "ஸகாத் வசூலிப்பதற்காக நாம் யாரை நியமித்தோமோ அவர் தான் அறவிட்ட பொருட்கள் குறைவாக இருப்பினும் அதிகமாக இருப்பினும் (ஒளித்து மறைத்து விடாமல்) அனைத்தையும் அவர் கொண்டு வரட்டும். அதிலிருந்து அவருக்கு வழங்கப்படுவதை அவர் எடுத்துக் கொள்ளட்டும். எடுக்கக் கூடாது என தடுக்கப்படுவதை தவிர்ந்து கொள்ளட்டும்" எனக் கூறினார்கள். (முஸ்லிம்)

அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் இன்னொரு வகையிலும் மோசடியில் ஈடுபடுவர். அதாவது நீதியான பங்கீட்டை மக்களுக்கு மத்தியில் மேற்கொள்ளாமல் பாகுபாடு காட்டுதல், தமக்குத் தேவைப்பட்டோருக்கு மட்டும் நியாயமான காரணங்கள் இன்றி அள்ளி வழங்குதல், ஏனையவர்களைப் புறந்தள்ளுதல், பாதிக்கப்படாதோருக்கு நிவாரணப் பொருட்கள் விநியோகித்தல் என்பன சாதாரணமாக நடைபெறுகின்ற பெருந்தவறுகளாகும். இங்கு மனிதர்களது மானம், சுயமரியாதை, கௌரவம் என்பன மதிக்கப்படுவதில்லை. மாறாக அற்பமான அளவுகோல்களுக்கு முதன்மை ஸ்தானம் வழங்கப்படுகிறது. இது குறித்து மௌலானா அபுல் அஃலா மௌதூதி (ரஹ்மதுல்லாஹி) அவர்கள் இவ்வாறு கருத்துரைக்கின்றார்கள்.

மனித இனத்துக்கென்று தனியானதொரு சுய மாயரிதை உண்டு. அதனது வாழ்வியல் உரிமை, உடைமைகள், மானம், மாயரிதை, கொள் கைக் கோட்பாடு, பாதுகாப்பு முதலானவை தொடர்பில் எவ்வகையான அத்துமீறலும் நடைபெறுதல் கூடாது. இது தொர்பில் இஸ்லாமிய தேசத்துள் வாழ்கின்ற பூர்வீக் குடிகள், புதிதாகக் குடியேறியவர்கள், முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதோர் அனைவரும் சமமே. பசி, பட்டினியோடு வாழ்பவர்களுக்கு உணவளித்தல், உடுத்த ஆடையின்றி வாழ்பவர்களுக்கு ஆடை அணிவித்தல், விரட்டியடிக்கப்பட்டு நாடு கடந்து வந்தோருக்கு புகலிடம் வழங்குதல், நோயாளிகளுக்கு மருத்துவம் செய்தல் போன்றவை மனித உரிமைகளாகும். மேற்கூறப்பட்ட வகையற்ற மனிதர்கள் இஸ்லாமிய ஆட்சிக்கு எதிரான எதிரிச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் சரியே! இவ்விவகாரத்தில் இனம், மொழி, மதம், நிறம், தொழில் போன்ற வேறுபாடுகளை முன் நிறுத்தி மனிதர்களுக்கு மத்தியில் பாரபட்சம் காட்டுதல் கூடாது. (மின்ஹாஜுஸ் ஸாலிஹீன் பக்: 454)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பொது மக்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் இடையேயுள்ள உறவை வரட்டுச் சட்டங்கள் மற்றும் குற்றவியல் தண்டனைகள் மூலமாக நெறிப்படுத்த விரும்பவில்லை. மாறாக, மறுமையின் பயங்கர நிகழ்வுகளை உத்தியோகத்தர்களின் கண்முன் கொண்டு வருவதன் ஊடாக அச்சத்தை ஒழுங்குபடுத்தினார்கள். இதனையே ஹதீஸின் இறுதிப் பகுதி விளக்குகின்றது.

அக்கால அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் இவ்வுலகை மறுமையின் விளைநிலமாக கருதினார்கள். தங்களது அரச கருமங்களை இறை அவதானம் சுற்றி வளைத்திருக்கிறது என்பதை ஆழமாக உணர்ந்திருந்தார்கள். மனித உரிமை மீறலுக்கான மறு உலக தண்டனையை தங்களது அகக் கண்களால் பார்த்தார்கள். எனவே, அவர்கள் கண்விழித்து அழுது புலம்பி மன்றாடி பாவமன்னிப்புக் கோரி இராப் பொழுதைக் கழித்தார்கள். பகல் பொழுதை மக்கள் சேவைக்காகப் பயன்படுத்தினார்கள். அவர்களது மறு உலக நம்பிக்கை மக்களின் சேம நலனை முதன்மைப் படுத்துமாறு அவர்களை உந்தித் தள்ளியது. அவர்கள் மக்கள் தொடர்பாடல் விவகாரத்தில் உறுதியான தீர்மானத்திற்கு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தை உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்கள். "இந்தப் பஞ்சம் நீங்கிச் செல்லும்வரை அல்லாஹ்வின் மீது ஆணையாக இறைச் சியை, வெந்நெய்யை நான் உண்ண மாட்டேன்."

உமரின் உள்ளம், அவரது ஆளுமைப் பண்பு போன்றவை நமது நாட்டு அரச அதிகாரிகளை, உத்தியோகத்தர்களை ஆதிக்கம் செலுத்தாதவரை நிவாரணப் பொருட்களை ஒளித்து மறைத்து புதைத்து வைக்கும் படலம் தொடரத்தான் போகின்றது.

2005 ஏப்ரல் மாத அல்ஹஸனாத் இதழில் வெளியான ஹதீஸ் விளக்கம் காலத்தின் தேவை கருதி மீள்பிரசுரம் செய்யப்படுகின்றது.


புத்தளம் உடையார் வீதியில்

ஒரே நாளில் Accountant ஆக!

One Day Workshop

Computerized Accounting

கற்க இருக்கும் பாடநெறிகள்

1. MYOB : Sat 17 Aug, 9 am
2. QuickBooks : Sun 18 Aug, 9 am
3. ACCPAC : Sat 24 Aug, 9 am
4. Tally : Sun 25 Aug, 9 am

Syllabus:

1. Trial balance
2. Balance Sheet
3. Profit & Lost A/C
4. General Leger
5. Purchase
6. Sales, Stock
7. Payments
8. Receipts
9. Accrual A/C
10. General Expense
11. Bank Deposit
12. Customers, Vendors

அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
Commerce அறிவு தேவையில்லை.
ஆங்கில அறிவு தேவையில்லை.
வயதெல்லை கிடையாது.
Multimedia Projector கொண்ட வகுப்பறை.
A/C Class room.
மிகக்குறைந்த கட்டணம்.
11 வருடங்கள் அனுபவம் கொண்ட ஆசிரியர்.



Other Diplomas

JOB Training Program | Hardware Engineering | Computerized Accounting | Web Designing | Spoken English
Children Program | Mobile Phone Engineering | Video & Sound Editing | Internet & E mail | O/L ICT & Past Paper
Ms Office Application | AutoCAD Engineering | Visual Basic Programing | O/L English & Past Paper | A/L ICT, GIT & Past Paper
Graphic Designing | Network Engineering | Macromedia Flash Animation | A/L English & Past Paper | English for Grade 5 to 10

0716 22 85 80

Global
College of Computer Studies

43, Udayar Lane, Puttalam.
0322265832

# ஏன் தோற்றுப் போகின்றோம்?

முனைவர் பேராசிரியர் அப்துல் காதர் M.A., Ph.D.

**வேலைக்குத் தெரிவு செய்வதில் முகஸ்துதி, பரிந்துரை, பிரியம் ஆகியவற்றுக்கு இடமளிக்கக் கூடாது. "எந்தத் தலைவர் ஒரு பொறுப்பாளியை அல்லது நீதிபதியை பிரியத் தின் அடிப்படையில் நியமிப்பாரோ, அவரால் ஏற்படும் பாவத்தின் பகுதி இவரையே சாரும்.**

*உலகத்தில்* எவரும் எந்தத் தொழிலில், முயற்சியில் ஈடுபட்டாலும் தனது முயற்சியில், தொழிலில் வெற்றியைத் தான் விரும்புகின்றார்கள். ஆனால், முயற்சி செய்பவர்கள் அனைவரும் வெற்றியடைவதில்லை. பலரும் தோல்வியடைகின்றார்கள். தோல்விக்குக் காரணம் என்ன? முயற்சியில் வெற்றியடைய என்ன நிபந்தனைகள்?

நமது தொழிலில் அல்லது முயற்சியில் நாம் வெற்றியடைய பல நிபந்தனைகள் உள்ளன. அதில் முதலாவது, எந்தத் தொழிலுக்கு நாம் ஆள் தெரிவு செய்கின்றோமோ அந்தத் தொழிலைப் பற்றி முழு விபரங்களையும் நிபந்தனைகளையும் அறிதல், அந்தத் தொழில் விவரங்களும் நிபந்தனைகளும் அந்தத் தொழிலுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களிடத்தில் நிறைவாக உள்ளனவா என்று அறிந்து அப்படிப்பட்டவர்களை மட்டுமே வேலையில் அமர்த்துவது மிக அவசியமாகும். அல்லாஹ் தனது திருமறையில் நபி ஷுஐப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மகள் தனது தந்தையிடம் கூறுவதாக கீழ்வருமாறு கூறுகின்றான்:

*"அவ்விரு பெண்களில் ஒருவர் கூறினார்: " அருமைத் தந்தையே! நீங்கள் இவரைக் கூலிக்கு அமர்த்திக் கொள்ளுங்கள். நீங்கள் கூலிக்கு அமர்த்துபவர்களில் நிச்சயமாக இவர் மிகவும் மேலானவர், பலமுள்ளவர், நம்பிக்கையானவர்."*

*(ஸூரதுல் கஸஸ்: 26)*

இந்த வசனம் நாம் யாரையாவது பணியமர்த்தும்போது கவனிக்க வேண்டிய அடிப்படையான இரண்டு நிபந்தனைகளைக் கூறுகின்றது. எந்த வேலையாயினும் அது கையினால் ஆற்றக் கூடியதாக இருந்தாலும் சரி, அல்லது அறிவைக் கொண்டு (மூளையைக்) கொண்டு ஆற்றுவதாயினும் சரி, அவனுக்கு பலம், உடல் வலிமை, செயலாற்றும் திறன் (Physical Fitness) மிக அவசியம்.

அந்த வேலையை, பணியைக் குறைவின்றி நிறைவேற்றுவதற்கான உடல் வலிமை அவசியம். மற்றொரு மிக முக்கியமான நிபந்தனை அவர் நேர்மையானவராக, நம்பத் தகுந்தவராக (Trust Worthy) இருக்க வேண்டும். நம்பிக்கையாளனாக இல்லை என்றால் தொழில் திறமை, ஆற்றல் இருந்தாலும் வேலையில் குறைவு மட்டுமின்றி, நஷ்டமும் இழப்பும் ஏற்படும். நேர்மையும் நம்பகத்தன்மையும் அற்றவன் ஏமாற்றுதல், பித்தலாட்டம் செய்தல் ஆகியவற்றுக்கான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு நஷ்டத்தை, தீங்கை ஏற்படுத்தி விடுவான்.

அதே போல் அல்லாஹ் தனது திருமறையில் நபி யூஸுஃப் அவர்கள் அரசனிடம் கூறுவதை இவ்வாறு குறிப்பிடுகின்றான்:

*"இந்த பூமியில் களஞ்சியங்களுக்கு என்னை (அதிகாரியாய்) ஆக்கி விடுவீராக. நிச்சயமாக நான் அவற்றைப் பாதுகாக்க நன்கறிந்தவன்."* *(ஸூரா யூஸுஃப்:55)*

இங்கு 'பாதுகாத்தல்' என்பது நம்பிக்கை (Trust worthy) க்கு உட்பட்டது. 'இல்மு', 'அறிவு' என்பது செயல்திறனுக்கு உட்பட்டது. ஒரு வேலையைச் செயல் ஆற்றுதல் என்பது முதலில் அந்த வேலை பற்றிய அறிவைப் பெற்றிருத்தல்.

உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஆட்சியாளர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று ஆளுமைக்கான அடிப்படை விதிகளைக் கூறுகின்றார்கள். அவர்கள் தமது தோழர்களிடம், "ஆளுநராக நியமிக்க தகுதியான ஒருவரை எனக்குக் காண்பித்துக் கொடுங்கள்" என்றார். தோழர்கள், "யாரை விரும்புகின்றீர்கள்?" என்று கேட்டார்கள். "எவர் தமது கூட்டத்தில் அதன் தலைவராக (அமீராக) இல்லாமல், அதன் தலைவர் போல நடந்து கொள்வாரோ தனது கூட்டத்தாரின் தலைவராக இருந்தால், அவர்களின் சாதாரண மனிதர்களில் ஒருவராக நடந்து கொள்வாரோ அப்படிப்பட்டவரை விரும்புகின்றேன்" என்றார்.

அலி பின் அபீ தாலிப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நீதிபதிகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று கூறி தமது எகிப்திய ஆளுநரான அல்அஸ்தர் அல்நஸயி அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். அதில், நீதிபதி பொறுப்பை ஏற்றுக் கொள்ளக் கூடியவர் குடிமக்களில்

சிறந்தவராக இருக்க வேண்டும். நெருக்கடிகளின்போது கோபமடையாதவராக இருக்க வேண்டும்; தொடர்ச்சியாகத் தவறுகளில் மூழ்கியிருக்காமல் உண்மையை அறிந்ததும் தனது கருத்தை மாற்றிக் கொண்டு உண்மையின் பக்கம் திரும்பக் கூடியவராக இருக்க வேண்டும்; அவரின் ஆன்மாவானது பேராசையின் பக்கம் சாயக் கூடாது; பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதில் ஆழ்ந்த சிந்தனையுடையவராகவும் சந்தேகத்துக்குரியதை எடுத்துக் கொள்ளாமல், ஆதாரபூர்வமானதையே எடுத்துக் கொள்ளக் கூடியவராகவும் இருக்க வேண்டும் என எழுதியிருந்தார். இப்படிப்பட்ட தன்மையினர் குறைவே.

உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹிமஹுல்லாஹ்) நீதிபதியிடம் இருக்க வேண்டிய தன்மைகளைப் பற்றிக் குறிப்பிடும் அவரிடம் ஐந்து தன்மைகள் இருக்க வேண்டும் என்கின்றார். அவை:

1. முன்சென்றவற்றின் அறிவு, பேராசையின்மை, சகிப்புத்தன்மை, அறிஞர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுதல், அறிஞர்களும் சிந்தனையாளர்களும் கலந்தாலோசிக்கக் கூடிய தகுதியைப் பெற்றிருத்தல்.

2. எந்தத் துறையில் பணிபுரிவாரோ அதில் சிறப்பான அறிவாற்றலைப் பெற்றிருத்தல் அவசியம். ஒவ்வொரு துறையிலும் அதில் தன்னிகரில்லா உயர்வை, ஆற்றலை அடைந்தவர்கள் உண்டு. அவர்களிடமே மக்கள் அந்தத் துறையைப் பற்றி அறியச் செல்வார்கள். உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஒரு முறை மக்களிடையே உரையாற்றும்போது, அறிவைப் பற்றியும் அதை அடையும் அடிப்படை பற்றியும் கூறினார்கள்.

"மக்களே! குர்ஆனைப் பற்றிக் கேட்க விரும்புபவர்கள் உபை பின் கஅபிடம் செல்லட்டும். இஸ்லாமியக் கடமை பற்றிக் கேட்க விரும்புபவர்கள் ஸைத் பின் ஸாபிதிடம் சென்று கேட்கட்டும். சட்டங்களைப் பற்றி அறிய விரும்புபவர்கள் முஆத் பின் ஜபலிடம் சென்று வினவட்டும். செல்வத்தைப் பற்றி அறிய விரும்புபவர்கள் என்னிடம் வரட்டும். அல்லாஹ் என்னை அதற்குப் பொறுப்பாளியாக, பிரித்துக் கொடுக்கக் கூடியவனாக ஆக்கியுள்ளான்" என்று கூறினார்கள்.

மற்றொரு முறை உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், "அலி பின் அபீதாலிப் (ரழியல்லாஹு அன்ஹு) நம்மில் மிகவும் நீதமானவர்; உபை பின் கஅப் அவர்கள் நம்மில் அதிகம் குர்ஆனை ஓதக் கூடியவர். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிய ஹதீஸை அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்கள். என் உம்மத்தின் மீது அதிக இரக்கம் உடையவர் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு); எம் உம்மத்தில் அல்லாஹ்வின் உத்தரவை நிறைவேற்றுவதில் மிகவும் தீவிரமுடையவர் உமர் (ரலியல்லாஹு அன்ஹு); அதிக நாணயம் உடையவர் உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு); ஹலால், ஹராமைப் பற்றி அதிக இல்முடையவர் முஆத் பின் ஜபல் (ரழியல்லாஹு அன்ஹு); இஸ்லாத்தின் கடமைகள் பற்றி அதிகம் அறிந்தவர் ஸைத் பின் தாபித் (ரழியல்லாஹு அன்ஹு); என் உம்மத்தில் அதிகம் ஓதக் கூடியவர் உபை பின் கஅப். ஒவ்வொரு உம்மத்திற்கும் அதன் நம்பிக்கையாளர் உள்ளார். இந்த உம்மத்தின் நம்பிக்கையாளர் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலியல்லாஹு அன்ஹு)" என்று உரை நிகழ்த்தினார்கள். (ஜாமிஉத் திர்மிதி, முஸ்னத் அஹ்மத்)

மற்றொரு ஹதீஸில், "குர்ஆனை நான்கு பேர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளுங்கள். அப்துல்லாஹ் பின் மஸ்ஊத், உபை பின் கஅப், முஆத் பின் ஜபல், ஸாலிம் மவ்லா, அபூ ஹுதைபா" (ரழியல்லாஹு அன்ஹும்) என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

3. தகுதியும் பொருத்தமும் உடையவர்களைத் தெரிவு செய்தல்:

வேலைக்குத் தெரிவு செய்வதில் முகஸ்துதி, பரிந்துரை, பிரியம் ஆகியவற்றுக்கு இடமளிக்கக் கூடாது. "எந்தத் தலைவர் ஒரு பொறுப்பாளியை அல்லது நீதிபதியை பிரியத்தின் அடிப்படையில் நியமிப்பாரோ, அவரால் ஏற்படும் பாவத்தின் பகுதி இவரையே சாரும். எந்த வேலைக்கேனும் யாரையாவது நியமிக்கும் பொழுது, தெரிவு செய்யப்பட்டவர் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ள வேண்டும். பொதுநலனைக் கவனிக்க வேண்டும். சொந்த விருப்பம், சுய நலம் ஆகியவற்றைத் தூரமாக்க வேண்டும். யார் தீய விஷயத்திற்கு உதவி செய்வானோ அவனும் தீய காரியம் செய்பவனுடன் தீமையில் கூட்டாளி ஆகின்றான். தகுதியற்றவர்களிடம் பொருளை ஒப்படைப்பது உலகின் குழப்பத்திற்கு அடிகோலுதல் ஆகும். அந்தக் குழப்பத்தின் விளைவை அனைவரும் அறுவடை செய்வார்கள். அந்தக் கசப்பான பாத்திரத்திலிருந்து தாங்கள் செய்த செயலின் விளைவை அருந்துவார்கள்" என்று உமர் (ரழியல்லாஹு அன்ஹு) கூறினார்கள்.

தகுதியற்றவர்களிடம் பொருளை ஒப்படைப்பது உலகின் குழப்பத்திற்கு அடிகோலுதல் ஆகும். அந்தக் குழப்பத்தின் விளைவை அனைவரும் அறுவடை செய்வார்கள். அந்தக் கசப்பான பாத்திரத்திலிருந்து தாங்கள் செய்த செயலின் விளைவை அருந்துவார்கள்'' என்று உமர் (ரழி யல்லாஹு அன்ஹு) கூறினார்கள்.

அல்லாஹ் தனது திருமறையில், "எனினும் தீங்கு வந்து உங்களை

அடைவதெல்லாம், அது உங்கள் கைகள் சம்பாதித்ததால் தான்" (ஸூரா அர்ரூம்: 41) என்று கூறுகின்றான்.

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "யார் ஒரு கூட்டத்தினருக்குப் பொறுப்புதாரியாக ஒருவரை நியமிக்கின்றாரோ, அவரை விட அதிகத் தகுதி உடையவர் இருக்க, நிச்சயமாக அவ்வாறு நியமித்தவர் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்பிக்கையாளர் களையும் ஏமாற்றி விட்டார்" என்று கூறினார்கள்.

உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், "யார் முஸ்லிம்களுடைய காரியங்களில் ஒரு பணிக்கு ஒருவரைப் பொறுப்புதாரியாகத் தனக்கும் அவருக்கும் இடையே உள்ள உறவு மற்றும் பிரியம் அடிப்படையில் நியமித்தாரோ அவர் நிச்சயமாக அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்பிக்கையாளரையும் ஏமாற்றி விட்டார்" என்று கூறினார்கள். இப்னு தைமிய்யா (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் மேலே சொன்ன அந்த ஹதீஸின் விளக்கத்தைப் பின்வருமாறு கூறுகின்றார்கள்:

"ஒரு பொறுப்புதாரியின் கடமை ஒவ்வொரு விஷயத்திலும் வேலைக்கு ஆளைக் கண்டுபிடித்து நியமிப்பதாகும். அந்த வேலை பெரியதானாலும் சரி, சிறியதானாலும் சரியே!"

"நம்பிக்கை, பொறுப்பு வீணடிக்கப்பட்டது என்றால் உலக அழிவை எதிர்பார்த்திருங்கள்" என்று இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிய போது, "நம்பிக்கை அல்லது பொறுப்பை வீணடித்தல் என்றால் என்ன?" என்று தோழர்கள் வினவினார்கள். அதற்கு "தகுதியற்றவர்களிடத்தில் வேலையை ஒப்படைத்தால் உலக அழிவு நாளை எதிர்பாருங்கள்" என்று நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

இந்த நபிமொழியின் பொருள் என்னவெனில், வேலைக்கு, பொறுப்புமிக்க அதிக தகுதியுடையவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதாகும். உமர் (ரழியல்லாஹு அன்ஹு) ஆளுநர்களையும் பொறுப்பாளிகளையும் தெரிவு செய்யும்பொழுது ஆளுமைத் திறன் மற்றும் மார்க்கப்பற்று உடையவர்களை நியமித்து அவர்களின் நடவடிக்கைகளை மிகவும் ஊன்றிக் கவனிப்பார்கள். உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தமது மகன் அப்துல்லாஹ்வை எந்த ஆட்சிப் பொறுப்புகளிலும் அமர்த்தவில்லை. தமது மரணத் தறுவாயில்கூட தமது மகனை இஸ்லாமியப் பேரரசின் கலீஃபாவாக நியமிக்க மறுத்தது மட்டுமன்றி, கலீஃபாவைத் தெரிவுசெய்ய நியமித்த அறுவர் குழுவில்கூட அவரை நியமிக்கவில்லை.

பொறுப்பாளிகளை நியமிக்கும்பொழுது திறமை மற்றும் தகுதிக்குதான் முதலிடம் கொடுக்க வேண்டும். தனது பிரியத்தின் அடிப்படையில் அல்ல என்பதற்கு மிகப் பெரிய சான்று இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொடர்ச்சியாக நடந்த போருக்கு இஸ்லாத்தை ஏற்று மூன்று மாதங்கள் ஆன அம்ரு பின் ஆஸ் (ரழியல் லாஹு அன்ஹு) அவர்களை முஸ்லிம்களின் படைக்குத் தளபதியாக நியமித்ததாகும்.

அந்தப் படையில் இஸ்லாத்தை முன்பதாக ஏற்றுக் கொண்ட எத்தனையோ தோழர்கள் வீரர்களாக இருந்தார்கள். தம்மீதுள்ள அதிக அன்பின் காரணமாகவே அந்தப் பொறுப்பை தமக்குக் கொடுத்திருக்கின்றார்கள் என்று அம்ரு பின் ஆஸ் (ரழியல்லாஹு அன்ஹு) கருதி அதை உறுதி செய்ய இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் சென்றார்கள். ஆனால், அவர்களுக்கு அதிகம் பிரியமானோர், ஆஇஷா; பிறகு அபூ பக்ர்; பிறகு உமர்; அபூ உபைதா (ரழியல்லாஹு அன்ஹும்) ஆகியோர் என்பதை அறிந்து அதிர்ச்சியுற்றார். இந்தத் தோழர்கள் அனைவரும் அம்ரு பின் ஆஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் தலைமையிலான படையில் வீரர்களாகப் பணியாற்றினார்கள்.

ஒரு வேலைக்கு இருவர் போட்டியிடுகிறார்கள். ஒருவர் பெரிதும் நம்பிக்கைக்கு உயரிவர்; மற்றொருவர் அதிக பலனுள்ளவர் என்றால் அவர்களில் அந்தப் பொறுப்பு, அல்லது வேலை யார் அதிக பலனுள்ளவராக இருப்பாரோ, யார் வேலையில் குறைவான நஷ்டம் உண்டாக்கக் கூடியவராக இருப்பாரோ அவரை நியமிக்க வேண்டும். போர் நடத்துவதற்கு படையை நடத்திச் செல்வதற்கு வீரம் நிறைந்த பலமுள்ள மனிதர், அவரிடத்தில் பாவங்கள், தீமைகள் இருந்தாலும் நம்பத்தகுந்த பலவீனமானவரை விட முற்படுத்தப்படுவார்.

ஒரு வேலைக்கு இருவர் போட்டியிடுகிறார்கள். ஒருவர் பெரிதும் நம்பிக்கைக்கு உயரிவர்; மற்றொருவர் அதிக பலனுள்ளவர் என்றால் அவர்களில் அந்தப் பொறுப்பு, அல்லது வேலை யார் அதிக பலனுள்ளவராக இருப்பாரோ, யார் வேலையில் குறைவான நஷ்டம் உண்டாக்கக் கூடியவராக இருப்பாரோ அவரை நியமிக்க வேண்டும். போர் நடத்துவதற்கு படையை நடத்திச் செல்வதற்கு வீரம் நிறைந்த பலமுள்ள மனிதர், அவரிடத்தில் பாவங்கள், தீமைகள் இருந்தாலும் நம்பத்தகுந்த பலவீனமானவரை விட முற்படுத்தப்படுவார்.

ஆகவேதான் இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்), காலித் பின் வலீத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை அவர் இஸ்லாத்தை ஏற்றதிலிருந்து படைத் தளபதியாகப் பல முறை தொடர்ச்சியாக அனுப்பினார்கள். சில நேரங்களில் நபியவர்கள் வெறுக்கக் கூடிய செயல்களைக் கூட காலித் (ரழியல்லாஹு அன்ஹு) செய்திருக்கின்றார். ஒருமுறை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தமது இரு கைகளை வானத்தின் பக்கமாக உயர்த்தி, "யா அல்லாஹ் காலிதின் செயலிலிருந்து நான் உன்னிடத்தில் பொறுப்பு நீங்கிக் கொள்கிறேன்" என்றார்கள்.

ஆகவே, வேலைக்கு ஆட்களைத் தெரிவுசெய்யும் போது யார் மிகவும் பொருத்தமானவரோ அவரையே தேர்வு செய்ய வேண்டும்.

இப்னுல் கையிம் அல்ஜவ்ஸி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் தகுதியானவர்கள் யார் என்றால், "மக்களுக்கு யார் அதிக நன்மை பயப்பார்களோ அவர்களே" என்கிறார்கள். ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய நடைமுறையும் இவ்வாறுதான் இருந்தது. மிகச் சிறந்தவர்களாக இருப்பவர்களை விட மக்களுக்கு யார் அதிக நன்மை பயப்பார்களோ அவர்களைப் பொறுப்பாளிகளாக நியமித்தார்கள்.

இதற்கு மிகச் சிறந்த செயல்முறை எடுத்துக்காட்டு: அபாதர் அல்கிஃபாரி (ரழியல்லாஹு அன்ஹு) இறைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் சென்று "என்னை ஆளுநராக நியமிக்க மாட்டீர்களா?" என்றார். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) "யா அபூதர்! நீர் பலவீனமானவர். எதை நான் எனக்கு விரும்புகின்றேனோ அதையே உமக்கும் விரும்புகின்றேன். இது மிகப் பெரிய பொறுப்பாகும். மறுமை நாளில் அந்தப் பொறுப்பைச் சரியாக நிறைவேற்றாதவர்களுக்கு அது இழிவுக்கும் வருத்தத்திற்கும் காரணமாக ஆகிவிடும்" என்று கூறினார்கள்.

நபித் தோழர் அபூதர் கிஃபாரி அவர்களின் பரிசுத்தத் தன்மை, மார்க்கப்பற்று மீது யாருக்கும், சிறிதும் சந்தேகமில்லை. ஆனால், குறித்த பொறுப்பைச் சுமப்பதற்கான அடிப்படையான அம்சங்கள் அவரிடம் முழுமை பெறவில்லை. ஆகவே, அவர் அந்தப் பொறுப்பிற்கு மிகவும் தகுதியுடையவராக, பயனளிக்கக் கூடியவராக இல்லை.

அதுபோல் வேலையின் விவரத்தை வெளியிட்டு அவ்வேலையைச் செய்வதற்கு தான் தகுதியானவன் என்று கருதுபவர்கள் தன்னைப் பற்றி அறிமுகப்படுத்தி, அவர்களில் எவர் மிகத் தகுதியானவரோ அவரைத் தெரிவு செய்வது அனுமதிக்கப்பட்ட செயலாகும்.

இதற்கு ஆதாரமாக, இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உஹுத் போரின்போது ஒரு வாளைக் கையில் ஏந்தி, "யார்? இந்த வாளின் கடமையை நிறைவேற்றுபவர்?" என்று கேட்டபோது பலரும் முன்வந்தனர். அவர்களிடம் கொடுக்காமல் அபூ தஜானா முன்வந்தபொழுது அவரிடம் வாளைக் கொடுத்ததையும் அலி பின் அபீ தாலிப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தமது எகிப்தின் ஆளுநர் அல்அஸ்தர் அந்நஹயிக்கு பொறுப்புகளில், வேலையின் நிபந்தனைகளை நிறைவு செய்பவர்களையே நியமிக்குமாறு பணித்தமையும் எடுத்துக்காட்டலாம்.

**(இன்ஷா அல்லாஹ், இன்னும் மூன்று தன்மைகள் அடுத்த இதழில்...)**

நன்றி: சமரசம்


# இஸ்லாமிக் புக் ஹவுஸ்

## அருமையான நூல்களை அறிமுகம் செய்கிறது




120.00 | 250.00 | 350.00 | 135.00 | 250.00

150.00 | 250.00 | 150.00 | 100.00 | 300.00

**இஸ்லாமிக் புக் ஹவுஸ்**
77 தெமடகொட வீதி கொழும்பு- 09

எமது புத்தக விலைப்பட்டியலை பார்வையிட www.ibh.lk தொலைபேசி 011 2684851, 0112669197 பெக்ஸ்: 011 2688102

> “மக்கள் புரட்சி” எனும் போர்வையில் வைக்கப்பட்ட பொறி இஃ்வான்களுக்கு வைக்கப்பட்டதா? இல்லை! எகிப்து இராணுவம் ஜனநாயகத்திற்கு வைத்துள்ள ஆப்பே இது” என எகிப்தின் மூத்த சட்டவல்லுனரும் பேரறிஞருமான தாரிக் அல்பிஷ்ரி குறிப்பிட்டுள்ளார்.


தாரிகில் அல்பிஷ்ரி
பஹ்மி ஹுவைதி
ஹஸன் அஷ்ஷபீஃ
வாயில் கின்தீல்

# எகிப்து: யதார்த்தத்தின் துவக்கம்

ஏ. அப்துல் மலிக்

## யதார்த்தமும் தீர்வும்

“இருபத்தோராம் நூற்றாண்டில் பாரம்பரிய யுத்தங்களைவிட, கண்ணுக்குப் புலப்படாத உளவுத்துறை சார்ந்த போர்களே பிரபல்யம் பெற்றுள்ளன. இந்நிலையில், இறுதி விளைவுகள் இராணுவத்திற்கே பெரிதும் சார்பாக இருந்தால், இந்த விளைவுகளுக்கான முன் ஏற்பாடுகளையும் இராணுவமே இரகசியமாக முன்னகர்த்தியிருக்க வேண்டும்.”

இதுவரை உலகில் எழுந்த இராணுவப் புரட்சிகளை ஆழமாக நோக்கி, ஆராய்ந்து, அவற்றைப் பரிசோதனைக்கு உட்படுத்திய நிபுணர்கள் கூறும் உண்மை இது.

கடந்த ஜூன் 30இல் எகிப்தில் இடம்பெற்ற புரட்சிக்கு மேற்குறிப்பிட்ட உண்மையை படம்பிடித்துக் காட்ட மிகவும் பொருத்தமான உதாரணம். அன்று மில்லியன் கணக்கான மக்களல்லாவா ஒன்று கூடினர்! இதுவென்ன, இதை விடவும் பெரும் கூட்டத்தை ஒன்றுதிரட்டும் திறமை நவீன கால இராணுவ உளவுத் துறையினருக்கு உண்டு. குட்டை குழம்பி விட்டால், அதனை பூதாகரப்படுத்தி அறுவடை செய்து கொள்ளும் யதார்த்தத்தை உலக வல்லரசுகளின் உளவுத்துறைகள் நிரூபித்தே விட்டன.

“மக்கள் புரட்சி’ எனும் போர்வையில் வைக்கப்பட்ட பொறி இஃ்வான்களுக்கு வைக்கப்பட்டதா? இல்லை! எகிப்து இராணுவம் ஜனநாயகத்திற்கு வைத்துள்ள ஆப்பே இது” என எகிப்தின் மூத்த சட்டவல்லுனரும் பேரறிஞருமான தாரிக் அல்பிஷ்ரி குறிப்பிட்டுள்ளார்.

2011, ஜனவரி 25ம் திகதி அன்று ஹுஸ்னி முபாரக்கிற்கு எதிராக வெற்றிபெற்ற மக்கள் புரட்சிக்கும், ஜனநாயகரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி முஹம்மத் முர்ஸியை இராணுவக் காவலில் அடைத்து வைத்துள்ள ஜூன் 30 புரட்சிக்குமிடையிலான துல்லியமான ஓர் ஒப்பீட்டை முன்வைக்கிறார் அறிஞர் தாரிக் அல்பிஷ்ரி.

“2011, ஜனவரி 25ல் அனைத்து எகிப்தியரும் ஹுஸ்னி முபாரக்கை வீழ்த்த ஒன்றுகூடினர். சர்வதிகாரத்தைத் துரத்தி, ஜனநாயகத்தை நிலைநாட்ட எடுக்கப்பட்ட புரட்சியே இதுவாகும். ஆனால், ஜூன் 30ல் முர்ஸிக்கு எதிராக இடம்பெற்ற புரட்சியில் எகிப்து மக்களின் ஒரு குழுவே பங்குபற்றியது. இங்கு இராணுவம் இக்குழுவுடன் இணைந்து பக்கசார்பான நிலைப்பாட்டையே எடுத்துள்ளது. இராணுவம் ஏணைய எகிப்து மக்களைப் புறக்கணித்துள்ளது எனும் பாரிய வேறுபாடு இரு புரட்சிகளுக்குமிடையில் உள்ளது” என ‘அல்கியாஸ் மஅல் பாறிக்’ எனும் சட்ட ஒழுங்கில் தாரிக் அல்பிஷ்ரி படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

முர்ஸிக்கு எதிரானவர்கள் இராணுவத்திடம் ஆலோசனை கேட்கத் தொடங்கியுள்ளனர். ஆனால், இவர்கள் கடைசி வரை இராணுவத்தினரிடமே ஆலோசனை கேட்க வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது. முர்ஸிக்கு ஏற்பட்டகதி தமக்கும் வராது இருக்க வேண்டுமானால், மறைமுக இராணுவ ஆட்சிக்கு வழிகோலியே ஆக வேண்டும் எனும் யதார்த்

த்தை அல்பராதி, அம்ரு மூஸா, ஹம்தைன் ஸப்பாஹி போன்ற இராணுவ ஆர்வலர்கள் மனதில் பதித்திருக்க வேண்டும்.

புதிய ஜனநாயக ஒழுங்குகளில் வாக்காளர்கள் இரு குழுக்களாக பிரிவது ஒன்றும் புதிதல்ல. பெரும்பாலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை எகிப்தியர்கள் 'ஆம்' என வாக்களித்த அரசியல் யாப்பு முர்ஸி எதிர்ப்பாளர்களுக்குத் தேவையான 'மருந்தை'க் கொண்டுள்ளது. நடைபெற விருந்த பாராளுமன்றத் தேர்தலில் பாராளுமன்றம் தெரிவுசெய்யப்பட்டு, அரசாங்கம் அமைக்கப்பட்டிருந் தால் அன்று முதல் ஜனாதிபதி, அரசுக்கும் பாராளுமன்றத் திற்கும் கட்டுப்படும் முறை அமுலுக்கு வந்திருக்கும். அப்போது ஹுஸ்னி முபாரக் போன்று, பாராளுமன்றத்தை யும் அரசையும் விரலுக்குள் வைத்து ஆட்டும் பொம்மலாட் டத்தை புதிய அரசியல் யாப்பில் செய்யமுடியாது.

"முர்ஸி எதிர்ப்பாளர்கள், ஆறு மாதங்கள் பொறுமையைக் கடைப்பிடித்து, வாக்களிப்பு மூலம் பாராளுமன்றத்தையும் அரசாங்கத்தையும் கைப்பற்றியிருந்தால், முர்ஸியை தாம் நினைத்தவாறு ஆட்டுவித்திருக்கலாம்..." என தாரிக் அல் பிஷ்ரி புத்திஜீவிகளுக்கு பாடம் புகட்டும் வகையில் விளக் கியுள்ளார்.

சுமார் நாற்பது வருடங்களாக அரசியல்வாதிகளை அடிமைகளாக வைத்திருந்த இராணுவம், இப்புதிய அரசியல் யாப்பின்படி, மேற்குலக ஜனநாயக அரசுகளில் உள்ளது போன்று ஓர் அங்கம் மட்டுமேயாகும். "இராணுவமே எல்லாம்" எனும் நிலைவரம் பூச்சியத்துக்கு தள்ளிவிடப் பட்டுள்ளது. முர்ஸியை விட இந்த அரசியல் யாப்பே எகிப்து இராணுவத்திற்கு நெருக்கடிமிக்கது. எனவே, முர் ஸிக்கு எதிரான குழுவைத் தூண்டி அவரைப் பதவி கவிழ்த்து, இந்தப் புதிய அரசியல் யாப்புக்கும் துளிர்விட்ட ஜனநாய கத்திற்கும் ஜெனரல் அப்துல் பத்தாஹ் அஸ்ஸீஸி வேட்டு வைத்துள்ளார். நாட்டின் ஒவ்வொரு நிறுவனமும் மீண்டும் இராணுவமயப்படுத்தப்பட்டு வருவதை மூத்த பத்திரி கையாளர் பஹ்மி ஹுவைதி எடுத்துக்காட்டியுள்ளார்.

நவீன நூற்றாண்டில், பெரும் வர்த்தகர்கள் இராணுவ ஜெனரல்களே என்பதை ஹுஸ்னி முபாரக்கைச் சூழ்ந் திருந்த ஜெனரல்களின் சொத்து விபரங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. அஸீஸியும் ஹுஸ்னி முபாரக்கின் பராமரிப்பில் வளர்ந்த ஒரு பிள்ளைதான். முர்ஸியை பொம்மையாக வைத்து, தான் ஆட்சி நடத்தலாம் என அவர் தீட்டிய திட்டம் பலிக்கவில்லை. எகிப்து இராணு வத்தின் வலது கையான உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அத்லி மன்ஸூரை பேரளவில் வைத்து, அஸீஸி எகிப்தை ஆட்சி செய்து வருகிறார் எனும் தெளிவான செய்தியை 'அஷ்ஷுரூக்'கின் மூத்த பத்திரிகையாளர் வாயில் கின்தீல் சர்வதேசத்திற்கு எடுத்துக் கூறியுள்ளார்.

"அத்லி மன்ஸூர் ஜனாதிபதியாக உள்ள நிலையில், உலகத் தலைவர்களுடன் எந்த அதிகாரத்தில் அஸீஸி பேச்சுவார்த்தைகளை நடத்துகிறார்?" எனவும் அவர் கேள்வி எழுப்புகின்றார்.

ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களை, ஜனாதிபதி செய்ய வேண்டிய பணிகளை, ஜனாதிபதிக்கு கீழுள்ள இராணுவத் தளபதி மேற்கொள்வது, ஜனாதிபதி வெறும் பொம்மை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

### ஆட்சிக் கவிழ்ப்பு

இஃவான்கள் மாத்திரமல்ல, இராணுவத்தின் அரசியல் யாப்புக்கு முரணான இச்செயலைக் கண்டித்து வீதிக்கு இறங்கிய ஸப்வத் ஹிஜாஸி போன்ற இஸ்லாம் சார்பு நிலைப்பாடுகளைக் கொண்ட பலருக்கும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை இஸ்லாமிய தரப்பி லிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப் பட்டுள்ளனர். இவர்களும் எகிப்தியர்களே. இவர்களது கருத்துச் சுதந்திரத்துக்கு அஸ்ஸீஸி கொடுத்த உத்தரவாதம் எங்கே?

இஸ்லாமிய சார்பு 16 தொலைக்காட்சி சேவைகளை மூடியிருப்பதும் மாற்றுக் கருத்தை நசுக்குவதற்கே. "2011, ஜனவரி 25 மக்கள் புரட்சி கொண்டு வந்த அனைத்துவித மக்கள் சுதந்திரத்துக்கும் முடிவுகட்டும் இராணுவப் புரட்சியையே அஸ்ஸீஸி அறிமுகம் செய்துள்ளார்" என ஜோர்தான் பத்திரிகையாளர் இப்ராஹீம் அத்தைராவி சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஃவான்களே பிரச்சினைகளை ஏற்படுத்துகிறார்கள். அவர்களே வீதிகளில் இறங்கி வன்முறைகளில் ஈடுபடுகின்றனர் என அரச ஊடகமும் இராணுவ சார்பு ஊடகங்களும்



பொய்ப் பிரசாரங்களை முடுக்கி விட்டுள்ளன. 'அரசியல் இஸ்லாம்' என சத்தியத்தைக் கொச்சைப்படுத்தும் நோக் கில் முர்ஸி ஆதரவுக் குழுக்கள் மீது ஏராளமான பொய்க் குற்றங்களைச் சுமத்தும் இவர்களின் கபட நாடகத்தை அல்ஜஸீரா போன்ற நடுநிலையான ஊடகங்கள் வெளிக் கொணர்ந்தன. அல்ஜஸீராவின் எகிப்து பணிப்பாளர் அப் துல் பத்தாஹ் பாயித் கைதுசெய்யப்பட்டார். ஜனாதிபதி முர்ஸி பதவி விலக்கப்பட்ட இரவு, அல்ஜஸீராவின் முக்கிய ஊடகவியலாளர் நவ்ரான் ஸலாம் நடத்திக் கொண்டிருந்த நேரடி கலந்துரையாடலைக் கூட இராணுவம் புகுந்து இடை நிறுத்தியதை நாம் நேரடியாகவே பார்வையிட்டோம்.

முர்ஸிக்கு எதிராக இராணுவம் மேற்கொண்ட சதியைப் புகழ்ந்து பேசுவோரைத் தவிர, வேறு எவருமே ஊடகங்களில்

கருத்துத் தெரிவிக்க முடியாது; மாற்றுக் கருத்துக்கு அனுமதியே கிடையாது என சுதந்திரத்தை ஒடுக்கும் இப்புரட்சியை, இராணுவப் புரட்சி என்றே வர்ணிக்க வேண்டும் என அத்தைராவி வலியுறுத்துகிறார்.

முர்ஸி மீண்டும் பதவிக்கு வர வேண்டும் எனக் கோருவோர் இஃவான்கள் மாத்திரமே என்பது இராணுவம் கட்டிவிட்ட கதையாகும்.

30க்கும் மேற்பட்ட கட்சிகளும் இயக்கங்களும் இராணுவத் தலையீட்டுக்கு எதிராக எகிப்தின் பெரும் சதுக்கங்களில் தொடர்ந்தும் பல நாட்களாக ஆர்ப்பாட்டம் செய்து வருவதை சுதந்திர ஊடகங்கள் தொடர்ந்தும் உறுதிப்படுத்தி வருகின்றன.

"அமைதியான ஆர்ப்பாட்டமே" "அமைதியான ஆர்ப்பாட்டமே" என முர்ஸி ஆதரவுக் குழுக்கள் தெளிவாகவே உத்தரவாதம் வழங்கியும், இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள தற்போதைய அரசாங்கம் அவர்களை வேண்டுமென்றே வன்முறைக்கு இழுத்து குற்றவாளிகளாக்கி சிறைகளில் அடைக்க முயற்சி செய்வதையும் சர்வதேசம் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறது. முர்ஸி ஜனாதிபதியாக இருந்தபோது, கெய்ரோவின் 'இத்திஹாதிய்யா' ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் பல எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. முர்ஸி ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்கி அவர்களைத் தாக்குமாறு, ஜனாதிபதி பாதுகாப்புப் படையினருக்கு கட்டளையிடவில்லை.

ஆனால், ஜுலை எட்டாம் திகதி ஜனாதிபதி பாதுகாப்புப் படையினர் சுபஹ் தொழுது கொண்டிருந்த முர்ஸி ஆதரவாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை நியாயப்படுத்த சர்வதேச சமூகம் தயாரில்லை. முர்ஸி, ஜனாதிபதி பாதுகாப்புப் படையினரின் தலைமை அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என அறிந்த ஆதரவாளர்கள், அங்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்க ஒன்றுகூடியிருந்தனர். ஆனால், இராணுவத்தினரின் இப்பிரிவினர், அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் எண்பதுக்கு மேற்பட்டோர் ஷஹீதாகினர்.

மக்களை அடக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் எகிப்து இராணுவத்தின் இச்செயல்கள் நிரூபித்துள்ள நிலையில், முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்ட நிகழ்வு இராணுவ சதிப் புரட்சியே. பாசிசம் மீண்டும் எகிப்தினுள் நுழைந்துள்ளது என பஹ்மி ஹுவைதி வர்ணித்துள்ளார்.

## உண்மை லிபரல்வாதிகள்

அரபுலகிலும் முஸ்லிம் உலகிலும் யார் உண்மையான 'லிபரல்'வாதிகள் என மீள் வரைவிலக்கணம் செய்யவும் முர்ஸி ஆதரவுப் புரட்சி வழிகோலியுள்ளது. முஸ்லிம் நாட்டு லிபரலுக்கு மேற்கு கூறும் விளக்கம், சற்று மதுவருந்த வேண்டும்; நாய் வளர்க்க வேண்டும்; தமது பிள்ளைகள் மேற்கத்தைய ஆண்கள், பெண்கள் போன்று அரை குறை ஆடையில் நீச்சலடிக்க வேண்டும் என்பதுவே. சர்வதேச அணுசக்தி முகவரமைப்பின் முன்னாள் தலைவர் முஹம்மத் அல்பராதியை மேற்கு இந்த அளவுகோலின் அடிப்படையிலேயே 'லிபரல்'வாதி எனக் கூறுகிறது. இதுவல்ல 'லிபரல்' என்பதை விளக்கும் பத்திரிகையாளர் வாயில் கின்தில் அதற்கு தகுந்த விளக்கமளித்துள்ளார்.

லிபரல் என்றால் சத்தியத்தை பேசுதலும் பொய்யிலிருந்து தவிர்ந்திருத்தலுமாகும். கடந்த ஜூன் 08ம் திகதி அதிகாலையில், தொழுகையில் ஈடுபட்டிருந்தோர் மீது இராணுவமே துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. அதில் எண்பதுக்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர் என்பதை தைரியமாகக் கூறிய இமாமே உண்மையான லிபரல்வாதி என வாயில் கின்தில் அடையாளப்படுத்தியுள்ளார்.

இராணுவமும் அரசு தொலைக்காட்சியும் ஆர்ப்பாட்டக்காரர்களே தீவிரவாதிகள் என பொய்க்கு மேல் பொய்யைக் கூறும் நிலைமையில், காயப்பட்ட பலரின் சாட்சியங்களை ஆதாரமாகக் கொண்டு இவ்வாறு அப்பட்டமாகப் பொய் கூறாதீர்கள் என உரக்கக் கூவிய இமாம் பேராசிரியர் ஹஸன் மஹ்மூத் அப்துல் லதீப் ஷாபிஈ ஆவார். உலக அரபு மொழி சம்மேளனத்தின் தலைவரும் அல்அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் உதவித் தலைவராகக் கடமை புரியுபவரும் எண்பத்து மூன்று வயதுடையவருமான இவர், இராணுவத்தினரின் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையால், யதார்த்தமான இணக்கப்பாட்டை எகிப்தியர் மத்தியில் ஏற்படுத்துவது தோல்வி கண்டுள்ளது எனக் கூறியுள்ளார்.

ஸஹீஹ் புஹாரிக்கு விளக்கம் எழுதிய இமாம் இப்னு ஹஜர் அல்அஸ்கலானி அமர்ந்து போதனை நடத்திய மிம்பரில் அமர்ந்து பாடங்களை நடத்திவரும் இமாம் அவர்கள், 2011 ஜனவரி 25 புரட்சி மாற்றப்படக் கூடாது. ஹுஸ்னி முபாரக்கை வீழ்த்திய இப்புரட்சியின் விளைவுகளை, புரட்சியில் சம்பந்தப்படாதவர்கள் மேற்கிக்கு மாத்திரம் சேவை புரியும் திசைக்கு நகர்த்திச் சென்று விடக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

எகிப்தின் புத்திஜீவிகள் அனைவரிடமும் இந்த அச்சம் காணப்படுகிறது. 20ம் நூற்றாண்டில் இஸ்லாமியக் கொடியின் கீழ் போராடிய தலைவர்களே அரபுலகிலிருந்து காலனித்துவத்தை விரட்டினர். ஆனால், அவர்கள் கொண்டு வந்த சுதந்திரத்தை மேற்கு சார்பானவர்கள், மேற்குக்கு பணிபுரியும் திசையிலேயே கடத்திச் சென்றனர். முர்ஸியும் தனது ஆட்சியின்போது, இது விடயத்தில் மிகக் கவனமாக செயற்பட்டமை அவரை ஆட்சியிலிந்து வீழ்த்த வழிகோலியிருக்கலாம். முர்ஸிக்கு எதிரான அல்பராதி, அம்ரு மூஸா மற்றும் ஹம்தைன் ஸப்பாஹி ஆகியோர் மேற்கு கூறும் லிபரல் சிந்தனை கொண்டவர்கள். இவர்களும் எப்படியும் ஜனவரி புரட்சியை மேற்கு நோக்கி கடத்திச் செல்லலாம்; இஸ்ரேலுக்கு சேவை புரிய திணிப்புக்களை ஏற்படுத்தலாம் எனும் அச்சம் இன்னும் கல்விமான்கள் மத்தியில் நிலவுகின்றது.

முர்ஸி கவிழ்க்கப்பட முன்னர் அமெரிக்க, ஐரோப்பிய தூதரகங்கள், பராதியை பிரதமராக நியமிக்க பெரும் அழுத்தம் கொடுத்துள்ளன. ஈராக்கில், அணுகுண்டு இல்லை

எனத் தெரிந்தும் அமெரிக்கா ஈராக்கை தாக்கியபோது, சர்வதேச அணுசக்தி முகவரமைப்பின் முன்னாள் தலைவர் அல்பராதி பார்த்துக் கொண்டுதானே இருந்தார்!

"பராதிக்காக கொடுக்கப்படும் அழுத்தத்தில் ஓர் இரகசியம் உண்டு" என ஷுறூக் பத்திரிகை எழுத்தாளர் அஹமத் மன்ஸூர் ஐயத்தைத் தோற்றுவிதத்துள்ளார்.

**ஜனநாயகத்திற்கு சோதனை**

ஹுஸ்னி முபாரக்கின் வீழ்ச்சியின் பின்னரான பாராளுமன்றத் தேர்தல்களில் இஃவான்களும் இஸ்லாமியக் கட்சிகளும் வெற்றிபெற்றன. சில மாதங்களில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. ஜனாதிபதி தேர்தலில் முர்ஸி வெற்றி பெற்றார். இப்போது அவரும் கவிழ்க்கப்பட்டுள்ளார். அவரது காலத்திலேயே, புதிய அரசியல் யாப்பின் மீது சர்வஜன வாக்கெடுப்பு பெரும்பாலும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அங்கீகரிக்கப்பட்டது. இப்போது அரசியல் யாப்பும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

அரபு நாடுகளுக்குள் ஜனநாயக பொறிமுறையை வர அனுமதிக்கக் கூடாது என பல சக்திகளும் சதிசெய்கின்றன எனும் கருத்து மீண்டும் பலம்பெறத் தொடங்கியுள்ளது. ஏனெனில், முர்ஸி பதவி கவிழ்ப்பில் ஜனநாயகப் பொறிமுறைகள் மீதே தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதேபோன்றுதான் 1992ல் அல்ஜீரியாவில் இஸ்லாமியக் கட்சிகள் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றன. ஆனால், அவர்கள் ஆட்சிக்கு வர அனுமதிக்கப்படவில்லை. அல்ஜீரியா தற்போது சீர்குலைந்து நாசமாகியுள்ளது. பலஸ்தீனில் 2006ல் இஸ்லாமிய குழுக்கள் ஜனநாயகத் தேர்தலில் வெற்றி பெற்றும், நீண்ட காலம் அவர்களின் தொடர அனுமதிக்கப்படவில்லை. இன்று எகிப்தில் அனைத்து ஜனநாயகப் பொறிமுறைகள் ஊடாகவும் இஸ்லாமியவாதிகள் வெற்றி பெற்றும், இராணுவத்தினூடாக அவர்களுக்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணை (Mandate) பறிக்கப்பட்டுள்ளது.

"இனியும், இஸ்லாமியக் கட்சிகள் ஜனநாயக வழிமுறையில் எப்படி நம்பிக்கை வைக்க முடியும்?" என அரபுலக இளைஞர்கள் கேள்வி தொடுக்க ஆரம்பித்துள்ளனர். அல்ஜீரிய அனுபவம் கசப்பானது. அங்கு இளைஞர்கள் ஆயுதம் தரித்து, அரசுக்கு எதிராகப் போராடி வருகின்றனர். அல்ஜீரியாவின் முன்னேற்றமே மறைந்து விட்டது. எகிப்திலும் அல்ஜீரிய அனுபவம் மீள வாய்ப்பு உண்டு என எச்சரிப்போரும் உள்ளனர். அரபுலகில் ஊழலில் ஈடுபடாதவர்கள் இஸ்லாமிய அணியினரே என்பதால், நீதியான தேர்தல்கள் இடம்பெற்றால், நிச்சயமாக அவர்களே வெற்றி பெறுவர் என்பதை உலகறியும். இதனை டோஹாவின் புரோக்கிங்ஸ் ஆய்வு நிலைய உறுப்பினர் ஷாதி ஹமீத் இவ்வாறு தெரிவித்துள்ளார்:

"இஸ்லாமிய கட்சிகளை ஆட்சிக்கு வர அனுமதிக்க கூடாது. வந்தாலும் எவ்வழியிலாவது துரத்திவிட வேண்டும் என்பதுவா யதார்த்தம்? அரபு மன்னராட்சிகளும் இஸ்ரேலும் அமெரிக்காவும் கூட்டாக அரபுலகில் ஜனநாயகம், சுதந்திரம் வருவதற்கு தடைகளை இட்டு வருகின்றன என்பதுவா யதார்த்தம்? நிச்சயம் அடுத்துவரும் ஆண்டுகள் இக்கேள்விகளுக்கு தெளிவான விடைகளைத் தரும்."

**முர்ஸி ஆதரவு ஆர்ப்பாட்டம்: சில பதிவுகள்**

• முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர், ஹுஸ்னி முபாரக்கினால் பாலூட்டி வளர்க்கப்பட்ட ஊடகங்கள் 'தொழில்சார் நீதி'யைக் கூட மறந்து, இஸ்லாமிய கட்சிகளுக்கு எதிராக காடைத்தனங்களை கட்டவிழ்த்து விட்டுள்ளன. ஏற்கனவே முர்ஸிக்கு எதிராக செயற்பட்ட ஹுஸ்னியின் நீதித்துறையும் இராணுவமும் ஊடக அடக்குமுறைக்கு முழு ஆதரவு கொடுத்து வருகின்றன.

• தொழுகை, நோன்பு, இப்தார், தராவீஹ் என்பவற்றுடன் ஆங்கிலம், ஜேர்மனி போன்ற மொழிகளிலும் முர்ஸி ஆதரவாளர்கள் செய்திகளை அனுப்பி வருவது இந்த ஆர்ப்பாட்ட மைதானங்களின் சிறப்பம்சமாகும்.

• உடற் பயிற்சிகள், உதைப் பந்தாட்டம் என்பன ஆர்ப்பாட்டக்காரர்களை விழிப்பாக வைத்துள்ளன.

• உலகின் மிகப் பாரிய ஆர்ப்பாட்ட கள வைத்திய சாலையும் சமையலறையும் சிறப்பாக இயங்குகின்றன. வெளி மாவட்ட மக்களும் பங்களிப்புக்களை வழங்கி வருகின்றனர்.

• திருமணங்கள் இடம்பெற்று வருவதுடன், நேரடி FM ஒலிபரப்பும் வெளிநாட்டு பத்திரிகைகளின் அறிக்கைகளும் வாசிக்கப்பட்டு வருகின்றன.

• பெண்கள், முதியவர்கள், இளைஞர்கள், குடும்பங்கள், சிறுவர்கள் என பல தரப்பும் கலந்து கொண்டுள்ளதுடன், ஏற்பாட்டு நடவடிக்கைகளில் பெண்களின் பங்களிப்பு பாராட்டத்தககதாக உள்ளது.

• தலை மூடாத பெண்மணிகள் மற்றும் இஸ்லாமியக் குழுக்களைச் சாராத ஜனநாயகவாதிகளும் ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டுள்ளனர்.

• தலைவர்கள் ஓடி ஒளியவில்லை. முன்னரங்கில் காணப்படுகின்றனர். "துப்பாக்கி சன்னத்தை விட அமைதியான ஆர்ப்பாட்டம் பலமானது" என அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

• மஸ்ஜிதுல் அக்ஸாவின் சுவரில் முர்ஸியின் போஸ்ரர் தொங்கவிடப்பட்டுள்ளமை இந்த ஆர்ப்பாட்டத்துக்கு இன்னும் வலுச் சேர்க்கிறது.

நீண்ட நாட்களாகத் தொடரும் இவ்ஆர்ப்பாட்ட அமர்வுகளில், இஸ்லாமிய அறிஞர்கள் (பெண்கள் உட்பட) மாத்திரமல்ல, வைத்தியர்கள் போன்ற பல்துறை சார்ந்தோரும் வழிகாட்டல்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# IBSல் இணைந்து உங்கள் தொழில் சார் கல்வித் தகைமைகளை வளர்த்துக் கொள்ள இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!!!

Awarded by:

abp

mihe

இஸ்லாமிய வங்கி மற்றும் காப்புறுதி துறைகளில் சர்வதேச தகைமைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

## Islamic Banking and Finance

Association of Business Practitioners (ABP - UK)
in Partnership with University of Gloucestershire (MIHE - UK)

போன்ற சர்வதேச தகைமை வழங்கும் நிறுவனங்களுடன் இணைந்து IBS CAMPUS இத்தகைமைகளை வழங்குகின்றது.

City & Guilds

AMI

TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION

ஆசிரியப் பயிற்சி நெறியில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழுடன் ஆசிரியராகும் உங்கள் கனவைப் பூர்த்தி செய்யுங்கள்!

- Training Skills
- Pre-School Education
- Montessori Method
- Child Psychology

சர்வதேச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்!

## Foundation in Business & IT

4 துறைகளில் 8 சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

- Diploma in Information Technology
- Diploma in Web Design
- Diploma in Graphic Design
- Diploma in Business Management
- Diploma in Accounting & Book Keeping
- Diploma in Hardware Engineering
- Diploma in English
- IELTS - Preparatory Course

## Network துறையில் நிபுணராக வேண்டுமா?

- Diploma in Hardware Engineering with Networking
- Network Administrator
- MCTS ( Microsoft Certified Technology Specialist)
- CCNA ( CISCO Certified Network Associate)

குறைந்த கட்டணத்தில் அங்கீகாரம் பெற்ற தகைமைகளைப் பெற்றுக் கொள்ள இன்றே எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

INSTITUTE OF BUSINESS STUDIES

IBS


# IBS CAMPUS

Head Office: #67, Kawdana Road, Dehiwala. Tel: 011 5522188 / 488

Kandy: # 89, Mulgampola Road, Kandy. Tel: 081 2232282/ 5636377

Hot Line: 077 4271384

- ஆஸிம் அலவி -




# ஷெய்க் கர்ளாவியின் தகிய்யாவுக்கு எதிரான கூற்றின் ஒளியில் சிரிய யுத்தம்!


எமது நேசத்துக்குரிய நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பேரரான ஹுஸைன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஒரு சிரேஷ்டமான முஜாஹித்; நேர்மையற்ற உமைய்ய ஆட்சியாளரான யஸீதுக்கு பைஅத் செய்ய மறுத்த துணிவும் நேர்மையும் நிரம்பிய மனிதர். இந்த உயரிய இமாம் நீதியையும் கண்ணியத்தையும் ஸ்தாபிப்பதற்காகவும் ஒடுக்கப்பட்ட மக்களின் இஸ்லாமிய உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் அநீதிக்கு எதிராகத் துணிந்து நின்று தன்னுயிரையே தியாகம் செய்த மகான்.

ஆனால், துரதிஷ்டவசமாக லெபனானின் ஹிஸ்புல்லாஹ் இயக்கம் இந்த மகானின் பெயரால் அன்னாரின் பணிக்கு நேரெதிரான கைங்கரியத்தில் இறங்கியுள்ளது. யஸீதைவிட பன்மடங்கு கொடூரமிக்க கொலையாளியான பஷர் அல்அஸதுடன் கூட்டிணைந்துள்ளது; ஒரு காட்டுமிராண்டியுடன் கைகோர்த்துள்ளது. ஒரு வழிதவறிய அரசியல் சித்தாந்தத்தை ஸ்தாபிக்கும் நோக்குடன் சிரிய மக்களை முப்பதாண்டுகளுக்கு மேலாக அடக்கியாண்டு வந்த அஸாத் குடும்பத்தைத் தக்கவைப்பதற்காக, வேறெந்த நியாயமுமின்றி யஸீதின் வலப்புறமும் இடப்புறமும் ஹிஸ்புல்லாஹ் அமர்ந்து கொண்டுள்ளது. அதன் தலைவர் ஹஸன் நஸ்ருல்லாஹ் "எமது அமைப்பு ஸுன்னித் தீவிரவாதிகளின் கொட்டத்தை அடக்கவே களமிறங்கியுள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

துவக்கத்திலிருந்தே ஹிஸ்புல்லாஹ் போராளிகள் காட்டுமிராண்டி அஸதுடன் கூட்டிணைந்து வன்முறையில் ஈடுபட்டிருந்தபோதும் அது இரகசியமாகவே வைக்கப்பட்டது. இருப்பினும், சிரியா சென்ற போராளிகளில் பெருந்தொகையினர் சவப்பெட்டிகளில் வீடு திரும்பியபோது, தென் லெபனானிய கிராமவாசிகள் தமது இளைஞர்களின் உயிர்த் தியாகத்துக்குப் பின்னாலுள்ள நியாயத்தை அழுத்திக் கேள்வி கேட்க ஆரம்பித்தபோது, "அவ்வாறில்லை! எதிர்பார்க்கப்பட்ட மஹ்தி தோன்றவுள்ளார். அவர் வெளிப்படுவதற்கு முன்பு ஹுஸைனைக் கொலை செய்தோரின் சந்ததியினருக்கு எதிரான புனிதப் போரிலேயே நாம் ஈடுபடுகிறோம்" என்ற கதை விடப்பட்டது.

சந்தர்ப்பத்துக்கு ஏற்ப கதை மாறி, "ஸுன்னித் தீவிரவாதிகள்" என்ற கதையுடன் ஹிஸ்புல்லாஹ்வின் கபட நாடகம் முழுமையாக வெளிச்சத்துக்கு வந்த நிலையில், சிரியப் பிரச்சினை மிக அசிங்கமான குழுவாத ரூபத்தை எடுத்துள்ளது. இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்ட அமைப்பு என்ற கௌரவப் பெயரை ஹிஸ்புல்லாஹ் அத்துடன் இழந்து விட்டது.

ஹிஸ்புல்லாஹ்வின் முன்னாள் செயலாளரும் அதன் ஸ்தாபக அங்கத்தவருமான ஷெய்க் ஸுப்ஹ் அத்துபைலியின் கருத்துப்படி, தனது முன்னாள் இயக்கம் ஈரானின் தங்குதடையில்லா ஒத்துழைப்புடனே செயற்பட்டு வருகிறது. இஸ்ரேலிய பிரதமர் புன்யாமீன் நெதன்யாஹு மற்றும் அதன் ஜனாதிபதி ஷம்ஊன் பெரஸ் ஆகியோர், அஸத் தனது



**முன்னணி ஸஹாபிகள் அனைவரையும் நயவஞ்சகர்களாகவும் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களாகவும் வர்ணிக்கும் இந்தக் கொள்கை, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை நடத்தை கெட்டவர்களால் சூழப்பட்ட ஒரு வராகவே சித்திரிக்கிறது.**

ஆட்சியில் தள்ளாடித் தள்ளாடியேனும் தொடர்ந்து இருப்பதை உறுதி செய்யுமாறு தமது கீழதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ள தகவல் இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. ஏனெனில், அஸத் குடும்பத்தின் ஆட்சியின் கீழ் தமது எல்லைகள் பாதுகாப்பாக இருக்கும் என்பது அவர்களது அனுபவ ரீதியான நம்பிக்கை. இது ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்ட பின் சில ஆய்வாளர்கள் சிரிய யுத்தத்தை 'இஸ்ரேலினதும் ஹிஸ்புல்லாஹ்வினதும் குழு நலன்களின் மையக்குவியல்' என வர்ணித்துள்ளனர்.

அண்மையில் டோஹாவில் நடைபெற்ற ஒரு மாநாட்டில், அஷ்ஷெய்க் யூஸுப் அல்கர்ழாவி அவர்கள், ஷீஆக்கள் திரும்பத் திரும்ப விடுக்கும் வெளித்தோற்றத்துக்கு அழகான, ஒற்றுமைக்கான அழைப்பு குறித்து தனது முற்றுமுழுதான அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வெளியிட்டுள்ளார்.

உண்மையில் அஷ்ஷெய்க் கர்ழாவி அவர்கள், முஸ்லிம் உலகில் நிலவும் பிளவை இயன்றளவு குறைக்கும் நோக்குடன் துணிவோடு முன்னின்று ஸுன்னி-ஷீஆ இணக்காப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டவர். இப்பணியில் அவர் உளத்தூய்மையுடன் ஈடுபட்டபோதும், அதனை உலகின் பல முன்னணி உலமாக்கள் எதிர்த்தனர்; அவரைக் குறை கூறினர். அவற்றையெல்லாம் பொருட்படுத்தாத ஷெய்க் கர்ளாவி அவர்கள் இப்போது தக்கிய்யா கோட்பாட்டை (தமது உண்மையான மத நம்பிக்கையைப் மறைத்துச் செயற்படல்) வாழ்க்கை வழியாகக் கொண்டுள்ளோரால் தான் வஞ்சிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுகிறார். ஷெய்க் கர்ளாவியைப் போன்று வேறு இஸ்லாமிய அறிஞர்கள், உலமாக்கள், இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் நம் போன்ற பொதுமக்களுக்கும் இந்த அனுபவத்தைப் பெற்றிருப்பர்.

இஸ்லாமிய இயக்கங்கள், குறிப்பாக அல்இஃவான் அல்முஸ்லிமூன், ஜமாஅத்தே இஸ்லாமி மற்றும் அவற்றின் சிந்தனை சார்ந்த அனைத்து இயக்கங்களும் ஈரானியப் புரட்சிக்குப் பிற்பட்ட காலத்தில் ஷீஆக்களை ஸுன்னி உலகுடன் நெருக்கத்துக்குக் கொண்டுவர முன்னணியில் நின்று பாடுபட்டன. ஷெய்க் கர்ழாவி அவர்கள் விளக்கியது போன்று, ஷீஆக்களின் வெளித்தோற்றத்தைப் பார்த்து, அவர்களின் ஒற்றுமைக்கான அழைப்பு நேர்மையானதெனக் கருதி ஒப்புதல் வழங்கின. இருப்பினும், இது விசாலமான ஸுன்னி உலகினுள் நுழைவதற்கான ஒருவகை தக்கியா என்ற விடயம் தெட்டத் தெளிவாக விளங்கியதும் அதிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டன.

அதேபோல், இஸ்லாமிய வரலாற்று நெடுகிலும் இத்தகைய கசப்பான அனுபவங்களை இஸ்லாமிய உம்மத் அனுபவித்துள்ளது. அப்போதெல்லாம் இவர்கள் பல்வேறு வேடங்கள் பூண்டு சமூகத்துக்குள் நுழைந்து ஆசை வார்த்தைகளையும் கவர்ச்சி மிக்க சுலோகங்களையும் காட்டி, வரலாற்றுப் புழுகுகளை புனைந்துரைத்து ஒரு கூட்டத்தினரை தமது கொள்கைக்கு மாற்றி எடுத்துச் சென்றுள்ளனர்.

உண்மையாகவே, இஸ்லாமிய உம்மத் பல்முனை தாக்குதல்களுக்கும் எல்லா வகையான சவால்களுக்கும் முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் இந்தப் பாரதூரமான வேளையில் இப்படியானதொரு விடயத்தை உரையாடலுக்கு எடுத்துள்ளமை கவலைக்குரியதே. இருப்பினும், இவர்களின் இரட்டை வேடத்தையும் அவர்களின் கொள்கையில் பொதிந்துள்ள தவறுகளையும் அம்பலப்படுத்த வேண்டிய கடமை எமக்குள்ளது. இதன் மூலம், சிரியா விவகாரத்தில் சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தறிவதற்கான சந்தர்ப்பத்தை மக்கள் பெற்றுக் கொள்வர்.

முன்னணி ஸஹாபிகள் மீது அவதூறு கூறல், தகிய்யாவை நடைமுறைப்படுத்தல், தற்போதைய குர்ஆன் திரிபுபடுத்தப்பட்டுள்ளது என வாதிடல் முதலான இன்னோரன்ன அம்சங்களை ஈமானின் அடிப்படைகளாக நம்பும் கொள்கை தன்னளவிலே திரிபுபட்ட ஒன்று. எதிர்பார்க்கப்பட்ட மஹ்தி தோன்றி, அபூ பக்ர், உமர் (ரழியல்லாஹு அன்ஹுமா) ஆகியோரது கப்ருகளைத் தோண்டி அவர்களது ஜனாஸாக்களை வெளியெடுத்து, அவர்களின் அசுத்தத்திலிருந்து நபியின் அடக்கஸ்தலத்தை சுத்தப்படுத்திய பிறகு அவ்விருவரும் அஹ்லுல் பைத் (நபியின் புனித குடும்பத்தினருக்கு) புரிந்த அநியாயத்துக்காக அவர்களை சிலுவையில் அறைந்து தண்டிப்பார் என்பது இந்த நம்பிக்கையின் ஓர் அடிப்படை.

அதேபோல், இமாம் ஹுஸைன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை ஸுன்னிகளே கொலை செய்தனர். எனவே, அதற்குப் பழிவாங்குவது ஹுஸைனை நேசிக்கும் ஒவ்வொருவர் மீதும் கடமையாகும். மேலும், நபித்துவத்தின் முத்திரைக்குப் பிறகு இமாமிய்யத் என்ற ஓர் அமைப்பு உள்ளது. அவ்வரிசையில் முதலாம் இமாம் அலி (ரழியல்லாஹு அன்ஹு) ஆவார். இறுதி இமாம் அநேகமாக் மஹ்தி ஆவார். நபிமார்களைப் போன்று அனைத்து இமாம்களும் மஃஸூம்கள் (பாவம் செய்யாதவர்கள்) ஆவர். அவர்கள் இறந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால அறிவுகளைப் பெற்றிருப்பதோடு அவர்கள் மரணிப்பதும் அவர்களின் விருப்பப்படியே. இமாமிய்யத்தில் நம்பிக்கை கொள்ளாத ஒருவன் முஸ்லிமல்ல என்பதும் இந்நம்பிக்கையின் பிரதான அடிப்படை.

ஒருவர் கபடமிக்க நயவஞ்சகனாக மாறுவதற்குரிய திறந்த அனுமதிப் பத்திரத்தை தக்கியா வழங்குகிறது. பொய்களையும் வஞ்சனையையும் பரப்புவதற்கும் அது உதவுகிறது. யூத பண்பாடு கட்டியெழுப்பப்பட்டுள்ள அடிப்படை விதியான நயவஞ்சகமும் தகிய்யாவும்

முற்றுமுழுதாக ஒரேவிதமான தன்மைகளையே கொண்டுள்ளன.

ஒருவர் ஸுன்னி அணிகளுக்குள் ஊடுருவி தன்னை ஒட்டுமொத்த ஸுன்னியாக காட்டிக் கொள்ளத் தேவையான திறனை தகிய்யா ஒருவருக்கு கொடுக்கிறது; தனி மனிதர்களுக்கும் குழுக்களுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்தவும் தனது சுய அடையாளத்தை மறைத்து வேடம் போடவும் தேவையான கபடதாரியாக அது ஒருவரை மாற்றுகிறது. ஒருவரை அதிக வினைத்திறன் மிக்க ஒற்றனாகவும் அது மாற்றுகிறது. இவை கற்பனைக் கதையல்ல. மாறாக, இஸ்லாமிய உலகு கடந்துவந்த இருண்ட வரலாற்று அனுபவங்களிலிருந்து கண்ட உண்மைகள். தகிய்யாவை பிரயோகிப்போர் யூத, மாஸுனிய இயக்கங்களுடன் கூட்டிணைந்து இஸ்லாமிய உம்மத்தை சீரழித்த நிகழ்வுகள் ஏராளமாக உள்ளன.

இந்தக் கொள்கையில் ஏராளமான குறைபாடுகள் உள்ளன. அது குர்ஆன்-ஸுன்னாவின் அடிப்படை விதிகளை விட பகுத்தறிவு ரீதியான தர்க்கத்திலேயே அதிகம் தங்கி நிற்கிறது. குர்ஆனிய போதனைகளுடன் முரண்படும் தர்க்கம் நிராகரிக்கப்படும். இந்தக் கொள்கையை ஒருவர் எந்தளவு ஆழமாக ஆராய்கிறாரோ அந்தளவு குழப்பத்துக்கு உட்படுவார். இக்கொள்கையின் அடிப்படை நம்பிக்கை விடயங்கள் முதஷாபிஹாத் (பல பொருட்கள் உடைய) குர்ஆனிய வசனங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஆனால், இஸ்லாத்தில் ஈமானின் அடிப்படைகள் அனைத்தும் 'முஹ்கமாத்' (நேரடியான, தெளிவான) வசனங்களைக் கொண்டு அமைந்துள்ளன.

இமாமிய்யத் என்பது நபித்துவத்தைப் போன்று மிக அடிப்படையான, ஈமானிய விதி என்றிருந்தால், நபித்துவத்தை முஹ்கமாத்களில் வலியுறுத்திய அல்லாஹ் ஏன் இமாமத்தை அவ்வாறு வலியுறுத்தத் தவறி விட்டான்? முன்னணி ஸஹாபிகள் அனைவரையும் நயவஞ்சகர்களாகவும் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களாகவும் வர்ணிக்கும் இந்தக் கொள்கை, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை நடத்தை கெட்டவர்களால் சூழப்பட்ட ஒருவராகவே சித்திரிக்கிறது.

'அகிலத்தாரின் அருட்கொடை' என குர்ஆன் வர்ணிக்கும் மனிதனின் வாழ்க்கைக் காலத்திலே அவரை மேற்படி குண்டர்களிடமிருந்து சுத்தப்படுத்தி அவரது நற்பண்புகள் உலகம் முழுவதும் பரவ அல்லாஹ் ஏன் வழி செய்யாதிருந்தான்? ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை நடத்தைகெட்ட பெண்ணாக 'தகிய்யா' குறை கூறுகிறது. முன் சென்ற சில நபிமார்களின் மனைவியரை இன்ன நபியின் மனைவி என பெயர் குறித்து பலமாகச் சாடிய குர்ஆன், நபித்துவத்தின் முத்திரையாகத் திகழும், பல பில்லியன் மனிதக் கூட்டத்தினர் கியாமத் நாள் வரை பின்பற்றவிருக்கும் இறுதி நபியின் மனைவியரில் இன்ன இன்னவர் நடத்தைகெட்டவர் எனக் குறித்துக் காட்ட தவறிவிட்டதா?

உண்மையாகவே இக் கொள்கையானது, சர்வ வல்லவன், அனைத்து ஞானமும் உடையோன், அனைத்திலும் ஆற்றல் மிக்கவன் ஆகிய அல்லாஹ்வின் பண்புகளை முற்றுமுழுதாக கேலி செய்கிறது. இக்கொள்கை ஆலிமுல் கைப் (மறைவானவற்றை அறிந்த) அல்லாஹ்வுடன் இமாம்களை பங்காளிகளாக, ஆக்குகிறது.

நபியைச் சூழவிருந்த நயவஞ்சகர்களையும் நடத்தை கெட்டவர்களையும் பற்றி எச்சரிக்க அல்குர்ஆன் மறந்துவிட்டதா எனக் கேள்வி எழுப்பினால், அல்குர்ஆன் திரிபு படுத்தப்பட்டுள்ளது என்ற பதிலைச் சொல்லி இந்த தகிய்யாவாதிகள் தப்பித்து விடுகின்றனர்.

பழிவாங்கலை ஊட்டி வளர்த்தல், சாபமிடுதல், புறம் பேசுதல், அவதூறு கூறல், வரலாற்று உண்மைகளைத் திரிபுபடுத்தல், அனைத்துக்கும் மேலாக குர்ஆன் திரிப்புபடுத்தப்பட்டுள்ளது என்ற படுபாதகமான குற்றச்சாட்டை விடுத்தல் (பார்க்க: மிர்ஸா ஹுஸைன் முஹம்மத் தகி அன்னவாரி அத்தப்ரீஸி அவர்களின் பஸ்லுல் ஹிதாப் பீ இஸ்பாதி தஹ்ரீபி கிதாப் ரப்பில் அர்பாப் எனும் நூல்போன்ற அம்சங்களை அடிப்படையாகக் கொண்டுள்ள ஒரு கொள்கை முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு இறக்கியருளப்பட்ட சத்திய மார்க்கமென ஒரு போதும் ஏற்க முடியாது.

ஹிஸ்புல்லாஹ்வின் கொள்கை பழிவாங்கும் வெறி மீது கட்டியெழுப்பப்பட்ட ஒன்று. இதனடிப்படையிலே பஷர் அல்அஸதுக்கு உதவி செய்வதை அது நியாயப்படுத்துகிறது. எமது அன்புக்குரிய ஹுஸைன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களைக் கொலைசெய்தோரின் சந்ததியரிடம் பழிவாங்குகிறோம் என்ற எவ்வித ஆதாரமும் நியாயமும் இல்லாத கோட்பாடு, அப்பாவிப் பொதுமக்களை கொலை செய்யவும் பெண்களை பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கவும் கிராமங்களை முற்றுமுழுதாக அழித்து நாசமாக்கி, அதன் குடிமக்களுக்கான உணவு விநியோகங்களைத் தடைசெய்து அவர்களைப் பட்டினி போடுவதற்குமான திறந்த அனுமதிப் பத்திரத்தைக் கொடுத்துள்ளது.

ஆதாரபூர்வமான வரலாற்றுத் தகவலின்படி, ஹுஸைன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை அவர்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தருவதாகவும் தோளோடு தோள் நின்று அநியாயத்துக்கு எதிராகப் போராடுவதாகவும் வாக்குறுதியளித்து அழைத்தார்களே, அவர்கள் இடைநடுவில் கைவிட்ட பிறகே கர்பலாவில் அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

தாம் ஸுன்னி தீவிரவாதிகளுடனே சிரியாவில் யுத்தம் புரிகிறோம் என்ற ஹஸன் நஸ்ருல்லாஹ்வின் புதிய கருத்தை மையமாகக் கொண்டு ஷெய்க் கர்ழாவி முதல் சஊதி அரேபிய, அல்அஸ்ஹர் ஆலிம்கள், பலமிக்க இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் உலமாக்கள், பொதுமக்கள் அனைவரும் முன்னொருபோதும் இல்லாதளவு முன்வந்து ஒன்றுதிரண்டு ஹிஸ்புல்லாஹ்வின் கொடூரமான செயலைக் கண்டித்துள்ளனர். அதன் விளைவுகளை ஹிஸ்புல்லாஹ்வும் அதனை மேலிருந்து இயக்குவோரும் நிச்சயம் அனுபவிப்பர்.

(53ஆம் பக்கம் பார்க்க)

**கதீஜா** (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை இழந்த கவலை நபிய வர்களை வருடங்களாக வாட்டி வதைத்துக் கொண்டிருந்த வேளையில் ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) கனவில் வந்து ஆஇஷாவைப் பட்டாடையில் காட்டி "உலகத்திலும் மறுமையிலும் இது உங்கள் மனைவி" என்று அண்ணலாருக்கு நற்செய்தி பகர்ந்தார். (அல்புகாரி, முஸ்லிம்)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் அனைத்து மனைவியர்களை விடவும் இளமையாக இருந்த ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) ஒன்பதாவது வயதில் நபியவர்களின்வீட்டில்வாழ ஆரம்பித்தார்.

மதீனாவில் மஸ்ஜிதுந் நபவியைச் சூழ பனூ நஜ்ஜார் கோத்திரத்துக்குச் சொந்தமான பகுதியில் பல அறைகள் நிர்மாணிக்கப் பட்டிருந்தன. அவற்றுள் மஸ்ஜிதின் கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த ஓர் அறையை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) தனக்கென ஒதுக்கிக் கொண்டார். அது ஆறு அடி அகலமாகவும் மண் சுவரைக் கொண்டதாகவும் அதன் கூரை சீலைகளாலும் மழை நீர் வீட்டுக்குள் சிந்தாவண்ணம் கூரையில் ஒரு போர்வை விரிக்கப் பட்டதாகவும் இருந்தது. வீட்டினுள் நின்ற நிலையில் இருக்கும் ஒருவரின் தலையைத் தொடுமளவுக்கு கூரையின் உயரம் அமைந்திருந்ததுடன் அந்த வீட்டுக்கு ஒரு கதவு மாத்திரமே இருந்தது. ஒரு பாய், மெத்தை, செடிகளின் வேர்கள் நிறைக்கப்பட்ட தலையணை, தோலினாலான ஒரு நீர்ப் பாத்திரம், பேரீச்சம் பழங்கள் வைப்பதற்கான ஒரு பீங்கான், நீர் அருந்த ஒரு கோப்பை முதலானவையே அவரது வீட்டுத் தளபாடங்கள்.

உலகச்செல்வங்கள், ஆடம்பரங்கள், சொகுசு வாழ்க்கை முதலான வற்றுக்கான எந்தவொரு அடையாளமும் அங்கிருக்கவில்லை. ஆனால், அந்தச் சிறிய அறை ஆஇஷாவின் வாழ்நாள் முழுவதும் வானவர்களால் சூழப்பட்டு ஆன்மிகப் பொக்கிஷங்களால் நிறைந்து அருள்பாலிக்கப்பட்டிருந்தது. நபியவர்களும் உலக ஆடம்பரங்களை விரும்பவில்லை. எளிமையாக வாழ்ந்து மறுமையிலும் ஏழைகளுடன் எழுப்பப்பட வேண்டும் என்றே விரும்பினார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனக்கும் தனது மனைவிமாருக்கும் அன்றாட வாழ்வை நடத்திச் செல்லப் போதுமான அளவிலான ஒரு வாழ்க்கைத் தரத்தை தேர்ந்தெடுத்தார்கள். அதற்கான காரணம், நபியவர்கள் மிகவும் வறுமையில் இருந்தார்கள் என்பதும் அல்ல. செல்வச் செழிப்புள்ள மிகப் பெரியதொரு நிலப்பரப்பு அவர்களது ஆட்சிக்குக் கீழ் வந்திருந்தது. என்றாலும், அவர்களது வீட்டில் ஒரு மாதத்துக்கு அடுப்பு எரியாமலும் கழிந்துள்ளது. மறு பக்கத்தில் தான தர்மங்கள், அன்பளிப்புக்கள் என்று வரும்போது வாரி வழங்கும் கொடை வள்ளலாகவும் அண்ணலார் திகழ்ந்துள்ளார்கள். சடரீதியான, உலக ஆடம்பரங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட பற்றற்ற ஒரு குடும்ப வாழ்வை அவர்கள் பெரிதும் விரும்பினார்கள். அது அவர்களது தெரிவே அல்லாமல், இஸ்லாத்தின் சட்டம் வேண்டி நிற்கும் ஓர் அம்சம் அல்ல. தமது தோழர்களும் அதே நிலையில் வாழ்க்கை வசதிகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் எவரையும் நிர்ப்பந்திக்கவும் இல்லை.

**முழு அரேபியத் தீபகற்பமும் இஸ் லாத்தின் அதிகாரத்துக்குக் கீழ் இருந்த வேளையில் தானியக் குவியல்களும் பெருந்தொகைப் பணமும் பொதுத் திறை சேரியில் வந்து நிறைந்தும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வபாத்தான தினத்தில் ஒரு நாளைக் குக்கூட போதுமான உணவு அவர்களின் வீட்டில் இருக்கவில்லை.**

■ பாத்திமா ஸைனப் ■

## எளிமை வாழ்வின் இலக்கணம்

# ஆஇஷா பின்த் அபீ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹா)

எல்லாப் பெண்களைப் போலவும் இயல்பான சுபாவங்களையும் விருப்பு வெறுப்புக்களையும் பெற்றிருந்த நபியவர்களின் மனைவியர் மதீனாவின் சூழல் மாற்றமடைந்து, முஸ்லிம்கள் போர்க் களங்களில் ஒன்றன் பின் ஒன்றாக வெற்றியீட்டி, அல்லாஹ்வின் அருளால் வறுமை நீங்கி செல்வச் செழிப்பு அதிகரிக்கவே தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துமாறு நபியவர்களிடம் வேண்டினார்கள். இது நபியவர்களுக்கு அசௌகரியத்தைக் கொடுத்தது. அவர்கள் இந்த வேண்டு கோளை வரவேற்கவில்லை. ஏனெனில், அவர்களது தூய ஆன்மா அத்தகைய மோகங்களில் மூழ்கிவிட அவர்களை அனுமதிக்கவில்லை. சொகுசு நிறைந்த வாழ்க்கை ஆகுமா, ஆகாதா என்பதைவிட, உலக அழுத்தங்களில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்ள இயலுமா என்பதே கேள்வி.

**'தஃப்ஸீர் அல்பஹ்றுல் முஹீத்'** இல் இமாம் அபூ ஹய்யான் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

அஹ்ஸாப் போரின் பின் பனூ நளீர், பனூ குரைழா வெற்றிகளின்போது

பெருந்தொகை கனீமத்கள் மதீனா முஸ்லிம் களுக் கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டு பொருளாதார ரீதியில் முஸ்லிம் சமூகம் பெரும் முன்னேற்றத்தைக் கண்டது. அவ்வேளையில் அண்ணலார் (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தங்களுக்கும் ஒரு பங்கை ஒதுக்கி இருப்பார்கள் என்று அவரது மனைவியர் கருதினர். அவர்கள் அனைவரும் நபிகளாரிடம் “அல் லாஹ்வு டைய தூதரே! ரோம, பாரசீக மன்னர்களின் மனைவிகள் விலைமதிப்புள்ள ஆபரணங்கள், ஆடைகளுடன் வாழ் கின்றனர். பணிகள் செய்ய வீட்டில் வேலையாட்கள் வைத்துள்ளனர். ஆனால், நாங்கள் பசியுடனும் சிரமத்துட னும் இருப்பதை நீங்கள் காண்கிறீர்கள்” என்று முறையிட்டு மாதாந்த கொடுப்பனவை அதிகரித்துத் தருமாறு கேட்டுக் கொண்டார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் ஏழு வானங்களுக்கு அப்பால் இருந்து அல்லாஹுத் தஆலா இந்த விடயத்தில் நேரடி யாகத் தலையிட்டு, ஸூரதுல் அஹ்ஸாபில் பதியப்பட்டி ருக்கின்ற சில வசனங்களை இறக்கியருளினான்.

**“நபியே! உம்முடைய மனைவியரிடம் நீங்கள் இவ்வுலக வாழ்க்கையையும் இதன் அலங்காரத்தையும் நாடுவீர்களா னால், வாருங்கள்! நான் உங்கள் வாழ்க்கைக்கு உரியதைக் கொடுத்து அழகிய முறையில் உங்களை விடுதலை செய்கி றேன். ஆனால், நீங்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் மறுமையின் வீட்டையும் விரும்புவீர்களானால் அப்பொழுது உங்களில் நன்மையாளர்களுக்காக அல்லாஹ் மகத்தான நற்கூலியை நிச்சயமாக சித்தம் செய்திருக்கிறான் என்று கூறுவீராக!” (33: 28-29)**

ஸூரதுல் அஹ்ஸாபின் ஆரம்பத்தில் நபியவர்களின் மனைவியர் ‘முஃமின்களின் தாய்மார்கள்’ என்று அழைக் கப்படுகின்றனர். இந்தத் தாய்மையும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மனைவியர் என்ற அந் தஸ்தும் அவர்கள் மீதும் சில கடமைகளைச் சுமத்துகிறது. மேற்கூறிய இரு வசனங்களும் அவர்களுக்கு இரண்டு தெரிவுகளை முன்வைத்தன. உலக மோகங்களும் அதன் அலங்காரங்களுமா? அல்லது அல்லாஹ், அவனுடைய தூதர் மற்றும் மறுமை வாழ்க்கையா? இந்த ஸூராவின் ஆரம் பத்தில் **“அல்லாஹ் எந்த மனிதனுடைய உடலிலும் இரண்டு இதயங்களை உண்டாக்கவில்லை” (33: 4)** என்று குறிப்பிடு வதற்கு இணங்க, ஓர் உள்ளம் இரண்டில் ஒன்றைத்தான் உள்வாங்க முடியும்.

ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அறிவிக்கிறார்: தெரிவுக்கான இந்த வசனங்கள் இறங்கியபோது நபி (ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம்) வேறு எந்த மனைவிக்கும் முன்பு என்னிடத்தில்தான் அறிவித்தார்கள். “ஆஇஷாவே! நான் உமக்கு ஒரு விடயத்தை சொல்லப் போகிறேன். அவச ரப்படாமல் நிதானமாக சிந்தித்து பெற்றோரிடத்திலும் சென்று ஆலோசனை பெற்று ஒரு தீர்மானத்தை எடுப்பீராக” என்று கூறிவிட்டு மேற்கூறிய **(33: 28-29)** வசனங்களை ஓதிக் காட் டினார்கள். அப்போது நான் “அல்லாஹ்வுடைய தூதரே! உங்களுடன் வாழ்க்கையைத் தொடர்வது பற்றி நான் எனது பெற்றோரிடம் ஆலோசனை கேட்க வேண்டுமா? நான் நிச்சயமாக அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் தெரிவு செய்கிறேன். ஆனால், எனது தெரிவு பற்றி உங் களுடைய ஏனைய மனைவிகளுக்கு தெரிவிக்க வேண்டாம்” என்றும் கேட்டுக் கொண்டேன். (அத்திர்மிதி- ஹஸன்ஸஹீஹ்)

**ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) இத்தகைய எளிமை வாழ்வை தனக்காக தேர்ந்தெடுத்ததனால் ஏழைகளுக்கும் தேவையுள்ளவர்களுக்கும் எப்போதும் கருணை காட்டக் கூடியவராகத் திகழ்ந்தார்கள். தேவையுள்ள எந்த மனிதனும் அவரது வீட்டுக்கு வந்து வெறுங் கையுடன் திரும்பியதில்லை. ஒரு முறை தன்னிடமிருந்து எழுபதாயிரம் திர்ஹங்களை ஸதகாவாகக் கொடுத்துவிட்டு தனது கைக்குட்டை வெறு மையாக இருப்பதைக் காண்பித்தார்.**

இவ்வாறு அல்லாஹ், அவனுடைய தூதர், மறுமையில் வீடு முதலானவற்றை முற்படுத்தி இந்த உலகத்தையும் அதன் அலங்காரங்களையும் தவிர்த்துக் கொள்வதற்கான தீர்மானத்தை முதன் முதலில் உறுதியாக வெளியிட்டது ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள்தான். பின்னர் தனது தீர்மானத்தில் இறுதி மூச்சுவரை திடவுறு தியுடன் அவர் செயற்பட்டார். ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) கூறியதாக உர்வா இப்னு ஸுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்:

“எனது மருமகனே! இரண்டு மாதங்களில் நாம் மூன்று பிறைகளைக் காண்போம். அல்லாஹ்வுடைய தூதரின் வீட்டில் அடுப்பு எரியாது. நீங்கள் எதனை உண்பீர்கள்?” என்று கேட்டபோது, “இரண்டு கறுப்பு நிறப் பொருட்கள்- பேரீச்சம் பழமும் தண்ணீரும். சில அன்ஸாரித் தோழர்கள் அல்லாஹ்வுடைய தூதருக்கு பால் கறந்து அனுப்புவார்கள்” எனப் பகர்ந்தார்கள் (அல்புகாரி, முஸ்லிம்)

ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) இத்தகைய எளிமை வாழ்வை தனக்காக தேர்ந்தெடுத்ததனால் ஏழைகளுக்கும் தேவையுள்ளவர்களுக்கும் எப்போதும் கருணை காட்டக் கூடியவராகத் திகழ்ந்தார்கள். தேவையுள்ள எந்த மனிதனும் அவரது வீட்டுக்கு வந்து வெறுங் கையுடன் திரும்பியதில்லை. ஒரு முறை தன்னிடமிருந்து எழுபதாயிரம் திர்ஹங்களை ஸதகாவாகக் கொடுத்துவிட்டு தனது கைக்குட்டை வெறு மையாக இருப்பதைக் காண்பித்தார். இன்னொரு முறை அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அனுப்பிய ஓர் இலட்சம் திர்ஹம்களையும் தானம் செய்து விட்டார். மற்றொரு மாலைப் பொழுதில் சிரியாவில் இருந்த முஆவியா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் மூலம் கிடைக்கப் பெற்ற ஓர் இலட்சம் திர்ஹங்களையும் அன்றைய இரவுக்குள் தர்மம் செய்து விட்டார்.

“நீங்கள் நோன்பு நோற்றுள்ளீர்கள்! நோன்பு துறக்க எதுவும் வைத்துக் கொள்ளவில்லையா?” என்று வினவப் பட்டபோது “ஏன் எனக்கு முன்பே நினைவூட்ட வில்லையா?” என்று திருப்பிக் கேட்கிறார் ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா). இந்த உன்னத நிலைக்கு ஒரு பெண் எவ்வாறு உயர முடியும்?

சிறிது காலத்துக்கு முன்பு வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்று சிந்தித்த ஒரு பெண், தற்போது தன் வயிற்றையே மறந்து சமூகத்திலுள்ள பல வீனர்களுக்காக தனது முதற் செல்வத்தையும் தானம் செய்கிறார்.

தனது முன்னேற்றமும் மேம்பாடும் என்ற கற்பனையில் உழல்கின்ற ஒரு பெண்ணால் அடுத்தவர்களின் துயர் துடைக்க முடியாது. முழு அரேபியத் தீபகற்பமும் இஸ்லாத்தின் அதிகாரத்துக்குக் கீழ் இருந்த வேளையில் தானியக் குவியல்களும் பெருந்தொகைப் பணமும் பொதுத் திறைசேரியில் வந்து நிறைந்தும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வபாத்தான தினத்தில் ஒரு நாளைக்குக்கூட போதுமான உணவு அவர்களின் வீட்டில் இருக்கவில்லை.

உலக அலங்காரங்களில் இருந்த தன்னை விடுவித்து, ஓர் உன்னத இலட்சியத்தை நோக்கி நகர்ந்ததால் அறிவுத் துறைக்கு ஒரு மாபெரும் பங்களிப்பை வழங்க ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களால் முடிந்தது. அவரது பெயர் குறிப்பிடப்படாத, அவருக்குப் பல பக்கங்களை ஒதுக்காத எந்தவொரு தஃப்ஸீரையோ, பிக்ஹ் நூலையோ, ஹதீஸ் கிரந்தங்களையோ காண முடியாது என்ற அளவுக்கு அறிவுப் பணி ஆற்றியுள்ளார். ஆயிரக்கணக்கான ஹதீஸ்களை அறிவித்துள்ள நபியவர்களின் தோழர்கள் ஏழு பேர் மாத்திரமே உள்ளனர். அவர்களுள் 2210 ஹதீஸ்களை அறிவித்து மூன்றாவது இடத்தை அவர் அடைந்துள்ளார். இமாம் அல்ஹாகிம் அவர்கள், தனது 'அல்முஸ்தத்ரக்' இல் "இஸ்லாமிய ஷரீஆவில் நான்கில் ஒரு பகுதி ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது" என்றும் அபூ மூஸா அல்அஷ்அரீ (ரழியல்லாஹு அன்ஹு) "எப்போதாவது ஒரு ஹதீஸில் எமக்குத் தெளிவின்மை இருந்தால், ஆஇஷாவிடம் கேட்டுத் தெளிவு பெறுவோம்" என்றும் மஸ்ரூக் இப்னு அல்அஜ்தா "நபித்தோழர்களில் மூத்தவர்கள் வாரிசுரிமை சட்டம் பற்றி ஆஇஷாவிடம் கேட்பதை நான் கண்டுள்ளேன்" என்றும் குறிப்பிடுகிறார்கள். (அஸ்ஸர்கஷி)

"ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் அறிவை மற்ற எல்லாப் பெண்களுடைய அறிவுடன் ஒப்பிட்டாலும் ஆஇஷாவின் அறிவே மிகைத்து நிற்கும்" என்று வர்ணிக்கிறார் இமாம் அஸ்ஸுஹ்ரி (ரஹிமஹுல்லாஹ்). மேலும் மருத்துவம், கவிதை முதலான துறைகளிலும் சிறந்து விளங்கினார் ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள்.

உலகத்தின் கவர்ச்சிகளுக்கு மதிமயங்கி அவற்றை உள்ளத்தில் ஏந்திப் பூஜிப்பவர்களுக்கு மறுமையை நோக்கிய இலட்சியப் பயணத்தில் உறுதியாக நிற்க முடியாது. அத்துடன் வரலாற்றில் சாதனை படைத்த பெண்மணிகளை நாம் நம்மைப் போன்ற சுபாவங்களும் விருப்பு-வெறுப்புக்களும் உள்ளவர்கள் என்ற நிலையில் இருந்து வேறுபடுத்திப் பார்த்தால் வரலாறுகளைப் படித்துப் பூரித்துப் போவதுடன் நின்றுவிடுவோமேயல்லாமல் அவற்றை நமக்கு முன்மாதிரியாக ஆக்கிக் கொள்ளவோ அல்லது அவை நமது ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய உந்து சக்தியாக மாற்றிக் கொள்ளவோ முயற்சிக்க மாட்டோம்.

HONEY MEDICARE
CURE WITH PURE HERBAL

எம்மிடம்...
- நாற்பட்ட மூட்டுவலி (Arthritis) முதுகுவலி (Back Pain)
- நீண்டநாள் குணமடையாத தலைவலி (Prolong Headache)
- கழுத்து மற்றும் தோற்பட்டை வலி (Neck & Shoulder pain)
- தோல் நோய்கள் (Eczema, Psoriasis, Scabice, etc)
- சிறுநீரக, பித்தப்பை கற்கள் (Renal, Gold bladder calculi)
- பிள்ளைப் பேறின்மை (Sub fertility)
- மாதவிடாய் பிரச்சினைகள் (Menstrual problem)
- பெண் பாலியல் குறைபாடுகள் (Sexual problem)
- மூலவியாதி (Piles) பாரிசவாதம் (Paralysis)
- தீராத சளித்தொல்லை (Phlegm, Sinusitis, Asthma

ஏனைய சகல வித நோய்களுக்கும்...

பக்கவிளைவுகளற்ற தூய மூலிகை மருந்துகளினூடாக (HERBAL MEDICINE) நீண்ட நாள் வைத்தியத் தினூடாகவும் குணமாகாத நோய்களுக்கு நிரந்தர நிவாரணம் காண. இப்போது யூனானி. ஆயுர்வே தம். ஹோமியோபதி சிகிச்சை முறைகளுடன் ராஜகிரியவில்...

- தங்கி நின்று சிகிச்சை பெற முடியும்.
- வைத்தியர்கள் மருந்து வகைகளை கொள்வனவு செய்ய முடியும்.


விஷேட சேவைகள்

Hijamath சுத்தமானதும் பாதுகாப்பனதுமான முறையில் எந்தவித பக்கவிளைவுகளற்ற குத்தி எடுத்தல் (Cupping) "நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் ஹிஜாமாவை நிறைவேற்ற விரும்புகிறார்களோ (பிறை 17,19,21) ஆகிய தினங்களில் மேற்கொள்ளட்டும். அதில் அனைத்து நோய்களுக்கும் நிவாரணமுண்டு." (நூல்: அபூதாவூத், 3861)

- உளவளத்துணை (Psychology Counseling)
- பெண்களுக்கான சகல சிகிச்சைகளும் பெண் வைத்தியர்களினால் செய்யப்படும்
- சகல சிகிச்சை முறைகளும் தகுந்த தகுதிவாய்ந்த அரச அங்கீகாரமும் பதிவும் பெற்ற வைத்தியர்களினால் மேற்கொள்ளப்படும்.

சேவை நேரம்: திங்கள்- வியாழன் 4.00- 9.00
சனி, ஞாயிறு- மு.ப. 9.00- பி.ப. 1.00

காத்திருப்புகளைத் தவிர்த்துக் கொள்ள முன்பதிவு செய்து கொள்ளவும்
தொடர்புகள், மேலதிக விபரங்கள், பதிவுகளுக்கு



பெண் நோயியல் மற்றும் சிறுவர் மருத்துவ துறையில் விஷேட நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்களின் சேவைகளை இங்கு பெற்றுக் கொள்ளலாம்


HONEY MEDI CARE / CURE WITH PURE HERBAL
Dr J. Aynul Fasmiya BUMS (Hones) (uc.co) Dip in psy cou CHM.
Double Cer. in Panchakama, Marma & Therapeutic Massage.
SLAMC Re No. 13057, Tel: 0718399773, 011 3069025

HONEY MEDI CARE CURE WITH PURE HERBAL
No 50 C , Obeysekarapura, Rajagiriya.
Phone: 011 3069025

# பேனாமுனைச் சந்திப்பில்

ஆங்கில மூலம்: Correspondence Between Maulana Maudoodi & Mariyam Jameelah

## மர்யம் ஜமீலாவும் மௌலானா மௌதூதியும்



▲ தமிழில்: வஸீரா ஹஸன் ▲

*லாஹூர், பெப்ரவரி 25, 1961*

*அன்புள்ள மிஸ் மார்க்கஸ் அவர்களுக்கு,*

*அஸ்ஸலாமு அலைக்கும்*

31ஆம் திகதியிடப்பட்ட உங்கள் நீண்ட கடிதம் சற்றுத் தாமதமாகவே இங்கு வந்தடைந்தது. தவிர்க்க முடியாத சில கடமைகளில் ஈடுபட்டிருந்தமையால் உடனடியாக ஒரு பதில் கடிதம் தரத் தவறி விட்டேன். அதன் காரணமாக உங்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சிரமங்களுக்காக முதலில் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

சகோதரி, உங்கள் வாழ்க்கைக் குறிப்புக்களை மிக்க ஆர்வத்துடனும் அவதானத்துடனும் படித்தறிந்து கொண்டேன். பக்கச்சார்பற்ற ஒரு திறந்த உள்ளம் உண்மையான உழைப்புடன் தொடர் முயற்சியில் ஈடுபடுகையில் அல்லாஹ்வின் அருளால் நேரான பாதையை நோக்கித் திருப்பப்படும் இயற்கையை உங்கள் கதை நன்கு பிரதிபலிக்கிறது. இந்தப் பாதையில் நீங்கள் அனுபவிக்க நேர்ந்த சோதனைகளும் வேதனைகளும் மன உளைச்சல்களும் எதிர்பார்க்க முடியாத ஆச்சரியங்களல்ல. உளரீதியாக வேனும் அரவணைக்க ஆளின்றி, அநாதரவான நிலையில், ஒரு நபர் தான் வாழும் சமூகச் சூழலுடனும் அடிக்கடி முரண்பட நேரின் அவரின் உணர்ச்சி நரம்புகள் பாதிக்கப்பட்டு உடைந்து போய்விடாதிருந்தால் அதுதான் ஆச்சரியத்துக்குரிய விடயம். நீங்கள் சந்திக்க நேர்ந்த அத்தனை அசௌகரியங்களுக்கும் காரணம் உங்களுக்கும் உங்கள் சமூகத்துக்கும் இடையிலான பொருத்தப்பாடின்மைதான்.

பழக்க வழக்கங்கள், அன்றாட வாழ்க்கை நடைமுறைகள், விருப்பு வெறுப்புக்கள், ரசனைகள் ஆகிய வற்றில் மாத்திரமன்றி உளப் போக்குகள், சிந்தனைகளில்கூட உங்களுக்கும் சமூகத்துக்குமிடையிலான ஏற்றத் தாழ்வு, மலைக்கும் மடுவுக்குமான இடைவெளியாக இருக்கையில் உரசல்களுக்கும் அதனடியான உளக் காயங்களுக்கும் பஞ்சமிருக்குமா? இயல்பான, ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எந்த விதத்திலும் சாதகமற்ற ஆர்டிக் வலயத்தில் கொண்டு நடப்பட்ட சின்னஞ் சிறு மரக்கன்று போல் நீங்கள் இருக்கிறீர்கள். நட்பேயற்ற சமூகச் சூழலில் யாரால்தான் வளர்ந்து பிரகாசிக்க முடியும்? உளச் சமநிலை பாதிக்கப்பட்டு, உள்ளார்ந்த ஆற்றல்கள் மங்கி மழுங்கடிக்கப்பட்டு, வாடி வதங்கி விடுவதுதான் நடக்கக்கூடிய காரியம்.

திருமணம் செய்யாத கன்னிப் பெண்ணாக இன்னும் நீங்கள் இருப்பதுகூட உங்கள் நிலைமைக்கு ஒரு காரணமாயிருக்கலாம். உங்களைப் போன்ற ஒரு பெண்ணை உங்கள் சமூகம் எவ்வாறு விரும்ப முடியும்? அங்கே, உங்கள் பலங்கள் எல்லாம் பலவீனங்களாகப் பார்க்கப்படுகின்றன. இந்தச் சூழ்நிலையில்கூட நின்று தோள்கொடுக்கக்கூடிய உண்மை

**உங்களுக்கும் சமூகத்துக்குமிடையிலான ஏற்றத்தாழ்வு, மலைக்கும் மடுவுக்குமான இடைவெளியாக இருக்கையில் உரசல்களுக்கும் அதனடியான உளக் காயங்களுக்கும் பஞ்சமிருக்குமா? இயல்பான, ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எந்த விதத்திலும் சாதகமற்ற ஆர்டிக் வலயத்தில் கொண்டு நடப்பட்ட சின்னஞ் சிறு மரக்கன்று போல் நீங்கள் இருக்கிறீர்கள். நட்பேயற்ற சமூகச் சூழலில் யாரால்தான் வளர்ந்து பிரகாசிக்க முடியும்?**

யான ஒரு வாழ்க்கைத் துணையை எப்படித்தான் நீங்கள் தெரிவு செய்து கொள்வது? சரி, எந்த ஒன்றையும் பொருட்படுத்தாமல் வலிந்து ஒருவரை மணந்து கொள்வதாக வைத்துக் கொண்டாலும்கூட அப்படி அமையும் குடும்ப வாழ்க்கை மனமகிழ்ச்சி தரும் வெற்றிகரமான இல்லறமாக நிலைத்து நிற்குமா?

உங்கள் முதல் கடிதம் கண்ட கணத்திலிருந்து, உங்கள் பிரச்சினைகள் குறித்து நான் அதிகம் சிந்திக்க ஆரம்பித்திருக்கிறேன். அந்த வகையில் உங்களுக்கு இரண்டு தெரிவுகள் இருப்பதாக நான் கருதுகிறேன். ஒன்று, இப்போது இருப்பது போல் அமெரிக்காவில் இருந்து கொண்டே தைரியமாகவும் வெளிப்படையாகவும் இஸ்லாத்துக்காக உழைக்க முன்வருவது, அந்த உழைப்பின் விளைவாக அனுதாபிகள், சகபாடிகள் கொண்ட ஒரு சிறு குழுவை உங்களுக்கு ஆதரவு தரும் வகையில் உருவாக்கிக் கொள்ள முடியுமானால் அது மிகவும் நல்ல முடிவு அல்லது இரண்டாவது தெரிவாக, சொந்த நாட்டைத் துறந்து பாகிஸ்தானைப் போன்ற ஒரு முஸ்லிம் நாட்டை நோக்கி தைரியமாக இடம்பெயர்ந்து விடுவது. இந்த இரண்டில் உங்களுக்கு மிகப் பொருத்தமான வழி எது என்பதை எனது நிலையில் இருந்து நான் தீர்மானிப்பது கடினம். உங்கள் சூழ்நிலையும் நீங்கள் கொண்டிருக்கும் ஆத்ம சக்தியும்தான் அதனைத் தீர்மானிக்க முடியும்.

ஆனால், ஒரு விடயம் குறித்து மாத்திரம் என்னால் உறுதிபடக் கூற முடியும். "பாகிஸ்தானில் வாழ்வோம்" என்பதுதான் உங்கள் தெரிவெனின் நீங்கள் கூடியிருக்கப் போவது உங்களையொத்த மனநிலை கொண்ட ஒரு மனிதக் குழுமத்துடனேயே. மொழி வேறுபாடு என்ற ஒன்றைத் தவிர உங்களுக்கிடையில் அதிகம் இடைவெளிகள் இருக்கப் போவதில்லை. இன்ஷா அல்லாஹ், பொருள் ரீதியாகவும் உளரீதியாகவும் ஆதரவு காட்டி ஒத்துழைக்கக் கூடிய மக்களாக பாகிஸ்தானியர்களை நீங்கள் காண்பீர்கள். ஏன், உங்களுக்குப் பொருத்தமான சிறந்த ஓர் இளம் துணையைக் கூட இங்கு நீங்கள் பெற்றுக் கொள்ளக் கூடும்.

இங்கென்றால் என்னாலும் எல்லா வகையிலும் உங்களுக்கு உதவி ஒத்தாசையாய் இருக்க முடியும். ஆனால், ஒரு விடயம். அயல் நாட்டுப் பரிமாற்றங்களில் நடைமுறைப்படுத்தப்படும் கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக அமெரிக்காவில் இருந்து பாகிஸ்தானுக்கு வருவதற்கான உங்கள் பயண ஏற்பாடுகளில் உதவி செய்யக் கூடிய நிலையில் நான் இல்லை.

தம் பிள்ளை பேரில் கரிசனை மிக்க உங்கள் பெற்றோர், புத்திசாதுரியமாக நீங்கள் எடுக்கும் முடிவுக்குக் குறுக்காக நின்று அநாவசியமான தடைகள் விதிக்க மாட்டார்கள் என்றே நான் கருதுகிறேன். கொந்தளிப்பான சூழ்நிலையில், தம் மகள் விரக்தி வாழ்க்கை வாழ நேரிடும் அல்லது நரம்புகள் பாதிக்கப்பட்டு மனநோயாளியாக மாறிவிடக் கூடும் என்ற ஆபத்தான உண்மையை அவர்கள் அறியாமல் இருக்க முடியாது. மறுதலையாக, பொருத்தமான உள ஆரோக்கியம் பெற்று வினைத்திறனும் பயனுறுதியும் மிக்க செழிப்பான வாழ்வை தம் மகள் அடைந்து கொள்வதை எந்தப் பெற்றோர்தான் விரும்ப மாட்டார்? அந்த வகையில் நான் கூறும் ஆலோசனைகளை உங்கள் பெற்றோர் மறுப்பது எப்படிப் போனாலும் வரவேற்று ஆறுதலடைவார்கள் என்பதுதான் என் எண்ணம்.

'இஸ்லாம் அட் த குரொஸ் ரோட்ஸ்' (Islam at the cross roads) என்ற நூல் குறித்து வினவியிருந்தீர்கள். அந்த நூல் உட்பட முஹம்மத் ஆஸாத் அவர்களின் வேறு சில படைப்புக்களையும் நான் வாசித்திருக்கிறேன். இஸ்லாத்தைத் தன் வாழ்வியல் கொள்கையாக ஏற்றுக் கொண்ட பின், இந்திய-பாக் துணைக் கண்டத்தில் அவர் வாழ்ந்திருந்த காலத்தில் தனிப்பட்ட ரீதியில் அவருடன் நேரடி அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பமும் எனக்குக் கிடைத்திருக்கிறது. ஒஸ்ரியன் (இனத்தைச் சேர்ந்த) யூதப் பூர்வீகத்தைக் கொண்ட ஒருவர்தான் முஹம்மத் ஆஸாத் என்ற செய்தி உங்களுக்கு அவரில் இன்னும் ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடும். இஸ்லாமியச் சிந்தனைகளை அவர் வெளிப்படுத்தும் பாங்கு, குறிப்பாக மேல்நாட்டுக் கலாசாரம், அதன் பொருள்முதல்வாதக் கொள்கைகள் பற்றிய அவருடைய விமர்சனங்கள் குறித்து எனக்கு எப்போதும் உயர்ந்த அபிப்பிராயம் உண்டு.

> இஸ்லாமிய வழிமுறைகளை ஏற்றுப் பின்பற்ற முயற்சிக்கும் ஓர் ஆணை அல்லது பெண்ணை இன்றைய நவீன சடவாத சமூகம் சும்மா விட்டு வைக்குமா? ஒவ்வோர் எட்டிலும் எத்தனை முட்டுக்கட்டைகள்! மொத்த சமூகமுமே அவனுக்கு அல்லது அவளுக்கு விரோதியாகிவிடும். சமாதானம் வேண்டுமெனின் அந்த முஸ்லிம் விட்டுக் கொடுத்து வாழவேண்டும் அல்லது சமூகத்துடன் தொடர்ச்சியாக முரண்பட வேண்டும். முடிவில்லா இப்போராட்டத்தை உறுதியும் பலமும் மிக்க நரம்புகளால் கூட தாக்குப்பிடிக்க முடியாது.

ஆனால், சொல்வதற்கு வருத்தமான விடயம் என்னவென்றால், இஸ்லாத்தைத் தழுவிய அந்த ஆரம்ப காலங்களில் இஸ்லாத்தைத் தீவிரமாக நடைமுறை வாழ்வில் விரும்பிப் பின்பற்றிய ஒரு முஸ்லிமாக அவர் இருந்தாலும், பின்னாட்களில் 'முன்னேற்றவாதிகள்' என்ற அடையாளம் கொண்ட "சீர்திருத்தப்பட்ட" யூதர்களின் வழியை நெருங்கி அவர் சென்றுவிட்டமைதான். தன் அரபு மனைவியை விவாகரத்துச் செய்து விட்டு அமெரிக்காவின் நவீன யுகப் பெண்ணொருவரை அண்மையில் மணந்து கொண்ட நிகழ்வுகூட இஸ்லாத்திலிருந்தான அவருடைய மேற்படி விலகலைத் திடப்படுத்தியிருக்கக் கூடும்.

எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாத மிக விசனத்துக்குரிய ஒரு விடயம் இது என்பதை ஒத்துக்

கொண்டாலும், அதற்காக அவரை அதிகம் குறை சொல்ல நான் தயாராயில்லை. இஸ்லாத்தைத் தழுவியிருந்த ஆரம்ப நாட்களில் அழகிய பல இனிமையான மாற்றங்களை அவருடைய வாழ்வில் நான் அவதானித்திருக்கிறேன். ஆனால், என்னே துரதிஷ்டம்! எப்போது ஒருவர் உண்மை முஸ்லிமாக வாழ முயற்சிக்கிறாரோ அப்போதே அவருடைய ஆற்றல்கள், இயலுமைகள் தம் சந்தைப் பெறுமானத்தை இழக்க ஆரம்பிக்கின்றன. முஹம்மத் ஆஸாதுக்கு நடந்ததும் இதுதான்.

வசதிகள் மிகுந்த சௌகரியமான மேல்நாட்டு வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டிருந்த ஒருவர் இஸ்லாத்தைத் தழுவிய பின் திடீரென்று கடுமையான பண நெருக்கடிக்கு உட்படுகிறா ரென்றால்...! அடுத்தடுத்து அவரை பல விட்டுக்கொடுப்புகளுக்கு இட்டுச் சென்ற சோகக் கதை இதுதான். அவருடைய நடைமுறை வாழ்வில் பல குறைபாடுகள் இருக்கக்கூடும். அதற்காக அவருடைய இலட்சியங்கள், நம்பிக்கைகளில் மோசமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்க முடியாது என்றே இன்னமும் நான் நம்புகிறேன்.

"ஒரு காலம் வரும். அப்போது எனது வழிமுறைகளை ஏற்றுப் பின்பற்றுவதானது உள்ளங்கையில் எரிதணலைச் சுமப்பது போல் கடினமாயிருக்கும்."

ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தீர்க்கதரிசனம் மிக்க மேற்படி கூற்றையும் இந்த இடத்தில் அவதானித்துப் பார்க்க வேண்டும். இஸ்லாமிய வழிமுறைகளை ஏற்றுப் பின்பற்ற முயற்சிக்கும் ஓர் ஆணை அல்லது பெண்ணை இன்றைய நவீன சடவாத சமூகம் சும்மா விட்டு வைக்குமா? ஒவ்வோர் எட்டிலும் எத்தனை முட்டுக்கட்டைகள்! மொத்த சமூகமுமே அவனுக்கு அல்லது அவளுக்கு விரோதியாகிவிடும். சமாதானம் வேண்டுமெனின் அந்த முஸ்லிம் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும் அல்லது சமூகத்துடன் தொடர்ச்சியாக முரண்பட வேண்டும். முடிவில்லா இப்போராட்டத்தை உறுதியும் பலமும் மிக்க நரம்புகளால் கூட தாக்குப்பிடிக்க முடியாது.

வொஷிங்டன் டி.சி. நகரின் அல்லது மொன்ட்ரீலின் இஸ்லாமிக் சென்டரில் ஏதாவதொன்றைத் தொடர்பு கொண்டீர்களா? மொன்ட்ரீலின் கீழ்ப்படி விலாசத்தைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள் உபயோகமாயிருக்கும்.

(இஸ்லாமிக் சென்டர், 1345 ரெட்பாத் கிரஸன்ட், மொன்ட்ரீல்- 2, கியுபெக், கனடா)

ஆபிரிக்கப் பயணத்தில் என் பாதுகாப்பு குறித்து நீங்கள் காட்டிய அக்கறைக்கு மிகவும் நன்றி. நான் பயணிக்க உத்தேசித்திருக்கும் நிலப் பிரதேசங்கள் ஒப்பீட்டளவில் சாந்தி, சமாதானம் நிலவும் பகுதிகள். சோமாலியா, கென்யா, உகண்டா, தங்கான்யிகா, ஸன்ஸிபார், (Thanganyika, Zanzibar ஆகிய இரு பகுதிகளும் இணைந்த பகுதியே இன்று தன்சானிய ஐக்கிய குடியரசு என அழைக்கப்படுகிறது) மொரிஷியஸ், தென்னாபிரிக்க குடியரசு ஆகிய இடங்களுக்கே நான் போக இருக்கிறேன். இப்பிரதேசங்களில் செறிந்து வாழும் இந்தோ - பாகிஸ்தான் முஸ்லிம்கள், அரபு முஸ்லிம்கள் ஆகியோரின் உதவியைப் பெற்று ஆபிரிக்காவில் இஸ்லாமியப் பணி புரிவதுதான் என் பயணத் திட்டம்.

ஜனாதிபதி நாசர் குறித்த உங்கள் திகைப்பை என்னால் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது. அப்பாவித் தியாகிகளின் இரத்தத்தில் தோய்ந்த நாசரின் கொடூரக் கைகளா இஸ்லாத்தைத் தூக்கிப் பிடித்துப் பாதுகாக்கப் போகின்றன? அல்இஃவானுல் முஸ்லிமூன்களை உயிர் துடிக்க நசுக்கி, அரபு உலகின் இஸ்லாமிய அணிக்கு அளப்பரிய இழப்பை ஏற்படுத்திய கொடூர மனிதர்தான் ஜனாதிபதி நாசர். அவருக்கு இருப்பது நான்கு நாக்குகள். எகிப்தியர்களுடன் உறவாடுகையில் "நாம் பேரோக்களின் வாரிசுகள்" என்று மார் தட்டுவார். அரபுலகுடன் பேசுகையில் "மகத்துவமிக்க அரபு தேசத்தின் அங்கங்கள் நாம்" என்று பெருமையடிப்பார். ஆபிரிக்காவுடன் தங்குகையிலோ ஆபிரிக்கர்களின் வாயாகவே மாறிவிடுவார். தனக்கு வசதி வாய்ப்பாக அமைந்துவிட்டதனால், அண்மைக் காலத்திலிருந்து 'கெய்ரோ ரேடியோ'வில் 'இஸ்லாத்தின் குரலை, (Voice of Islam) முழக்க ஆரம்பித்திருக்கிறார்.

விவஸ்தையற்ற இவரைப் போன்ற சாகசக்காரர்களால் இஸ்லாத்துக்காக ஒருபோதும் உழைக்க முடியாது. நேர்மையும் அடக்கமும் மிக்க தன்னலமற்ற முஜாஹித்களால் மாத்திரமே இஸ்லாத்துக்காக இப்படியொரு சேவையைச் செய்ய முடியும். இந்த முஜாஹித்கள்தான் எதற்காகவும் இஸ்லாத்தை விட்டுக் கொடுக்காதவர்கள். தனிப்பட்ட இலட்சியங்களை மாத்திரமன்றி, தம் உயிரைக்கூட இஸ்லாத்துக்காகப் பணயம் வைக்கத் துணிந்தவர்கள்.

நாளாந்தத் தொழுகைகளை நிறைவேற்றி, ரமழான் நோன்பையும் அனுசரிக்கும் ஒரு கீழ்ப்படிவுள்ள முஸ்லிமாக நீங்கள் மாறிவிட்ட செய்தி எனக்கு அளவற்ற ஆனந்தத்தை ஏற்படுத்துகிறது. உங்களுக்கு என் மனம் கனிந்த வாழ்த்துக்கள். இஸ்லாத்தின் வழியில் உங்கள் உள்ளம் மென்மேலும் உறுதிப்பட அல்லாஹ்வை நான் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,

அன்புடன்,

அபுல் அஃலா


## சிறுநீரகம் தேவை!

இல: 9/1, கெடபேரிய அரநாயக்க எனும் முகவரியில் வசிக்கும் முஹம்மத் ஸபீர் (வயது-14) எனும் மாணவனுக்கு A+ (பொசிடிவ்) அல்லது O+ (பொசிடிவ்) சிறுநீரகம் அவசரமாக தேவைப்படுகிறது. நல்லுள்ளம் படைத்த எவரேனும் இருப்பின் சிறுநீரகம் ஒன்றைக் கொடுத்து உதவுமாறு குடும்பத்தினர் வேண்டிக் கொள்கின்றனர். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0777282682
0779883686

# 3DS MAX





கணினி, தொழிநுட்பம், கட்டட நிர்மாணம் மற்றும் ஆங்கிலம் போன்ற துறைகளில் தொழிநுட்பக் கற்கைகளையும் தொழில் வழிகாட்டல்களையும் **கடந்த 5 வருட காலமாக** வழங்கி வரும் எமது நிறுவனம் மேற்படி பயிற்சி நெறியினையும் வெற்றிகரமாக நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

மத்திய கிழக்கு நாடுகளில் துறைசார்ந்த அனுபவமுள்ள விரிவுரையாளர்களால் வடிவமைக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டுவரும் இக்கற்கை நெறியானது, Architectural Visualization, Interior Designing போன்ற துறைகளின் ஊடாக 3D Modelling, Rendering, Animation போன்ற வேலைகளில் தேர்ச்சி பெறுவதற்கான வழிகாட்டல்களையும் வழங்கிவருகின்றது.

**PRE-REQUISITES: AutoCAD 2D Basic or Equivalent CAD Experience**

## COURSE MODULES:

- 3DS MAX
- AUTOCAD APPLICATIONS
- PHOTOSHOP APPLICATIONS
- ARCHITECTURAL DESKTOP APPLICATIONS
- V-RAY RENDERING APPLICATIONS
- PROJECT DOCUMENTATION

**REGISTER NOW FOR NEW BATCHES**

**Duration: 02 Months** | **Fast Track: 04 Weeks**

**TARGET GROUP:** Architects, Engineers, Technical Officers, Draftsmen, and who are interested in this Field.

தூரப்பிரதேச மாணவர்களுக்கு விடுதி வசதிகள் உண்டு

**the aCADDemy**
College of Architectural Engineering Technology
www.acaddemy.lk

No: 22, Kaburady Road,
Kattankudy-01

**BRANCH**
No:34, Main Street,
Sainthamaruthu-05

**HOTLINES:**
**0776 32 34 34**
**0778 444 110**

Registered under
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION
Ministry of Youth Affairs and Skills Development-Reg. No: P20/0037

கவிதா பவனம் கவிதா பவனம் கவிதா பவனம் கவிதா பவனம்

## ஆன்மாவின் நறுமணம்

ரமழான் தந்தது முப்பது முத்துகள்
ரஹ்மத் பொழிந்தது முதல் பத்துகள்
கொடுநரகில் காத்தது நடுப் பத்துகள்
பாவமீட்சி தந்தது மூன்றாம் பத்துகள்

வதனங்கள் கொண்டது புதுப் பொலிவு
கல்மனங்களில் பிறந்தது மெல்லிய கனிவு
உள்ளம் வேறாக்கியது பாவக் கழிவு
அதில் நிலைப்பதாய் எனக்குள் முன்மொழிவு

இதயத்துள் மலர்ந்தது ஈகை உணர்வு
உயிருக்குள் கசிந்தது தியாக உணர்வு
எண்ணத்தில் பதிந்தது ஏழ்மை உணர்வு
சிந்தைக்குள் சிதைந்தது அகந்தை உணர்வு

பொறுமைப் பாடம் கற்றுத்தந்த தந்தை
ஞானத்தை பரிசளித்தாய் நீயொரு விந்தை
வாழ்க்கைப் பாதைக்கு நீயிட்டாய் தீந்தை
உன்னை வழியனுப்ப மறுக்குது சிந்தை

சங்கை மிகு குர்ஆனை கற்கச் செய்தாய்
தராவீஹால் வணக்கத்தை மிளிரச் செய்தாய்
கேட்கும் துஆ ஏற்கப்படும் முக்தி தந்தாய்
லைலதுல் கத்ர் இரவதனை எமக்களித்தாய்

ஈதுல் பித்ர் தொழுகையிலே எம்மைச் சேர்ப்பாய்
நலம், நலமா? என்று கைகள் கோர்க்க வைப்பாய்
ஈத் முபாறக் கூறியெம்மை வாழ்த்தி நிற்பாய்
ஆன்மாக்களின் நறுமணத்தில் விடைபெறுவாய்!

பர்சானா றியாஸ் - இறக்காமம்

## எனது வருகை உணர்த்தியது என்ன..!

நான் ஒரு சிறந்த ஆடையாக
இருக்கின்றேன்
எனது மணம்
கஸ்தூரி வாடையை விடச் சிறந்தது.

பதினொரு மாதமாய் இறுமாப்புடன் தலை நிமிர்ந்து
காணப்பட்ட தொலைக்காட்சி
வெட்கத்தில் சுவற்றை நோக்கியப்படி
என்னைக் கண்டதும்.

முப்பது நாட்களாய் முஸ்லிம்கள்
தாகத்தோடும் பசியோடும்
என்னோடு கைகோர்த்து...

பள்ளிவாசல்கள் சனக்கூட்டதால்
நிரம்புகின்றன எனது வருகையால்
தானதர்மங்கள் நிரம்பி வழிகின்றன.

கஞ்சி மணம் அடிக்கின்றது - அது
பக்கத்து வீட்டுப் பிஞ்சி மனங்களை
சந்தோஷப்படுத்துகின்றது.

செல்வந்த முகங்கள்
ஏழைகளின் முகங்களை பார்க்கின்றன
புன்முறுவலிகின்றன
ஏழைகளின் முகங்கள்.

நான் ஒரு மாதம் தங்கியிருந்தேன்
உங்களுடன்
கட்டுப்பாட்டுடன்
நீங்கள்

ஏற்றத்தாழ்வுகளை குறைகின்றது எனது வருகை
நித்தம் நித்தம் நன்மைகளை வேண்டி

எம்.ஏ.பீ. வசீம் அக்ரம் - புத்தளம்

## நாம் தயாரெனில்...

ஹிஜாஸின் செம்மலைகளுக்கிடையே
ஒரு பேரொளி உருவானது
அப்பேரொளியானது - மருண்டுபோன
மானிட இதயங்களுக்கு மத்தியில்
அறிவொளி பரப்பும்
முத்துச் சமூகத்தைத் தந்தது
அச்சமூகத்தின் எச்சம் எம்மிலும்;
அவ்வொளி பட்டுத் தெறிக்கட்டும்.

இஸ்லாத்தில் முஸ்லிம்களைக்
கண்ட காலம் தேய்பிறையாகி
முஸ்லிம்களில் இஸ்லாத்தைக் காணும்
நாள் வருமென்றிருந்தால்
நம் வெற்றியின் இரகசியம்
வாளுமல்ல... போருமல்ல...
நன்னடத்தைகள் மட்டுமே...

அல்குர்ஆனும் ஸுன்னாவும் நம் வழி
அவ்வழி வாழ நாம் தயாரெனில்...
வெற்றியொன்றும்
தொலைதூரமல்ல!



ருஷ்தா ஸவாஹிர்
ஜாமிஆ ஆஇஷா ஸித்திக்கா வளாகம்

# மனதைத் தைத்த விதை



விதவையல்ல! நீ விதை வை!
விதையாக
வாழ்வது
விதியாகலாம் நீ
விதையாக
மாள வேண்டுமென்பது
விதி அல்ல!

சொந்தக் காலில்
நிற்கும்
துணிவுள்ளவளே புதிய
சொந்தமொன்றைச்
சேரும்
துணிவு வேண்டும்!

தனி மரமாக
ஒற்றையாக
நிற்பதேன்?
கனி மரமாகி
சுற்றத்தாருடன்
கிளை விட்டு வளரலாம்
உற்ற
துணை மரத்தைச்
சார்ந்து செல்!
உடன் கட்டையேறிய
சமூகத்துப் பெண்கள் இன்று
குடும்பத்தின் தீபத்தை
ஏற்றுகின்றனர்

இத்தாவில் அணிந்த
வெள்ளைத் துணி
களையாதவர்கள் இன்று
பல வர்ண ஆடையில்
பலம் பெறுகின்றார்.

கண்ணீர் துடைக்கும்
கையில்லை ஊரார்
கதைகளை அடைக்கும்
வாசலில்லை வளர்ந்த
பிள்ளைகளைக் காக்கும்
அரணில்லை மனதின்
ஓசைகளைக் கேட்கும்
காதில்லை!

அத்தனை அத்தனை
இல்லைகளும் இல்லாமலாகும் நீ
விதவைப் பதவியை
விரும்பித் துறந்தால் !

இன்று
விதவையாக வாழ்வது
விதியாகலாம் ஆனால்
விதவையாக
மாள வேண்டுமென்பது,
விதி அல்ல!

ஹிஷாம் ஹுஸைன், புத்தளம்

---


# தேசத்தின் மகுடம்

காலத்தின் ஓட்டம்
கறுப்பு வெள்ளையாகிறது
இளமையின் பிரசவிப்பே முதுமை!
மெய் உருகி மெழுகுவர்த்தியான
முதுமையே முழுமை

நாகரிகத்தின் உச்சம்
இளமை வேடிக்கையாய்
நாளைய முதுமையை
மறந்து சிரிக்கிறது
தேசத்தின் பொக்கிஷங்கள்
தெருவோர காகிதங்களாக
தென்றலுடன்...

இளமையால் நிந்திக்கப்பட்ட
முதுமை
தூங்காமலே கனவு காணுகின்றது
இளசுகளின் மனசுகள்
இளகுவது எப்போதென்று?

இளமையை பாரமாய் கருதி
எந்நேரமும் உழைத்த



முத்தான முதுமை
குருத்தோலைகள் குறும்பு
செய்ய
தள்ளாடும் வயதில் தனியாய்
செத்துப் பிழைக்கிறது
ஜீவனோபாயத்திற்காக!

வாழ்க்கைப் பருவமதில்

வரண்ட பருவம் முதுமையென்று
இளமை ஏளனமாய்
தன் முகவரி மறந்து
தனியாய் ஒரு முகவரி
தேடுகின்றது!

தொல்லை தரும் முதுமையை
தொலைத்துவிட
முற்பகல் செய்யின்
பிற்பகல் விளையும் – என்பது
முட்டாள் இளமைக்கு தெரியாது!

வயதால் உயர்ந்தவனே
வாழ்க்கையின் வழிகாட்டி ஆவான்
இல்லறமும் நல்லறமும்
எமக்குச் சொன்னவன் நிலை
பரிதாபம்!

இனியாவது மமதையால்
மார்தட்டிக்கொண்ட இளமை
மரியாதை செய்திடட்டும்
மகுடம் தாங்கிய முதுமைக்கு

எம்.கே.எப். பஸீலா – இலங்கை சட்டக் கல்லூரி

# WinSYS NETWORKS®

*The network security training provider of the nation*

## 1st TIME IN SRI LANKA

SAN STORAGE
- EMC (EMC Clariion CX3-10 20 40 80)
- HP (HP EVA 4000 6000 8000)
- NETAPP (NetApp FAS 3020 Unified Storage)
- BROCADE
- CISCO Data Center

## CCIE Voice Boot Camp

CISCO · CCIE

2013-08-19 (12 Days) Register on or Before 10th Aug 2013

NEW Technology Trends 200-120

## CCNA (v2.0) IPV6 தமிழில்

Cisco Certified Network Associate

## Special OFFER IN KURUNEGALA

30% Discount

INFO MESH COMPUTER SYSTEMS

Hotline :- 0777-112771 0777-04 7708

CISCO

- CCNA 200-120 (v2.0) — Cisco Certified Network Associate
- CCNP SWITCH ROUTE TSHOOT — Cisco Certified Network Professional
- CCIE R&S — Cisco Certified Internetwork Expert
- CCNA Voice — Cisco Certified Network Associate
- CCNP Voice — Cisco Certified Network Professional
- CCIE Voice — Cisco Certified Internetwork Expert
- CCNA Security — Cisco Certified Network Associate
- CCNP Security — Cisco Certified Network Professional
- CCIE Security — Cisco Certified Internetwork Expert

Diploma In Hardware Engineering With Networking.

CompTIA A+

Special Diploma In Network Administration.

CompTIA N+

Microsoft

**MCTS** *Microsoft Certified Technology Specialist*

70-640 Server 2008 / 70-642 Server 2008 / 70-643 Server 2008

70-680 Windows 7 Configuring 70-687 Windows 8 Configuring

**MCSA** Server 2012

410 Installing and Configuring Server 2012

411 Administering Windows Server 2012

412 Configuring Advanced Server 2012 Services

**MCSE** Server Infrastructure2012

413 Designing and Implementing a Server Infrastructure

414 Implementing an Advanced Server Infrastructure

## Linux

RHCE & RHCSS

Security Admin Training

vmware

Virtualization Technology

## Vmware vSphere 5.1

5 DAYS BOOTCAMP

மிக குறுகிய காலத்தில் தகவல் தொழில் நுட்பத்தில் சிறந்த தேர்ச்சியினைப் பெறவும் தொழில்நுட்ப ஆற்றலை வளர்த்துக் கொள்ளவும் எம்முடன் இணையுங்கள்

WinSYS NETWORKS® — The network security training provider of the nation

**Hotline** 011-2589567 0777 259927


www.winsys.lk / info@winsys.lk

COLOMBO No: 14, Schofield Place, Kollupitiya, Colombo-03, Sri Lanka.

*Tertiary and Vocational Education Commission - Sri Lanka :- Reg.No:- P01-/0402*

| | | |
|---|---|---|
| Kandy | E-win NETWORKS — On your way to the future | No: 524, Peradeniya Road, Kandy. Tel:- 081-2203785-6 Hotline :- 0777-04 77 08/0777-807 630 |
| Akurana | E-win NETWORKS — On your way to the future | No: 526/A, Matale Road, Akurana. Tel:- 0777-089242 Hotline :- 0777-04 77 08/0777-807 630 |
| Kurunegala | WinSYS NETWORKS | No 28A, 2floor, Gunasiri Building, Perakumba Street, Kurunegala. Hotline :- 0777-112 771/0777-807 630 |
| Batticaloa | WinSYS NETWORKS | No: 10, New kalmunai Road, Batticaloa. Tel:- 065-2228789 Hotline :- 0777-832 871 |


Daisy is a flower which dies in a hour but Friendship is a tower which lives to Friend


E-win NETWORKS ®
524, Peradeniya Road, Kandy
0777-807630
081-2203785
Graphic Designing
Adobe Photoshop
Adobe Illustrator
Adobe Indesigning
CorelDRAW
8000/=
Web Designing
Adobe Photoshop
Adobe Dreamweaver
PHP ( Forms )
Flash Animations
12000/=
Office Applications
MS Word
MS Excel
MS Access
MS PowerPoint
Internet & E-mail
6500/=
AutoCAD Drafting
2D Drafting & 3D Modeling
14500/=
Medium - தமிழ் සිංහල English
CISCO
CCNA
Cisco Certified Network Associate
Cisco Certifications
New Syllabus 200-120 (v2.0)
100% Practicals with Individual Cisco Routers
MCTS
Microsoft Certified Technology Specialist
Microsoft Certifications
MCTS - Active Directory
MCTS - Network Infrastructure
MCTS - Windows 7
MCTS - Windows 8
Windows 7
Windows 8
Windows Server System
Special 25% Discount On Full Payment
Individual Fast Track & Night Classes
Can be Arranged
100% Practical Trainings
HARDWARE with Networking 4000/=
NETWORK Administration 7000/=
E-win Networks - Akurana Branch
Classes will be Conducted by the Ladies
LADIES ONLY
Web Designing
Graphic Designing
Office Applications
Computer for KIDS
Skype, Internet E-mail
526/A, Matale Road, Akurana 7
Behind the "Burger hut"
0777-069242
081-3816166
Full Name :-
Selected Course :-
Please Attach this form with the Application
Rs. 1000/= Discount



# ரமழான் கற்றுத் தந்த தக்வா, பிர், இஹ்ஸான்

இஸட்.ஏ.எம். பவாஸ், சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம் - மலேசியா

**நபித் தோழர்களுள் மிகச் சிறந்ததோர் அறிஞரான உபை இப்னு கஃப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், முட்புதர்கள் நிறைந்த ஒரு பாதையில் நடக்கின்ற ஒரு மனிதன் தனது ஆடைகளை அந்த முட்கள் கீறிக் கிழிக்காமல் பாதுகாத்துக் கொள்ள எடுக்கும் எல்லா முயற்சிகளையும் தக்வாவுக்கு ஒப்பிடுகிறார். நரக நெருப்பில் இருந்து மனிதர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கவும் குர்ஆன் இந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறது.**

நோன்பு கடமையாக்கப்பட்ட மாதம், நோன்பின் ஆன்மிகப் பகுதி, நோன்புடன் சம்பந்தப்படும் சட்டங்கள் முதலான அனைத்தையும் உள்ளடக்கியதொரு வசனத் தொடரைக் கொண்ட ஸூரதுல் பகரா, நோன்பு நோற்ற சமூகத்தை தக்வா, பிர், இஹ்ஸான் ஆகிய மூன்று உன்னத நிலைகளுக்கு இட்டுச்செல்ல விரும்புகிறது. இந்த ஒவ்வொரு நிலை பற்றியும் சற்று விரிவாக நோக்குவோம்.

### *1. தக்வா*

'தக்வா' என்ற சொல்லுக்கு பயம் என்ற பொருள் பொருத்தமற்றதாகும். பயம் என்பதைக் குறிக்க குர்ஆன் خوف என்ற பதத்தைப் பயன்படுத்துகிறது. 'தக்வா' எனும் சொல் 'விகாயத்' எனும் வேர்ச்சொல்லில் இருந்து பிறந்ததாகும். 'விகாயத்' என்றால் கேடயம் என்பதாகும். அதாவது வெறுக்கத்தக்க, தடுக்கப்பட்ட செயல்கள் மூலம் அல்லாஹ்வுடைய கோபமும் தண்டனையும் வந்தடையாமல் தன்னை தற்காத்துக் கொள்வததே 'தக்வா' என்பதன் அடையாளமாகும் என இமாம் இமாம் இப்னு ஹஜர் அல்அஸ்கலானி (ரஹிமஹுல்லாஹ்) பத்ஹுல் பாரியில் குறிப்பிடுகிறார்.

நபித் தோழர்களுள் மிகச் சிறந்ததோர் அறிஞரான உபை இப்னு கஃப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், முட்புதர்கள் நிறைந்த ஒரு பாதையில் நடக்கின்ற ஒரு மனிதன் தனது ஆடைகளை அந்த முட்கள் கீறிக் கிழிக்காமல் பாதுகாத்துக் கொள்ள எடுக்கும் எல்லா முயற்சிகளையும் தக்வாவுக்கு ஒப்பிடுகிறார். நரக நெருப்பில் இருந்து மனிதர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கவும் குர்ஆன் இந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறது.

நோன்பின் நோக்கம் பற்றி...

*"உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது விதிக்கப்பட்டது போல் உங்கள் மீதும் நோன்பு விதிக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் முத்தகீன்கள் ஆகலாம்" (2: 183)* என்றும்

ஹஜ் கடமைக்கான தயார்படுத்தல் பற்றி குறிப்பிடும்போது...

*"தயார் செய்ய வேண்டிய பொருளில் தலைசிறந்தது தக்வாவாகும்" (2: 197)* என்றும்

உடலை மறைக்க வேண்டிய ஆடை பற்றி பிரஸ்தாபிக்கும்போது...

*"உங்கள் வெட்கத் தலங்களை மறைக்கும் ஆடையையும் அலங்காரத்தையும் இறக்கியுள்ளோம். எனினும், தக்வாவுடைய ஆடையே சிறந்தது" (7:26)* என்றும் அல்லாஹ் அறிவுறுத்துகிறான்.

இங்கு முதலில் புலன்களுக்கு உட்பட்ட ஆடை பற்றிக் குறிப்பிட்ட அல்குர்ஆன், அடுத்து ஆன்மிக ரீதியான ஆடை பற்றி உணர்த்தியுள்ளது.

ரமழானில் ஹலாலான உணவு, பானம், ஆசாபாசங்கள் முதலானவற்றையே

தவிர்த்து, அறுசுவை ஆகாரத்தில் காணாத பேரின்பத்தை அனுபவித்த ஒரு நோன்பாளி ஏனைய காலங்களில் தடுக்கபட்டவற்றை நோக்கி எவ்வாறு நகர முடியும்? நோன்பு விதியாக்கப்பெற்ற அன்றைய முதல் முஸ்லிம் உம்மத் தங்களது வாழ்வின் சகல விவகாரங்களிலும் தாம் ஏற்றுள்ள புதிய மார்க்கம் என்ன கருதுகிறது என்று தெரிந்து கொள்ளவும் அதற்கேற்ப செயற்படவும் பேராவலுடன் திகழ்ந்தது.



இங்கு முக்கிய நோக்கம் முகத்தைத் திருப்புவது அல்ல. மாறாக, அல்லாஹ்வுக்கு கீழ்படிவதும் அவனது ஆணைகளுக்குக் கட்டுப்படுவதும் அவன் ஏற்படுத்திய விதிகளைப் பின்பற்றுவதும் தான் பிர் என்பதை உணர்த்துவதாகும்.

"அவர்கள் உம்மிடம் எப்படி செலவு செய்வது என்று கேட்கின்றனர்." (2: 215)

"புனித மாதத்தில் போர் புரிவது பற்றி உம்மிடம் கேட் கின்றனர்." (2: 219)

"பிறைகள் பற்றி உம்மிடம் கேட்கின்றனர்." (2: 189)

"மாதவிடாய் பற்றியும் உம்மிடம் கேட்கின்றனர்." (2: 222)

வாழ்வில் முதல் ரமழானை சந்தித்த அவர்கள் அல்லாஹ்வின் விருப்பு வெறுப்புக்களை நன்கறிந்து அல்லாஹ்வின் கோபத்திலிருந்து தங்களை தற்காத்துக் கொள்ள முயற்சி செய்தார்கள். நோன்பு ஒரு மனிதனுள் தக்வாவை வளர்க்க வேண்டும். அது அல்குர்ஆனின் வழிகாட்டலை நோக்கி அவரை நகர்த்த வேண்டும். ஏனென்றால்,

"இந்தக் குர்ஆன் முத்தகீன்களுக்கு வழிகாட்டியாகும்." (2: 2)

**2. பிர்**

'பிர்' (بِرّ) (நன்மை) என்ற சொல் 'பர்' (بَرّ) என்ற வேர்ச் சொல்லில் இருந்து உருவானது. பர் என்றால் பூமி அல்லது பாலைவனம். அதன் எதிர்ச்சொல் பஹ்ர் (கடல்). பூமி நிலையான தன்மை கொண்டது என்பதால் நன்மை எப்போதும் பூமியுடன் சம்பந்தப்படுகிறது. கடலில் நாலா திசைகளிலும் அலைகள் மோதும்போது ஒரு பயணியின் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தலாம். நல்ல மனிதனுக்கு 'பார்ருன்' (بَار)என்று சொல்லப்படும். அதன் பன்மை 'அப்ரார்' என்பதாகும். ஆனால், இங்கு குர்ஆன் நல்ல மனிதர் என்ற பொருளைத் தரும் 'பார்ருன்' என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் 'பிர்' (நன்மை)என்ற சொல்லைப் பயன்படுத்துவதில் இருந்து முஸ்லிம் சமூகத்தின் ஓர் அங்கத்தவர் நடமாடும்போது ஒரு நன்மை நகர்கிறது; ஒரு முன்மாதிரி முன்னேறுகிறது; ஒரு நடமாடும் குர்ஆன் காட்சியளிக்கிறது என்று அற்புதமாக சித்திரிக்கப்படுகிறது. இது அரபு மொழி யில் ஒரு விஷேட பாவனை முறையாகும்.

"உங்கள் முகங்களை கிழக்கு அல்லது மேற்கு நோக்கி திருப்புவது (பிர்) நன்மை ஆகாது. மாறாக, நன்மை என்பது அல்லாஹ்வையும் இறுதி நாளையும் வானவர்களையும் வேதங்களையும் மற்றும் நபிமார்களையும் ஒருவன் முழுமையாக நம்புவதும் மேலும் (அல்லாஹ்வின் மீதுள்ள நேசத்தின் காரணமாகத்) தமக்கு விருப்பமான பொருளை உறவினர்களுக்கும் அநாதைகளுக்கும் வறியவர்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் யாசிப்போருக்கும் அடிமைகள் மீட்புக்கும் வழங்குவார்கள். தொழுகையை கடைபிடிப்பார்கள்; ஸகாத்தை வழங்குவார்கள். வாக்களித்தால் வாக்கை நிறைவேற்றுவார்கள். வறுமையிலும் நோய்நொடியிலும் போர்க்களத்திலும் பொறுமை காப்பார்கள். அவர்களே வாய்மையாளர்கள். அவர்களே தக்வா உடையோர்." (2: 177)

'ஆயதுல் பிர்' என அழைக்கப்படும் பிரபலமான இவ் வசனம் ஈமான், இபாதத், முஆமலாத், அக்லாக் ஆகிய அனைத்யையும் உள்ளடக்கியது என்று இஸ்லாமிய அறிஞர்கள் வர்ணிக்கின்றனர். முஃமின்கள் தொழுகையில் ஜெருஸலத்திலுள்ள பைத்துல் மக்திஸை முன்னோக்குமாறு ஆரம்பத்தில் கட்டளையிடப்பட்டிருந்தனர். பின்னர் மக்காவிலுள்ள கஃபாவை நோக்கி தொழுமாறு அல்லாஹ் கட்டளையிட்டான். இது வேதக்காரர்களிலும் முஸ்லிம்களிலும் சிலருக்குப் பாரமாக இருந்தது. இங்கு முக்கிய நோக்கம் முகத்தைத் திருப்புவது அல்ல. மாறாக, அல்லாஹ்வுக்கு கீழ்படிவதும் அவனது ஆணைகளுக்குக் கட்டுப்படுவதும் அவன் ஏற்படுத்திய விதிகளைப் பின் பற்றுவதும்தான் பிர் என்பதை உணர்த்துவதாகும். இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மேற்கூறிய வசனம் தொடர்பாக விளக்குகையில்,

"நீங்கள் மற்ற செயல்களை கைவிட்டு வெறுமனே கிப்லாவை நோக்கித் தொழுவது 'பிர்' ஆக மாட்டாது. ஏனெனில், அல்லாஹ் பல்வேறு கடமைகளை விதித்து அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்றும் கட்டளையிட்டுள்ளான்" எனக் குறிப்பிடுகிறார்கள். (தப்ஸீர் இப்னு கஸீர்)

பராஉ பின் ஆஸிப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கும் பின்வரும் குறிப்பு ஸஹீஹுல் புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது:

அறியாமைக் காலத்தில் மக்கள் ஹஜ், உம்ரா ஆகிய

வழிபாடுகளுக்காக இஹ்ராம் கட்டிவிட்டால் வீட்டுக்குள் பின்புற வழியாகவே வந்து கொண்டிருந்தனர். அப்போது அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்.

**"நீங்கள் வீடுகளுக்குள் அவற்றின் பின்புற வழியாக வருவது பிர் ஆக மாட்டாது. மாறாக, பிர் என்பது தக்வா உடையவரே. ஆகவே, வீடுகளுக்குள் அவற்றின் முன் வாசல்கள் வழியாகவே வாருங்கள்." (2: 189)**

இதன் பிறகு உங்கள் செயல்களை அல்லாஹ்வுடைய தூதரைப் பின்பற்றி முறைப்படி செய்யுங்கள் என்று அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான். 'பிர்' என்பது தனி மனிதர்களின் மனோபாவமும் சமூகத்தின் சிந்தனைப் போக்கும் சீரிய முறையில் வடிவமைக்கப்படுவதன் விளைவாகும். மேலும் தனி மனிதர்களிலும் சமூகத்திலும் உடனடியாகத் தென்படும் குணவொழுக்க மாற்றமுமாகும். இவையல்லாமல் தொழுகையில் முகத்தைத் திருப்புவதோ வீடுகளுக்குள் பின் வாசலால் நுழைவதோ 'பிர்' ஆகமாட்டாது. முஸ்லிமல்லாதவர்களுடனான விவகாரங்களில் கூட எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை விவரிக்கும்போதும் குர்ஆன் 'பிர்' எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளது.

**"எவர்கள் மார்க்க விடயத்தில் உங்களுடன் போரிடவில்லையோ அவர்களுக்கும் மேலும் உங்களை உங்களுடைய இல்லங்களை விட்டும் வெளியேற்றவில்லையோ அவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்வதையும் அவர்களுடன் நீதியாக நடப்பதையும் அல்லாஹ் தடைசெய்யவில்லை." (60: 8)**

### 3. இஹ்ஸான்

இது ஒரு முஃமின் அடைய முடியுமான அதி உன்னத நிலையாகும்.

**"எவர் நன்மை செய்தவராக (முஹ்ஸின்) தனது முகத்தை அல்லாஹ்வுக்கு முற்றிலும் பணியச் செய்கிறாரோ அவரது கூலி அவருடைய இரட்சகனிடம் உண்டு. அவர்களுக்கு யாதொரு பயமும் இல்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்." (2: 112)**

அல்லாஹ்வுக்காக மட்டுமே யார் தூய்மையுடன் நற்செயல் புரிகின்றாரோ அவருக்கே அவருடைய இறைவனிடம் நற்பலன் உண்டு என்பது இதன் கருத்தாகும். இதற்குப் பின்வரும் திருவசனம் சான்றாகும்.

**"நபியே! உம்முடன் அவர்கள் தர்க்கித்தால் என் முகத்தை அல்லாஹ்வுக்காகப் பணிய வைத்து விட்டேன். என்னைப் பின்பற்றியவர்களும் அவ்வாறே செய்வார்கள் என்று கூறுவீராக." (3:20)**

'இஹ்ஸான்' எனும் நிலையை ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தியுள்ளார்கள்:

"இறைவழிபாட்டில் ஈடுபட்டிருக்கும்போது நீ அல்லாஹ்வைப் பார்ப்பது போல இரு! அவ்வாறு முடியாவிட்டால் நிச்சயமாக அவன் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வில் இரு."

ஸஃத் இப்னு ஸுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் குறிப்பிடுகிறார். "தமது முகத்தை அதாவது மார்க்க நம்பிக்கையை அல்லாஹ்வுக்குப் பணியவைத்து ஒருமுகப்படுத்தி நல்லறங்கள் புரிபவருக்கே, அதாவது, இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பின்பற்றி நடப்பவருக்கே நற்பலன் உண்டு. ஒரு நற்செயல் ஏற்படுத்தப்படுவதற்கு இரு நிபந்தனைகள் உள்ளன. ஒன்று அச்செயல் அல்லாஹ்வுக்காக மட்டுமே தூய்மையான எண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். மற்றது, மார்க்கத்துக்கு ஒத்த சரியான செயலாக அது இருக்க வேண்டும்."

பெற்றோருக்குப் பணிவிடை செய்யுமாறு ஏவும்போது குர்ஆன் இஹ்ஸான் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளது.

**பார்க்க: (6: 151), (17: 23), (46: 15), (29: 8)**

பிர் எனும் சொல் நீதியுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளது போன்று இஹ்ஸான் என்ற சொல்லும் நீதியுடன் இணைத்துக் குறிப்பிடப்பட்டுள்ளது.

*"நிச்சயமாக அல்லாஹ் நீதியையும் உபகாரம் செய்வதை (இஹ்ஸான்)யும் நெருங்கிய உறவினர்களுக்கு வழங்குவதையும் ஏவுகிறான்." (16: 90)*

*"அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யுங்கள், உங்கள் கரங்களால் அழிவைத் தேடிக் கொள்ளாதீர்கள். நன்மை செய்யுங்கள். நிச்சயமாக அல்லாஹ் முஹ்ஸின்களை நேசிக்கிறான்." (2: 195)*

அபூ ஐயூப் அல்அன்ஸாரி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார். "இந்த வசனம் அன்ஸார்களான எங்கள் தொடர்பாகவே அருளப்பட்டது. அல்லாஹ் தனது மார்க்கத்தைப் பலப்படுத்தியதுடன் இம்மார்க்கத்துக்கு உதவி செய்வோர் எண்ணிக்கையும் அதிகமான போது நாங்கள் "நமது செல்வங்கள் வீணாகி விட்டன. நாம் சற்று நிதானித்து இம்மார்க்கத்துக்காக செலவிட்டு நமது செல்வத்தை அழிவிலிருந்து காத்திருக்க வேண்டும்" என எங்களிடையே இரகசியமாகப் பேசிக் கொண்டோம். அப்போது அல்லாஹ் மேற்கூறிய வசனத்தை இறக்கினான்." (அல்புகாரி)

எனவே, இஹ்ஸான் என்ற நிலையை அடைய ஒருவர் இறுதி மூச்சுவரை மார்க்கப் பணிகளில் தொடர்ந்தும் உழைத்து அர்ப்பணங்கள் புரிந்தாக வேண்டும் என்று குர்ஆன் வலியுறுத்துகின்றது.

**உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்**

# LONDON HOTEL SCHOOL

இப்பொழுது பம்பலப்பிட்டி - நுகேகொடை தெமட்டகொடையில்
தொழில் வாய்ப்புக்கான பயிற்சிகள் ☆☆☆☆☆

- சொந்தமாக வியாபார நிலையமொன்றை அமைக்கும் தகுதி பெறுதல்
- வீட்டிலிருந்தவாறே கைநிறைய சம்பாதிக்கும் தகுதி பெறுதல்.
- 5,7 நட்சத்திர ஹோட்டல்களில் தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ளும் தகுதி பெற்றுக்கொள்ளுதல்
- பகுதி நேர தொழில் வாய்ப்பாகவும்
- **UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND - USA, DUBAI, QATAR, KUWAIT** நாடுகளுக்கு செல்வதற்கான தகைமையையும் உதவிகளும் வழங்கப்படும்.



சகல வசதிகளுடன் London College
புதிய கிளை இப்பொழுது கண்டி நகரில்
**Hot Line : 0779 32 31 31**
No. 48 3A, William Gopallawa Mawatha, Kandy. (Heerassagala Junction)

## 4 மாதகால விஷேட பயிற்சிகள் 10 சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- Hotel Management
- International Cookery
- Front Office & Reception
- Vegetable & Fruit Carving
- Hotel Housekeeping
- Food & Beverage
- Pastry & Bakery
- Tourism
- Cake Making
- English

18-08-2013 திகதிக்கு முன் பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு இலவச ஹோட்டல் **Uniform** வழங்கப்படும்.

**மேலதிகமாக ஆங்கில அறிவுக்கான இலவச வகுப்புகளும் நடைபெறும்.**

## 5 ☆☆☆☆☆ ஹோட்டல்களில் சம்பளம், டிப்ஸ், உணவு, சீருடை, தங்குமிடவசதி உண்டு

- வெள்ளை நிற சேட், கருப்பு நிற டவுசர், கருப்பு நிற டை கருப்பு சப்பாத்து அணிவது அவசியம்.
- முற்றிலும் குளிரூட்டப்பட்ட வகுப்பறை
- நவீன தொழில் நுட்பங்களுடன் பயிற்சிகள் வழங்கப்படும்.
- சுயதொழில், வெளிநாடு செல்ல வங்கிக்கடன்.

தூரபிரதேசத்திலிருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதியும் 3 வேலை உணவும், பெண்களுக்கு கல்லூரி ஹொஸ்டல் பாதுகாப்பான வசதி

- S.M.S மூலம் Email விலாசத்தை அனுப்பி விபரங்களை அறியவும்.
- S.M.S மூலம் வீட்டு விலாசத்தை அனுப்பி கடிதமூலம் விபரங்களை பெற்றுக்கொள்ளவும். Missed Call செய்யவும்.
- 0776346913 இலக்கத்துக்கு S.M.S அனுப்பவும்.

**வங்கியில் 1000/= ரூபா வைப்பு செய்து பதிவுகளை மேற்கொள்ளவும்.**

LONDON COLLEGE

## LONDON COLLEGE OF HIGHER STUDIES PVT LTD

No. 195, 1st Floor, Galle Road, Colombo 04, (Near Visakha Road)
**0711 60 10 40 / 0776 34 69 13**

No. 126B 3/1, High Level Road, Nugegoda. (Upper Floor Of Keells Super)
**0774 32 31 31 / 0778 588 777**

No. 176, Kollonnawa Road, Dematagoda, Colombo 09. (Near the CCD Police Office)
**0772 166 222 / 0774 833 444**

வரலாற்றின் ஒளியின் நிழலில் - 22

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தந்தை வழி உறவினரான அப்பாஸ் பின் அப்துல் முத்தலிபின் பரம்பரையில் வந்தவர்களே அப்பாசிய ஆட்சியாளர்கள். ஜாஹிலிய்யாக் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த கோத்திர உணர்வு உமைய்ய-ஹாஷிமிய்யப் போராட்டமாக உருவெடுத்திருந்தது. அக்கோத்திர உணர்வு குலபாஉர் ராஷிதூன்களின் காலத்திற்குப் பின் உமைய்ய-அப்பாஸியப் போராட்டமாக மறு உருவெடுத்திருந்தது. கோத்திர உணர்வால் தூண்டப்பட்டிருந்த அப்பாசியர் ஈரானியர்களின் துணையுடன் உமையாக்களிடமிருந்து

இவ்வாறு தன் எதிரிகளையெல்லாம் நல்வழி, தீயவழி என்று பாராது கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி கொலை செய்தார். இமாம் ஹஸன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் கொள்ளுப் பேரர்களான முஹம்மத், இப்றாஹீம் ஆகிய இருவரையும் கூட கொலை செய்தார்.

எதிரிகளின் அச்சுறுத்தலை ஒழித்த பின்னர் சமூக சேவைப் பணிகள் பலவற்றைச் செய்து மக்களின் ஆதரவைத் திரட்டிக் கொண்டார். தனக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் சாதாரண ஒரு பிரஜை போல பிரதிவாதியாகக் காழி நீதிபதி முன் தோன்றினார். தீர்ப்பு அவருக்கு எதிராகவே வழங்கப்பட்டது. காழியின் திறமையையும்

# "இன்றைய கடமைகளை நாளைக்காக ஒருபோதும் ஒத்திப் போட வேண்டாம்"

**"தனக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் சாதாரண ஒரு பிரஜை போல பிரதிவாதியாகக் காழி நீதிபதிமுன் தோன்றினார். தீர்ப்பு அவருக்கு எதிராகவே வழங்கப்பட்டது. காழியின் திறமையையும் துணிவையும் பாராட்டி கலீபா அபூ ஜஃபர் அல்மன்ஸூர் அவருக்கு பரிசில்களையும் வழங்கினார். நீதி நிலைநாட்டப்படுவதையும் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்வதையும் விரும்பி அதற்காக உழைத்தார்."**

எம்.ஐ.எம். அமீன்
முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்

கி.பி. 749இல் ஆயுதமுனையில் ஆட்சியைக் கைப்பற்றினர்.

அப்பாசிய ஆட்சியை ஸ்திரப்படுத்தும் பணியை கலீபா அபூ ஜஃபர் அல்மன்ஸூர் (கி.பி. 754- 775) திறம்படச் செய்து முடித்தார். அப்பாசிய குடும்ப ஆட்சிக்கு எதிராக வரக்கூடும் என்று கருதப்பட்டவர்களை எல்லாம் ஈவிரக்கம் பாராது கொன்றொழித்தார். ஸப் (Zaf) போர்க்களத்தில் உமையாக்களை வென்ற தளபதியும் தனது மாமனுமாகிய அப்துல்லாஹ் பின் அலி ஆட்சி உரிமை தன்னைச் சேர வேண்டும் என்று குரல் கொடுத்தார். அவரைப் போர்க்களத்தில் கைது செய்து பஸரா நகரில் சில காலம் வீட்டுக் காவலில் வைத்தார்.

இக்காலப் பகுதியில் அவருக்காக ஒரு புதிய மாளிகையையும் தலைநகரில் மிக அலங்காரமாகக் கட்டினார். அதில் அவரைக் குடியேற்றுவதற்காக விழா எடுத்து ஊர்வலமாக அழைத்து வந்து அவர் செய்த சேவைகளை எல்லாம் பாராட்டிக் குடியமர்த்தினார். அடுத்து வந்த மாரி காலத்தில் பெய்த பெருமழையின்போது உப்புக் கற்களால் கட்டப்பட்ட அம்மாளிகை இடிந்து விழுந்தது. அதில் புதையுண்டு அப்துல்லாஹ் பின் அலி இறந்தார்.

துணிவையும் பாராட்டி கலீபா அபூ ஜஃபர் அல்மன்ஸூர் அவருக்கு பரிசில்களையும் வழங்கினார். நீதி நிலைநாட்டப்படுவதையும் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்வதையும் விரும்பி அதற்காக உழைத்தார்.

எனினும், ஆட்சி அப்பாசிய குடும்பத்தில் சதாவும் இருக்க வேண்டும் என்று கருதினார். கலீபா பொறுப்பு ஓர் அமானிதம் என்று கருதி நிர்வாகக் கடமைகளை நிறைவேற்றுவதிலும் மிகக் கவனமாக இருந்தார். மரணம் நெருங்கியபோது தனக்குப் பின் பதவியேற்கப் போகும் தன் மகன் மஹ்திக்குப் பின்வருமாறு 'வஸிய்யத்' செய்தார்.

"இன்றைய கடமைகளை நாளைக்காக ஒருபோதும் ஒத்திப் போட வேண்டாம். பொதுமக்களையும் இராணுவத்தினரையும் திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ வழிபாருங்கள். திறைசேரியை ஒருபோதும் காலியாக வைக்க வேண்டாம். நண்பர்களையும் உறவினர்களையும் புறக்கணிக்க வேண்டாம்."

அபூ ஜஃபர் அல்மன்ஸூரின் இப்போதனை ஆட்சியாளர்களுக்கு மட்டுமன்றி, சாதாரண மனிதர்களுக்கும் பொருந்துவதாகும். இஸ்லாமும் சமயக் கடமைகளை நேரம் தவறாது நிறைவேற்றுமாறே வலியுறுத்துகிறது. உரிய காலத்தில், உரிய நேரத்தில் கருமம் ஆற்றுவது இறை திருப்தியைப் பெற்றுத்தரும் செயலாகும். இதனை நமது சமூகம் கவனத்தில் எடுக்குமா?

LONDON COLLEGE

# AIRLINE TICKETING SCHOOL

தொழில் வாய்ப்புக்கான பயிற்சிகள்

இப்பொழுது பம்பலப்பிட்டி - நுகேகொடை - தெமட்டகொடையில் வகுப்புகள் ஆரம்பம் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

## UK சான்றிதழ் வழங்கப்படும்

Travelport Galileo
GALILEO APPROVED TRAINING CENTRE

### 5 Certificates

- Certificate in Basic Airline & Ticketing Operation
- Certificate in Galileo Airline Ticketing
- Certificate in Airport Operation
- Certificate in Information Technology (IT)
- Certificate in English Language



### 7 Certificates: 1 Diploma & 6 Cert.

- Certificate in Airline & Travel Agency Operation
- Certificate from an International Airline
- Certificate in Galileo Airline Ticketing
- Certificate in Airport Transport Essentials
- Certificate in Customer Service
- Certificate in Travel Formalities
- Certificate in Fare Constructions

சகல வசதிகளுடன் London College
புதிய கிளை இப்பொழுது கண்டி நகரில்
Hot Line : 0779 32 31 31
No. 48 3A, William Gopallawa Mawatha,
Kandy. (Heerassagala Junction)



- தமக்கென்று சொந்தமாக வியாபார நிலையமொன்றை அமைக்கும் தகுதி பெறல்
- வீட்டிலிருந்தவாறே மடி கணனியில் உலக நாடுகளுக்கு விமான சீட்டு, ஹோட்டல் பதிவு, டிக்கட் ஐடனரி மூலமாக கைநிறைய சம்பாதிக்கும் வாய்ப்புகள்
- பகுதி நேர வேலை வாய்ப்புகளுக்கும் தகுதி பெற்றுக்கொள்ளுதல்
- UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, மற்றும் ஏனைய நாடுகளுக்கும் உயர்கல்வி தொழில் வாய்ப்புக்கு ஏற்பாடுகள் செய்து கொடுத்தல்
- பாடப்பயிற்சி நெறியின் பின் UK தரத்திலான பயிற்சிகள் வழங்கப்படும்
- Galileo and Amadeus முறை மூலம் விமான சீட்டுகள் பதிவுச் செய்முறை பயிற்சிகள் வழங்கப்படும்.
- இப் பாட நெறிக்கு அவசியமான ஆங்கில கணனி பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.
- உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உயர் கல்வி, தொழில் வாய்ப்புகளை பெறுவதற்கான வாய்ப்புகள் கிட்டும்.

- A/C வகுப்பறை, நவீன தொழிநுட்பங்கள் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழக பட்டதாரி விரிவுரையாளர்களால் பாடப்பயிற்சிகள் வழங்கப்படும்.
- வங்கிக்கடன் மற்றும் விசாவுக்கான ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.
- தூர பிரதேசத்திலிருந்து வரும் ஆண் / பெண்களுக்கு பாதுகாப்பான தங்குமிட வசதிகள் மற்றும் 3 வேலை உணவு வழங்கப்படும்.

**18-08-2013 முன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுகள் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது**

| Bambalapitya : | Nugegoda: |
|---|---|
| 0711 60 10 40 / 0776 34 69 13 | 0774 32 31 31 / 0778 588 777 |

| | |
|---|---|
| தினசரி காலை முதல் மதியம் | 9.00 - 12.00 |
| சனி ஞாயிறு | 9.00 - 4.00 |

- Missed Call செய்து விபரங்களை அறியவும்
- S.M.S செய்து Email மூலமாக விளக்கங்களை பெற்றுக் கொள்ளவும்.
- தூர பிரதேசத்தினர் வங்கியில் ரூபா 1000/- செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளவும்.

## LONDON COLLEGE OF HIGHER STUDIES PVT LTD

No. 195, 1st Floor, Galle Road, Colombo 04, (Near Visakha Road)
0711 60 10 40 / 0776 34 69 13
No. 126B 3/1, High Level Road, Nugegoda. (Upper Floor Of Keells Super)
0774 32 31 31 / 0778 588 777
No. 176, Kollonnawa Road, Dematagoda, Colombo 09. (Near the CCD Police Office)
0772 166 222 / 0774 833 444

# சுன்னத்தான நோன்புகள்



▲ அஷ்ஷெய்க் கியாஸ் முஹம்மத் (நளீமி) M.A விரிவுரையாளர்- ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா

**நன்மை, தீமை ஆகிய இரண்டும் மாத்திரமே மனிதனிடம் எஞ்சியிருக்கும் அந்த நாளில் நன்மைத் தட்டில் குறைகள் ஏற்பட்டு அவற்றை ஈடுசெய்ய சுன்னத்தான கருமங்கள் உண்டா எனத் தேடப்படுகின்றபோது யார் சுன்னத்தான அமல்களில் ஈடுபட்டார்களோ அவர்களின் நன்மைத் தட்டு கனக்கும்.**

இறை நேசர்கள் குறித்து பேசுகின்ற நபிமொழி தெளிவுபடுத்துகின்றது.

எனவே, ரமழானை அடைந்த நாங்கள், அதில் மிக ஆர்வத்தோடு இன்புற்ற நாங்கள் இடைக்கிடையே அந்த இன்பத்தை அனுபவிக்கவும் நோன்பு ஏற்படுத்த விளையும் மாற்றங்களை பசுமைப்படுத்தவுமே சுன்னத்தான நோன்புகள் ஏற்படுத் தப்பட்டுள்ளன. ஆனால், எம்மில் பலர் ரமழான் வருகின்றபோது மாத்திரமே நோன்பு குறித்த சிந்தனையைப் பெறுகின்ற நிலை வேதனையளிக்கிறது.

சகோதரர்களே! மனிதனுக்கு ஏற்படக்கூடிய ஏழு நிலைகள் குறித்து பிரஸ்தாபித்த நபி (ஸல்லல்லாஹு அலைஹி) வஸல்லம் அவர்கள், அவற்றுக்கு முன்னர் நன்மைகளின்பால் விரையுமாறு வேண்டினார்கள். வறுமை, செல்வம், நோய், முதுமை, மரணம், தஜ்ஜால், மறுமை என்பனவே அவ் ஏழு நிலைகளுமாகும்.

மட்டுமன்றி, மறுமையில் பர்ளான கடமைகளில் ஏற்படும் குறைகளும் தவறுகளும் ஸுன்னத்தான வணக்கங்கள் மூலமாகவே நிவர்த்திக்கப்படுகின்றன என்ற உண்மையையும் நாம் மறந்துவிடக் கூடாது. நன்மை, தீமை ஆகிய இரண்டும் மாத்திரமே மனிதனிடம் எஞ்சியிருக்கும் அந்த நாளில் நன்மைத் தட்டில் குறைகள் ஏற்பட்டு அவற்றை ஈடுசெய்ய சுன்னத்தான கருமங்கள் உண்டா எனத் தேடப்படுகின்றபோது யார் சுன்னத்தான அமல்களில் ஈடுபட்டார்களோ அவர்களின் நன்மைத் தட்டு கனக்கும். சுன்னத்துகளில் அசட்டை செய்தோர்



நன்மைகள் விடயத்தில் அல்குர்ஆன் பிரயோகிக்கும் சொற்பிரயோகங்களுள் 'விரைந்து வாருங்கள்.' 'போட்டி போட்டுக் கொண்டு வாருங்கள்' என்பவை முக்கியமானவை. எனவே, சுவர்க்கத்தை ஆசை வைத்து வாழும் ஒரு விசுவாசியிடத்தில் நன்மைகளுக்காக விரைந்து போட்டி போடும் நிலை காணப்படுவது அவசியமாகும். ஸஹாபாக்கள் வாழ்விலும் நாம் இதனைக் காண்கிறோம். மறுமைக்கான போட்டி, நன்மைகளுக்கான போட்டி, ஜிஹாத் களங்கள், தர்மங்கள், அடுத்தவருக்கு உதவிசெய்தல் என வருகின்ற போது ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு அவர்கள் முன்வந்தார்கள். அதனைப் பெரும் பேறாக, பாக்கியமாகக் கருதினார்கள்.

இதனடிப்படையில் எமது வாழ்விலும் பர்ளுகளை அடுத்து நபிலான, சுன்னத்தான வணக்கங்கள் மூலம் நன்மைகளுக்கான ஆர்வம் வெளிப்பட வேண்டும். பர்ளுகள் கடமைப்பாட்டை வெளிப்படுத்துகின்றன. நபில்கள் இறை நெருக்கத்தின் அடையாளங்களாக விளங்குகின்றன. பர்ளுகளை அடுத்து நபில்கள் மூலமாகவே இறை நேசம் முழுமையடைகின்றது. அந்த நிலை எட்டப்படுகின்ற போது, மனிதன் கேட்பதை எல்லாம் அல்லாஹ் கொடுக்கும் நிலை உருவாகும் என்ற கருத்தை 'அவ்லியா' எனும்

கைசேதப்படும் நிலையும் ஏற்பட்டு விடும். அல்லாஹ் காத்தருள்வானாக!

இச்சந்தர்ப்பத்தில் நபிலான நோன்புகள் குறித்து வந்துள்ள சில நபிமொழிகளை நோக்குவோம்.

**ஷவ்வால் மாத ஆறு நோன்புகள்**

“யார் ரமழானில் நோன்பு நோற்று, அதனை அடுத்து ஷவ்வால் மாத ஆறு நோன்புகளையும் நோற்கின்றாரோ அவர் காலம் முழுவதும் நோன்பு நோற்றவர் போலாவார்.” (முஸ்லிம்)

**ஆஷூரா நோன்பு**

அஷூரா நோன்பு குறித்து நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களிடம் கேட்கப்பட்டபோது “அது முன்னைய வருடத்தின் பாவத்தை மன்னிக்கும்” எனக் கூறினார்கள். (முஸ்லிம்)

**வாராந்தம் திங்கள், வியாழக் கிழமைகளில் நோன்கறபடும் நோன்பு**

நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். “திங்கள், வியாழக் கிழமைகளில் செயல்கள் அல்லாஹ்விடம் காண்பிக்கப்படுகின்றன. நான் நோன்பு நோற்ற நிலையில் எனது செயல்கள் காண்பிக்கப்பட வேண்டும் என விரும்புகிறேன்.” (அத்திர்மிதி)

**மாதத்தில் மூன்று நோன்புகள் (அய்யாமுல் பீல் எனப்படும் பிறை 13,14,15)**

அபூ தர்தா (ரழியல்லாஹூ அன்ஹூ) அவர்கள் கூறுகிறார்கள். “எனது அன்புக்குரிய தூதர் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் எனக்கு மூன்று விடயங்களை உபதேசித்தார்கள். எனது வாழ்க்கைக் காலத்தில் அவற்றைக் கைவிடாமல் செய்து வருகிறேன். அவை மாதாந்தம் மூன்று நோன்புகள், ழுஹா தொழுகை, படுக்கைக்கு முன்னரான வித்ர் தொழுகை.” (முஸ்லிம்)

ஸஹீஹூல் புகாரி, ஸஹீஹூ முஸ்லிமில் பதிவாகியிருக்கும் மற்றுமொரு நபிமொழியில். “மாதாந்தம் மூன்று நோன்புகள் நோற்பது காலமெல்லாம் நோன்பு நோற்பதற்கு ஒப்பானது” என வந்துள்ளது.

**அரபா நோன்பு**

இது குறித்து வினவப்பட்டபோது நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

“அரபா நோன்பு முந்திய, பிந்திய இரு வருடங்களின் பாவங்கள் மன்னிக்கப்பட காரணமாக அமையும்.” (முஸ்லிம்)

எனவே, இத்தகைய விஷேட சிறப்புமிக்க சுன்னத்தான நோன்புகளை முடிந்தளவு அதிகமாக நோற்கவும் அதன் காரணமாக இறை நெருக்கத்தையும் உயர் கூலிகளையும் முழுமையாக அடைந்து கொள்ளவும் திட்டமிடுவோம். வல்ல அல்லாஹ் துணை செய்வானாக!

டிசம்பர் மாத உம்ரா பதிவுகளுக்கு

“ஓர் உம்ரா மறு உம்ரா வரையிலுள்ள பாவங்களுக்குப் பரிகாரமாகும்” (புகாரி:1773)

நபி வழியில் ஹஜ் - உம்ரா செய்து இபாதத்களை திருப்தியுடன் நிறைவேற்ற

TGL TRAVELS

தொடர்புகளுக்கு

Ash. Sheikh Riskhan 0777660398
Al Haj Rizmy 0777801262
Ash. Sheikh Arshad 0777630288
Hijaz Sanoos 0777800388

டிசம்பர் விடுமுறையில் உம்ரா செல்வதற்கான பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது
இன்ஷா அல்லாஹ் டிசம்பர் முதல் வாரத்தில் இருந்து எமது குழுக்கள் புறப்படும்

இவ்வருட ஹஜ் குழுவில் செல்வதற்கு சில பதிவுகளே எம்மிடம் எஞ்சியிருப்பதால் உங்கள் பதிவுகளை துரிதப்படுத்துங்கள்

TGL Travels & Tours (Pte) Ltd.

TGL
Since 1990

Airline Ticketing Agent & Hajj - Umrah Operators

90, Chatham Street, Colombo 01. Tel: 0115341134 Fax: 0115371410
E-mail: umrah-haj@tgl.lk www.tgl.travel

Registered Hajj & Umrah Operator (MRCA/UMRAH/082/2012)

IATA
Accredited Agent

# YDP Youth Development Program

## for G.C.E A/L STUDENTS - 2013

*Change Your Life - Design Your Future*

**7 நாள் வதிவிட செயலமர்வு**

க.பொ.த (உ/த) பரீட்சையை எழுதி முடித்தவர்களுக்கு முன்னால் எழும் முதன்மையான கேள்வி "எனது வாழ்வின் அடுத்த கட்ட நகர்வு எவ்வாறு அமைய வேண்டும்?" என்பதுவே. இதோ! உங்கள் கேள்விக்கான பதிலை YDP சுமந்து வருகிறது.

YDP உங்களைப் போன்ற பல மாணவர்களது ஏக்கங்களைத் தீர்த்து வாழ்க்கைக்கான சரியான பாதையைக் காண்பித்துள்ளது.

**YDP யின் உள்ளடக்கம்:**

1. *இஸ்லாமிய அடிப்படைகள் பற்றிய அறிவு*

* இஸ்லாத்தின் தனிச் சிறப்பம்சங்கள்
* அல்குர்ஆனியக் கலைகள்
* ஹதீஸ் கலை வரலாறு
* இபாதத்களுடன் தொடர்புடைய இஸ்லாமிய சட்ட விளக்கம்
* இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகள் பற்றிய தெளிவு
* நபிகளாரின் வாழ்வியல் பாடங்களும் படிப்பினைகளும்
* வரலாற்று மனிதர்கள் (நபிமார்கள், ஸஹாபாக்கள், அறிஞர்கள்)
* சமகால இஸ்லாமிய உலகமும் அதன் எழுச்சியும்

**2. Skills Development**

* Leadership Skills
* Personality Development
* Goal Setting * Youth Counselling * Team Buliding
* Self motivation * Entertainment activities in islamic perspective

**3. Career guidance**

* Guidance on selection of your future fields

இப் பயிற்சிநெறியின் முடிவில் ஒவ்வொருவருக்கும் Department of Muslim Religious & Cultural Affairs இன் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

**இப்பயிற்சி நெறியின் முடிவில் ஒரு மாணவன்...**

* வாழ்க்கை குறித்து சிறந்த தெளிவையும் வாழ்க்கைக்கான உயர்ந்த இலட்சியத்தையும் பெற்றுக் கொள்வார்.

* இங்கு மாணவர்களிடம் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கான களம் கிடைப்பதன் காரணமாக அவருக்கே உரிய தனித்துவமான ஆற்றல்களை இனங்கண்டு கொள்வார்.

* உயர் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளுக்கான வழிகாட்டல்களைப் பெற்றுக் கொண்டு எதிர்காலத்தில் தனக்குப் பொருத்தமான துறையில் பயணிப்பார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4ம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் 08 இடங்களில் YDP பயிற்சி நெறிகள் நடைபெறும். ஒரு பயிற்சிநெறிக்கு 40 மாண வர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர். உடன் முயற்சித்தால் உங்களுக்கான இடத்தை நீங்களும் பெற்றுக் கொள்ளலாம்.

உங்களது பெயர்களைப் பதிவு செய்துகொள்வதற்கும் YDP பயிற்சிநெறியின் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய உங்கள் மாவட்டப் பொறுப்பாளர்களின் விபரம்:

**பதிவுகளுக்கு:**

- மேல் மாகாணம்: சகோதரர் அப்ராஸ் 0774565789
- மத்திய மாகாணம்: சகோதரர் றிஹான் 0771231770
- சப்ரகமுவ மாகாணம்: சகோதரர் நுஸ்றான் 0777833930
- வடமத்திய மாகாணம்: சகோதரர் தௌபீக் 0774318661
- கிழக்கு மாகாணம்: சகோதரர் இப்திகார் 0776284310
- திருமலை மாவட்டம்: சகோதரர் ஸாஹித் 0779197575
- வடக்கு, வடமேல் மாகாணம் : சகோதரர் முஆஸ் 0777203293
- ஊவா மாகாணம்: சகோதரர் புர்கான் 0777203293
- ஏனைய பிரதேசங்கள்: சகோதரர் உமர் நஷ்வ் 0772709411

திறமைகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படும்.

# 50ஆவது ஸனாபில் வகுப்பு

ஜம்இய்யாவின் தலைமைச் செயலகம் இளைஞர்களுக்காக வாராந்தம் பிரதி புதன் கிழமை தாருல் ஈமான் கேட்போர் கூடத்தில் நடத்திவரும் தொடர் ஸனாபில் வகுப்புகளின் 50 ஆவது வகுப்பு அண்மையில் தபால் தலைமைக் காரியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

ஜம்இய்யாவின் தேசியத் தலைவர் அஷ்ஷெய்க் எஸ்.எம். சுபியான் (நளீமி), பொதுச் செயலாளர், மத்திய சபை உறுப்பினர்கள் சிறப்புப் பார்வையாளர்களாகக் கலந்து கொண்ட இவ்வகுப்பில், பிரபல சன்மார்க்க சொற்பொழி வாளரான முப்தி யூஸுப் ஹனிபா அவர்கள் "மாறிவரும் சூழலில் இளைஞர்களின் சமூகக் கடமை" (Responsibi lities of Youth in Current Context) எனும் கருப்பொருளில் உரையாற்றினார். கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் இருந்து சுமார் 100 மாணவர்கள், இளைஞர்கள் இவ்வகுப்பில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.



## மர நடுகை வேலைத் திட்டம்

ஜம்இய்யா தனது 33வது வருட நிறைவை முன்னிட்டு நாடுபூராகவும் உள்ள கிளைகளில் மரநடுகை வேலைத் திட்டம் ஒன்றை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது. ஒவ்வொரு கிளையையும் சேர்ந்த ஜம்இய்யா சகோதரர்கள் அவர்களது ஊர்களில் பள்ளிவாசல்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் முதலான பொது இடங்களில் மரக் கன்றுகளை நட்டினர்.





## கிழக்கு விஜயம்

கிழக்குப் பிராந்திய ஊழியர்கள், இணை அங்கத்தவர்கள், ருகூன்களின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் தேசியத் தலைவர் உட்பட மத்திய சபை உறுப்பினர்கள் கடந்த ஜூன் 07ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை 5 நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கிழக்குப் பிராந்தியத்துக்குச் சென்றனர்.

இவ்விஜயத்தினை சிறப்பிக்கும் முகமாகவும் ஜம்இய்யத் தலபாவின் 33 வருட நிறைவையொட்டியும் கிழக்குப் பிராந்திய ஜம்இய்யாவினால் அளிகம்பை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யும் வைபவம் ஜூன் 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஜம்இய்யாவின் தேசியத் தலைவர் மாணவர்களின் கல்வி முன்னேற்றம் தொடர்பாக சிறப்புரையொன்றை ஆற்றினார்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து கல்முனை, மருதமுனை, சம்மாந்துறை மற்றும் பொத்துவில் ஆகிய அம்பாறை மாவட்ட ஜம்இய்யாக் கிளைகளுக்கும் காத்தான்குடி, ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய மட்டக்களப்பு மாவட்டக் கிளைகளுக்குமான விஜயத்தினை மேற்கொண்ட தேசியத் தலைவர் உட்பட மத்திய சபை உறுப்பினர்கள் கிளை ஸுராக்களுடைய குறை நிறைகள் மற்றும் ஊழியர்கள் களத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரில் கேட்டறிந்ததோடு அவற்றுக்கான தீர்வுகளையும் ஆலோசனைகளையும் வழங்கினர்.

## வாக்குறுதியை நிறைவேற்றல்

ஸூரதுந் நஹ்ல் 91வது வசனமும் ஸூரா மாயிதாவின் 01வது வசனமும் வாக்குறுதி நிறைவேற்றுதல் தொடர்பாக பேசுகிறது.

"அநாதைகளை பராயம் அடையும் வரை, (அவர்களை பொறுப்பேற்றிருக்கும்) நீங்கள், நியாயமான முறையிலன்றி அவர்களுடைய பொருளை நெருங்காதீர்கள். இன்னும் (நீங்கள் அல்லாஹ்விடமோ, மனிதர்களிடமோ கொடுத்த) வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். நிச்சயமாக அவ்வாக்குறுதி (பற்றித் தீர்ப்பு நாளில் உங்களிடம்) விசாரிக்கப்படும்."

(அல்இஸ்ரா: 34)

நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். நயவஞ்சகனின் அடையாளங்கள் மூன்று ஆகும்.

1. பேசினால் பொய்யுரைப்பான்.
2. வாக்குறுதியளித்தால் அதனை நிறைவேற்ற மாட்டான்.
3. நம்பினால் மோசடி செய்வான்.

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரழியல்லாஹூ அன்ஹூ)

ஆதாரம்: அல்புகாரி

எனவே, நாம் வாக்குறுதி பேணும் உயரிய பண்பை அணிகலனாகக் கொள்வோமாக!

**அஸீரா பிரவ்ஸ் - திஹாரிய**

## அழைப்பாளர்கள் தவிர்ந்து கொள்ள வேண்டிய விடயங்கள்

1. ஆயத்தம் இல்லாமல் ஒருவருக்கு பயிற்சியளித்தல்.
2. நோக்கமில்லாமல் திட்டமிடல்.
3. அறிவு இல்லாமல் மதிப்பீடு செய்தல்.
4. முயற்சியில்லாமல் பெறுபேற்றை எதிர்பார்த்தல்.
5. தகுதி இல்லாமல் பதவி உயர்வை எதிர்பார்த்தல்.

**ஜாரியா பின்த் யூசுப்**
**பாத்திமா ஸஹ்ரா பெண்கள் அரபுக் கல்லூரி**

## அறிந்து கொள்ளுங்கள்!

- ஹிஜ்ரி ஆண்டை அறிமுகப்படுத்தியவர்?
  - உமர் இப்னு கத்தாப் (ரழியல்லாஹூ அன்ஹூ)
- அல்குர்ஆன் கூறும் சபிக்கப்பட்ட மரம் எது?
  - ஸக்கூம் மரம்
- நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களிடம் இருந்த ஒட்டகத்தின் பெயர்?
  - அல்கஸ்வா
- அல்குர்ஆன் கூறும் உலோகத்தின் பெயர்?
  - அல்ஹதீத்
- 'அல்லாஹ்' என்ற திருநாமம் அல்குர்ஆனில் எத்தனை தடவைகள் இடம்பெற்றுள்ளது?
  - 2640

**அப்ரோஸ் சிதாரா**
**அத்தைபா பெண்கள் அரபுக் கல்லூரி**

## மூன்றும் திக்ர்

இறை தியானச் சோலையில்
ஓர் இனிய உலா!
திக்ர் சபைகளில் உலாவ வாருங்கள்
அதை ஓதிப் பாருங்கள்!
ஓதிடும் குறைந்த நேரத்தில்
விரிந்த பயன்கள்
நன்மைகள் நிறைந்திடும்; தீமைகள் குறைந்திடும்!
இதயங்கள் மிளிர்ந்திடும்
இல்லங்கள் ஒளிர்ந்திடும்
மரணிக்கும் நேரத்தில் கலிமா நாவில் நின்றிடும்
கல்பில் கனிந்திடும் - சுவனம் நிலைத்திடும்
நாம் ஓத நம் பிள்ளைகள் பயின்றிடும்
திக்ரின் இனிமை தொடர்ந்திடும்
எம்மை சுவனம் புக வைத்திடும்!

**அஸீனா சனூன் - பலாங்கொடை**



## சிறுவர் பூங்கா

முதல் பரிசுக்குரியவர்:

**ஏ.ஜீ. பாத்திமா அஸ்கா,**
77. D/1 அல்ஹம்றா வீதி. மருதமுனை

ஆகஸ்ட் மாத அல்ஹஸனாத் இதழைப் பரிசாகப் பெறுவோர்

| | |
|---|---|
| 1. உமர் யூஸுப் | - அகுரணை |
| 2. ஏ.ஸீ.எப். நுஸ்ரா | - உடுல்தெனிய |
| 3. எம்.ரீ.எப். அஸ்மா | -தாஹாமுஸ்லிம் மகளிர் கல்லூரி |
| 4. பஹீமா ராஸிக் | - ஹபுகஸ்தலாவ |
| 5. எம்.ஆர். பாத்திமா இனா | - மருதமுனை |
| 6. ஏ.எச்.எப். ஹப்ஸா | - மாத்தளை |
| 7. எம்.எம். ஸப்ரா | - புத்தளம் |
| 8. ரஹ்மதுன் நஜ்லா ரம்ஸான் | - பாணதுறை |
| 9. ஏ.எச்.எப். அஷ்பா | - மாவனல்லை |
| 10. இமாத் இல்யாஸ் | - பண்டாரகம |

**குறிப்பு:**

விடைகளை தபால் அட்டையில் (Post Card) மாத்திரம் எழுதி அனுப்பவும்.

# நன்றி சொன்னால் போதுமா?

நன்றி செலுத்தல் என்ற வார்த்தையைக் கேட்டால் எமக்கு நினைவுக்கு வருவது "அல்ஹம்துலில்லாஹ்" "ஜஸாகல்லாஹு" ஹைரன்! என்பவைதான். காரணம், நன்றி என்பதை வெறும் வாய் வார்த்தைகளுடன் மாத்திரம் நாம் வரையறை செய்துவிட்டோம்.

நன்றி இரண்டு வகைப்படும்:

1. அடியான் இறைவனுக்கு நன்றி செலுத்துதல்.
2. அடியான் அடியானுக்கு நன்றி செலுத்துதல்.

இன்று எம்மில் பலர் இறைவனுக்கு வாய்மொழிகளால் நன்றிகள் கூறியே களைத்துப்போய் விட்டார்கள். மற்றும் சிலர் அவற்றையும் மறந்து விட்டனர். ஆனால், நன்றி என்பது சொல்லப்படும் வார்த்தை மாத்திரம் அல்ல. அது செய்யப்பட வேண்டியதும் உணரப்பட வேண்டியதும் கூட.

ஓர் அடியான் தனக்கு இறைவன் புரிந்துள்ள அருள்களை உள்ளத்தால் உணர்ந்து, அந்த அருளைத் தானும் பயன்படுத்தி, பிறருக்கும் கொடுத்த பின் அந்த அருளுக்காக "அல்ஹம்துலில்லாஹ்" என்று கூறி அமைதி கண்டால் அந்த நன்றியின் யதார்த்தம் எவ்வாறு இருக்கும்? இதனைத்தான் நன்றிக்குரிய நாயன் நாடுகின்றான். அதிகம் விரும்புகின்றான். உதாரணமாக கல்வியை அருளாகப் பெற்ற ஓர் அடியான் அதனை ஆழமாகக் கற்று, பிறருக்கும் முறையாக கற்றுக் கொடுப்பதைக் கூறலாம்.

மனிதன் மனிதனுக்கு செய்யும் நன்றி குறித்து நபியவர்கள் "யார் மனிதர்களுக்கு நன்றி செலுத்தவில்லையோ அவர் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த மாட்டார்" எனக் கூறினார்கள்.

மனிதர்களுக்கு செய்யும் நன்றி துஆவாகவோ பிரதியுபகாரமாகவோ நலவு நாடுவதாகவோ அமையலாம். ஆனால், மனிதர்களில் அதிகமானோர் தமக்குச் செய்யப்பட வேண்டிய நன்றியை பிரதியுபகாரமாகவே எதிர்பார்க்கின்றனர். இறைவனுக்கென்று வரும்போது மாத்திரம் வார்த்தைகளுடன் வரையறை செய்துவிடுகின்றனர். இது எந்த வகையில் நியாயம்?

நாம் செய்யும் ஒவ்வோர் அமலினதும் அர்த்தங்கள் புரிந்து அடைவுகள் காண்போம்!

**அஜ்மிலா அப்துல் காதர் - ஆஇஷா ஸித்தீகா கலாபீடம்**

## அறிந்து கொள்ளுங்கள்...

1. தூண்கள் இன்றி அல்லாஹுத் தஆலா படைத்திருக்கும் அதிசயப் படைப்பு எது? **வானம்**

2. "வானத்தில் மனிதர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒளி" என்று அல்குர்ஆன் குறிப்பிடுவது எதனை? **சந்திரன்**

3. "வானத்தில் மனிதர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் விளக்கு" என்று அல்குர்ஆன் கூறுவது எதனை? **சூரியன்**

4. 'அர்ரூஹ்' என்று அல்குர்ஆனில் வர்ணிக்கப்பட்டிருக்கும் மலக்கு யார்? **ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்)**

5. கருவறையில் தங்காமல் பிறந்த 'மனிதன்' யார்?

**ஆதம் (அலைஹிஸ்ஸலாம்)**

6. ஆணின் துணையின்றி ஒரு பெண்ணுக்குப் பிறந்த நபி யார்? **ஈஸா (அலைஹிஸ்ஸலாம்)**

7. 'ஸகர்' எனும் நரகத்திற்குச் செல்வோர் யார்?

**உலகில் தொழுகையை நிலைநாட்டாதவர்கள்.**

8. தன் சமூகத்தாரிடம் 950 வருடங்கள் மார்க்கப் பிரசாரம் செய்த நபி யார்? **நூஹ் (அலைஹிஸ்ஸலாம்)**

**லப்றா அப்துல் கபூர்**
**ஆஇஷா ஸித்தீக்கா வளாகம்**

## வினா-விடைப் போட்டி-62

01. இலங்கையில் முதலாவதாக அல்குர்ஆனை மனனமிட்டு அல்ஹாபிழ் பட்டம் பெற்ற இலங்கையர் அண்மையில் வபாத்தானார். அவர் யார்?

02. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உஹுதுப் போரின்போது நபித் தோழர் ஒருவரிடம் வாளைக் கொடுத்தார்கள். அந்த ஸஹாபி யார்?

03. 'தக்வா' என்பதற்கு இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கொடுக்கும் விளக்கம் யாது?

04. ஷவ்வால் மாத ஆறு நோன்புகளை நோற்பதன் சிறப்பு பற்றி வந்துள்ள ஹதீஸைக் குறிப்பிடுக?

05. 2ஆம் அகபா உடன்படிக்கை ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு இடம்பெற்றது?

**உங்கள் விடைகளை ஆகஸ்ட் 22ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள்.**

**சிறுவர் பூங்கா**
அல்ஹஸனாத்
77, தெமடகொட வீதி, கொழும்பு-09



# ‘நூறுல் குர்ஆன்’

## எம்.ஏ. ஆதம் லெப்பை ஹஸரத்: ஒரு நினைவுக் குறிப்பு

இலங்கையின் முதலாவது ஹாபிழான ஆதம் லெப்பை ஹஸரத் அவர்கள் கடந்த 2013.05.11இல் வழமை போன்று தஹஜ்ஜுத் மற்றும் ஸுப்ஹு தொழுகைகளை நிறைவேற்றிவிட்டு வீட்டில் அல்குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தபோது வபாத்தானார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

1939இல் சம்மாந்துறை இப்றாஹீம் ஹாஜியார் முஹம்மத் அலியார் லெப்பை (முகம்மலி வட்டானை)-முஹம்மத் தம்பி மரியமுத்து தம்பதியினருக்கு கடைசி மகனாகப் பிறந்த ஆதம் லெப்பை ஹஸரத், தனது குழந்தைப் பருவத்திலேயே தந்தையை இழந்தார். தனது சகோதரனான மர்ஹூம் அல்ஹாஜ் மௌலவி இப்றா லெவ்வை (தேவ்பந்த்) அவர்களின் முயற்சியினால் தனது 9ஆவது வயதில் (1948 ஆம் ஆண்டு) இந்தியாவின் தேவ்பந்திலுள்ள தாறுல் உலூம் குர்ஆன் மனனக் கலாசாலையில் சேர்ந்தார். தாயாரின் மரணத்தைத் தொடர்ந்து சகோதரர் நாடு திரும்பவே தேவ்பந்த் நிர்வாகத்தின் மூலம் தஹ்லீமுல் குர்ஆன் மத்ரஸாவிற்கு இடமாற்றப்பட்ட ஹஸரத், இக்காலப் பகுதியில் அப்பிரதேசத்தில் நிலவிய கடுமையான உஷ்ணத்தினாலும் சின்னம்மை நோயினாலும் பாதிக்கப்பட்டார். எனினும், தனது தாயாரின் அறிவுரைக்கமைய புனித குர்ஆனை மனனம் செய்யும் பணியை அதே மத்ரஸாவில் தொடர்ந்து தனது 12ஆவது வயதில் புனித அல்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்து ஹாபிழாக வெளியேறினார், அல்ஹம்துலில்லாஹ்.

கடுமையான வறுமையிலும் சின்னஞ்சிறு வயதில் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்களைப் பிரிந்து இந்தியா சென்றார். இவ்வாறு புனித அல்குர்ஆனைக் கற்பதற்காக அவர் செய்த தியாகங்கள் ஏராளம்!

ஹாபிழாக வெளியேறிய ஹஸரத் அவர்கள், குறித்த மத்ரஸாவின் சிபாரிசுக்கமைய இந்தியாவின் திண்டுக்கல் பேகம்பூர் பள்ளிவாசல், மெட்ராஸ் மஸ்ஜிதுல் அக்பர் போன்ற பெரிய பள்ளிவாசல்களில் தராவீஹ் தொழுகை நடத்தி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். அதனைத் தொடர்ந்து ஜமாலியா மத்ரஸாவில் கிதாபு பிரிவில் சுமார் 3 வருடங்கள் கல்வி கற்ற ஆதம் லெப்பை ஹஸரத் அவர்கள், 1955இல் நாடு திரும்பி சம்மாந்துறை தைக்காப் பள்ளிவாசலில் சிறப்பாக தராவீஹ் தொழுகை நடத்தினார். மீண்டும் 1 வருடத்தின் பின்னர் இந்தியா சென்று சகாரன் பூரிலுள்ள தாருல் உலூம் மத்ரஸாவில் ஷரீஆ கல்வியை தொடர்ந்தார்.

1959ஆம் ஆண்டில் திருமண பந்தத்தில் இணைந்த ஹஸரத், தனது வீட்டிலேயே அல்குர்ஆன் போதனையைத் தொடர்ந்தார். 1970ஆம் ஆண்டு புனித ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றிய பின், இலங்கையில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட ஹிப்ழ் மத்ரஸாவின் ஸ்தாபகர் மர்ஹூம் டாக்டர் எம்.எம். மீரா லெப்பை அவர்களின் வேண்டுதலின் பேரில் தனக்குக் கிடைக்கவிருந்த ஆசிரியர் நியமனத்தையும் பொருட்படுத்தாது சம்மாந்துறை தாருல் ஹஸனாத் மனனக் கலாசாலையில் இணைந்து சுமார் 30 வருடங்கள் முழுநேரமாக பணியாற்றினார். இதன் மூலம் பல ஹாபிழ்கள் உருவாகக் காரணமாக அமைந்தார்.

தவிரவும், சம்மாந்துறை அஸ்ஸாலிஹ் பெண்கள் அரபுக் கல்லூரியில் பகுதி நேரமாக இணைந்து பெண் ஹாபிழாக்களை உருவாக்கும் பணியிலும் ஈடுபட்டார். மேலும் காத்தான்குடி, ஏறாவூர், பொத்துவில், சாய்ந்தமருது, மருதமுனை, மாவடிப்பள்ளி, இரத்தினபுரி போன்ற பல்வேறு இடங்களிலுமுள்ள ஹிப்ழு மத்ரஸாக்களில் ஹாபிழ்களை பரீட்சிப்பதற்காகவும் அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காகவும் அவற்றின் நிர்வாகத்தினரால் தொடர்ச்சியாக அழைக்கப்பட்டார்.

அன்னாரின் சேவைகளை கௌரவித்து சம்மாந்துறை தாருல் ஹஸனாத் அல்குர்ஆன் மனனக் கலாசாலையின் பழைய மாணவர்கள் ஒன்றியமும் பொது மக்களும் ஒன்றிணைந்து கடந்த 2009ஆம் ஆண்டு சேவை நலன் பாராட்டு விழாவொன்று நடத்தி அன்னாருக்கு ‘நூறுல் குர்ஆன்’ எனும் சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவித்தனர்.

2012ஆம் ஆண்டு சம்மாந்துறை பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட சாகித்திய விழாவில் அவர்களின் சமூக சேவை மற்றும் ஏனைய சேவைகளை கௌரவித்து பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அல்லாஹ்வின் திருமறையை பாதுகாக்கும் உயர்ந்த பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த அன்னாருக்கு மறுமையில் உயர்தரமான ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தை வழங்க பிரார்த்திப்போமாக, ஆமீன்!

**அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் யூ.எல். சலாஹுத்தீன் (இஸ்லாஹி) B.A**

# - தங்கத்தின் பெறுமதி குறையும்போது ஸகாத்தை நிர்ணயித்தல்
# - இரண்டு நோன்புகளை ஒன்றாகச் சேர்த்து நோற்றல்
# - தாயின் வயிற்றிலுள்ள சிசுவுக்கான ஸகாதுல் பித்ர்

அஷ்ஷெய்க் முஹம்மத் முபீர் (இஸ்லாஹி), (M.A).
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை. mufeer96@gmail.com

**வினா:** வருட ஆரம்பத்தில் நான் தங்கத்தைக் கொள்வனவு செய்யும்போது இருந்த பெறுமதியை விட தற்போது உள்ள பெறுமதி குறைவாக இருந்தால் எவ்வாறு ஸகாத் கொடுக்க வேண்டும்?

**பதில்:** தங்கத்தின் பெறுமதியை மையமாக வைத்து ஸகாத் தீர்மானிக்கப்படுவதில்லை. மாற்றமாக காலத்துக்கு காலம் மாறுபடாமல் இருக்கின்ற, என்றும் நிலையாக இருக்கின்ற ஒன்றை இஸ்லாம் அளவீடாக வைத்திருக்கின்றது. அதுதான் நிஸாப் அளவு. (85 கிராம் அல்லது 10.63 பவுண்). இதன்படி வருட ஆரம்பம் முதல் கடைசி வரை யாரிடம் 85 கிராம் அல்லது 10.63 பவுண் அளவு அல்லது அதனை விட அதிகமாக தங்கம் காணப்படுகின்றதோ அவர் நூற்றுக்கு 2.5 வீதம் ஸகாத் கொடுக்க வேண்டும். தங்கத்தின் பெறுமதி காலத்துக்கு காலம் கூடிக் குறைவது நிஸாப் அளவில் எத்தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

**வினா:** என்னிடம் வருட ஆரம்பம் முதல் கடைசி வரை 50 பவுண் தங்கம் இருந்தால் நான் எவ்வளவு ஸகாத் கொடுக்க வேண்டும்? அதனைப் பணத்தில் கொடுக்க முடியுமா?

**பதில்:** ஒருவரிடம் 10.63 பவுண் தங்கம் இருந்தால் அவர் நூற்றுக்கு 2.5 வீதம் அதாவது 0.27பவுண் தங்கத்தை ஸகாத்தாகக் கொடுக்க வேண்டும். எனவே, 50 பவுண் தங்கத்துக்கும் 1.25 பவுண் தங்கத்தை ஸகாத்தாகக் கொடுக்க வேண்டும்.

தங்கத்துக்கான ஸகாத்தினை தங்கமாக வழங்க முடியும் என்பது போல அதன் பெறுமதியையும் வழங்க முடியும் என்பது பெரும்பாலான புகஹாக்களின் கருத்தாகும். ஆனால், ஸகாத்தாகக் கொடுக்கும் பொழுது தங்கத்துக்கான அன்றைய சந்தை விலையை மையமாக வைத்து தன்னிடம் இருக்கின்ற தங்கத்தினை மதிப்பிட வேண்டும். உதாரணமாக இம்மாதம் ஒரு பவுண் தங்கத்தின் பெறுமதி 45,000 ரூபாவாக இருந்தால் நீங்கள் 56,250 ரூபாவை ஸகாத்தாகக் கொடுக்க வேண்டும்.

**வினா:** ஒரு பெண் ஷவ்வாலின் ஆறு நோன்புகளைப் பிடிக்கும்போது ரமழானில் விடுபட்ட நோன்புகளைக் கழாச் செய்வதாக நிய்யத்து வைத்து இரண்டு நோன்புகளையும் ஒன்றாகச் சேர்த்து நோற்க முடியுமா?

**பதில்:** இது பிக்ஹில் இரண்டு இபாதத்களை ஒரு நிய்யத்தில் சேர்த்தல் எனக் தருதப்படுகின்றது. இவ்வாறு செய்வதற்கு ஓர் அடிப்படை இருக்கின்றது. அது என்னவெனில், இரண்டு இபாதத்களின் வழிமுறைகள் வித்தியாசமாக அமைந்தால் அவற்றை ஒரு நிய்யத்தின் கீழ் நிறைவேற்றலாம். இரண்டு இபாதத்களினதும் நோக்கங்கள் வித்தியாசப்பட்டால் அவற்றைத் தனித்தனியாகவே நிறைவேற்ற வேண்டும்; சேர்க்க முடியாது.

உதாரணமாக, குளிப்பு கடமையான ஒருவர் வெள்ளிக்கிழமையில் கடமையான குளிப்புக்காகவும் ஜுமுஆ குளிப்புக்காகவும் நிய்யத் வைத்து குளித்தால் அவருடைய கடமையான குளிப்பும் நீங்கி ஜுமுஆ குளிப்புக்கான கூலியையும் பெற்றுக் கொள்வார். அவ்வாறே மஸ்ஜிதுக்குச் செல்கின்றவர் தஹிய்யதுல் மஸ்ஜித் தொழுகையை ழுஹர் தொழுகையின் முன்னுள்ள சுன்னத்துத் தொழுகையுடன் சேர்த்து தொழுதால் அவர் இரண்டு தொழுகைக்குமான கூலியைப் பெற்றுக் கொள்வார்.

ஆனால், ழுஹர் தொழுகையின் முன்னுள்ள சுன்னத்துத் தொழுகையையும் ழுஹர் தொழுகையும் ஒரே நிய்யத்தில் சேர்த்து தொழ முடியாது. ஏனென்றால், இங்கு ஒவ்வொரு தொழுகையின் நோக்கமும் வித்தியாசமானது. அதே போன்று பர்ளான நோன்பையும் சுன்னத்தான நோன்பையும் ஒரே நிய்யத்தில் இணைத்து நோற்க முடியாது. இதன்படி ரமழானில் விடுபட்ட நோன்பை தனியாகவும் ஷவ்வாலின் நோன்பைத் தனியாகவும் நோற்க வேண்டும். இரண்டு நோன்புகளையும் ஒரே நிய்யத்தில் சேர்த்து நோற்க முடியாது.

**வினா:** ஷவ்வாலின் ஆறு நோன்புகளையும் பெருநாளைத் தொடர்ந்து வரும் ஆறு நாட்களில் பிடிப்பதுதான் சுன்னாவா? அல்லது ஓரிரு நாட்கள் தாமதித்து பிடிக்க முடியுமா?

**பதில்:** ஷவ்வாலின் ஆறு நோன்பு மிகவும் ஏற்றமான சுன்னவாகும். இது பற்றி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், "யார் ரமழானில் நோன்பை நோற்று அதனைத் தொடர்ந்து ஷவ்வாலின் ஆறு

நோன்புகளையும் நோற்கின்றாரோ அவர் காலம் முழுவதும் நோன்பு நோற்றவர் போன்றவராவார்" எனக் குறிப்பிட்டார்கள்.

இந்த ஹதீஸுக்கு விளக்கமளித்த புகஹாக்கள் நோன்புப் பெருநாளைத் தொடர்ந்து ஆறு நோன்புளை நோற்பது மேலானதாக இருந்தபோதிலும் ஷவ்வாலின் கடைசிப் பகுதி வரை தாமதப்படுத்தி பகுதி பகுதியாகப் பிரித்துப் பிடிப்பது பிழையானது அல்ல என்ற கருத்தை முன்வைக்கின்றார்கள். காரணம் இந்த ஹதீஸில் ஆறு நோன்புகள் என்று பொதுப்படையாகவே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) குறிப்பிட்டுள்ளார்கள். அது தொடராகவோ அல்லது பெருநாளைத் தொடர்ந்துதான் நோற்கப்பட வேண்டும் எனவோ கூறவில்லை. எனவே, ஷவ்வால் மாதத்தில் எப்படியேனும் ஆறு நோன்புகளைப் பிடித்தால் அவர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியது போன்று காலம் முழுக்க நோன்பு நோற்றவர் போன்றவரே.

***வினா: தாயின் வயிற்றில் இருக்கும் சிசுவுக்கு ஸகாதுல் பித்ர் கொடுப்பது கடமையா?***

**பதில்:** உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஸகாதுல் பித்ரை தாயின் வயிற்றில் இருக்கும் சிசுவுக்குக் கொடுப்பவர்களாக இருந்தார்கள். இதனை அடிப்படையாகக் கொண்டு புகஹாக்களில் சிலர் தாயின் வயிற்றில் இருக்கும் சிசுவுக்கு ஸகாதுல் பித்ர் கொடுப்பது வரவேற்கத்தக்கது என்ற கருத்தைக் கூறினாலும், பெரும்பாலான புகஹாக்கள் சிசுவுக்கு ஸகாதுல் பித்ர் கடமையாகாது என்ற கருத்தில் ஒன்றுபடுகின்றார்கள். அதற்கு பின்வரும் நபி மொழியை ஆதாரமாக் கொள்கின்றார்கள்.

இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். "நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நோன்பாளிக்கு அவர் நோன்பு நோற்கும்போது அவர் ஈடுபட்ட கேளிக்கையான, வீணான விடயங்களிலிருந்து தூய்மையடை வதற்காகவும் மிஸ்கீன்களுக்கு உணவாகவும் ஸகாதுல் பித்ரைக் கடமையாக்கினார்கள்." (அபூ தாவூத், இப்னு மாஜா)

இந்த ஹதீஸ் ரமழானின் கடைசி நாளில் சூரியன் மறைவதற்கு முன்பு ஒரு குழந்தை பிறந்தால் அதற்கு ஸகாத் கடமையாகின்றது என்பனையும் அதன் பிறகு பிறக்கின்ற குழந்தைகளுக்கு ஸகாதுல் பித்ர் கடமை இல்லை என்பதனையும் சுட்டிக்காட்டுகின்றது. எனவே, தாயின் வயிற்றில் இருக்கின்ற சிசுவுக்கு ஸகாதுல் பித்ர் கடமையாகாது.



அபூ பரீரா

பகுதி-05

# எதிர்காலம்

நடந்தவற்றை நினைத்து வருந்துவோரும் எதிர்காலத்தில் என்ன நடக்குமோ என நினைத்து வருந்துவோரும் தம்மைத்தாமே அழித்துக் கொள்கின்றனர். அல்லாஹ்வின் நாட்டம் எதுவோ அது அந்த நேரத்தில் நடந்தே தீரும் என்பதில் சந்தேகமில்லை. மனிதனால் மொட்டொன்றை மலராக மாற்ற முடியாது. இன்று உதயமாகும் சூரியன் நாளை அதே இடத்திலிருந்துதான் அது உதயமாகும் என்று எவராலும் உறுதியாகக் கூற இயலாது. நாளை நான் உயிர் வாழ்வேன் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?

நாளை என்பது பிறக்காத ஒரு குழந்தையைப் போன்றது. பிறக்காத ஒன்றை நாம் ஏன் சந்திக்க வேண்டும். அதற்காக நாம் ஏன் எம்மை அலட்டிக் கொள்ள வேண்டும். இன்று நீ உண்பதற்கு உணவை உனக்குக் கொடுத்த அல்லாஹ் ஏன் நாளை உனக்குத் தர மாட்டான். நீ அவனை மறந்தாலும் அவன் உன்னை மறக்கவில்லையே. அவன் உன்னை மறக்கவில்லை என்பதை நீ மறந்தும் கூட அவன் உன் தாகத்திற்கு நீரையும் பசிக்கு உணவையும் தருகிறானே! அவன் உன்னை எப்போதும் உற்றுநோக்கிக் கொண்டிருக்கிறான் என்பதை மறந்து விடாதே.

இன்று ஆரோக்கியமாக இருக்கும் நீ இறைவனை நினைவுகூர்ந்தால் நாளை அவன் இதே நிலையைத் தர மாட்டானா? நான் நாளை நோயுற்று விடுவேனோ! என்ற அச்சத்தால் இன்றைய சுகமான நாளை நோயுற்றதாக கழிக்க நினைப்பது சுத்த முட்டாள்தனமல்லவா? பறவைகள் நீண்ட காலம் உயிர் வாழ்வதில்லையா? அதற்கு உணவளிப்பது யார்? தங்க இடமளிப்பது யார்? நாளைக்கென அந்தப் பறவை சேமித்ததுண்டா? நாளைக்காக அது மனம் வருந்தியதுண்டா? அந்தப் பறவையை விட இழிவானவனா நீ? நாளை உன் கையில் வரும் வரை அது உனக்குச் சொந்தமில்லை.

ஒரு குழந்தை பிறந்த பிறகுதான் அதன் பருமனுக்கேற்ப ஆடை அணிவிக்கலாம். பிறக்குமுன் ஆடையின் அளவை நிர்ணயிக்க முடியாதது போன்று நாளை எனும் பிறக்காத குழந்தைக்கு ஏன் கவலை, துக்கம் எனும் பெரிய ஆடைகளைத் தயார் செய்ய வேண்டும். பருமனை விட பெரிய ஆடைகளை தயாரிக்குமுன் நாளையை உன்னிடம் வரும்வரை விட்டுவிடு. இன்றைய தினம் இனிப்பாக வேண்டுமானால் நேற்று எனும் மரணித்த மழலையையும் நாளை எனும் பிறக்காத மழலையையும் ஒரு பக்கம் வைத்து விட்டு இன்றைய எல்லைக்குள் வாழும் பொழுது இன்று இதமாகின்றது.

# மக்கா காலம் பாடங்களும் படிப்பினைகளும்

தூதர் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தஃவா வாழ்வில் பதின்மூன்று வருடங்கள் மக்காவிலேயே கழிந்தன. அது ஹிராவில் ஆரம்பித்து மதீனாவுக்கான ஹிஜ்ரத் வரையான காலம். அதனை சத்தியத்தின் பாதையில் தூதுத்துவத்தை நிலைநாட்டுவதில் கொள்கைப்பற்று, உறுதி, சவால் என்பவற்றை எதிர்கொண்ட கதை அல்லது அநியாயக்கார சுயநலவாதிகளை எதிர்த்து சத்தியத்தை நிலைநாட்ட களமிறங்கிய வரலாறு எனக் குறிப்பிடலாம்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு நாற்பது வயதிருக்கும்போது ஆரம்பித்த இப்பணி, இத்தூதை புவியில் சுமக்கத் தகுதியான ஒரு வெற்றிப் பரம்பரையை உருவாக்கும் இலக்கோடு முதல் மூன்று வருடங்கள் இரகசியமாகவும் பின்னர் பகிரங்கமாகவும் வீறுநடைபோட்டது. அப்பொழுது முஸ்லிம்களின் எண்ணிக்கை முன்னூறை எட்டியிருந்தது.




### நபித்துவத்தின் 3-6ஆம் ஆண்டு வரையான காலம்

முஸ்லிம்கள் கடும் சித்திரவதைகளுக்கும் வேதனைகளுக்கும் சோதனைகளுக்கும் உட்பட்டார்கள். கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன; சிலர் கொலை செய்யப்பட்டார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முன்மாதிரிச் சமூகமொன்றைத் தோற்றுவிக்க 'தாருல் அர்கம்' எனும் பல்கலைக்கழகத்தை உருவாக்கியிருந்தார்கள். இக்காலத்தில் உமர் (ரழியல்லாஹு அன்ஹு), ஹம்ஸா (ரழியல்லாஹு அன்ஹு) போன்றோர் இஸ்லாத்தைத் தழுவினார்கள். இது தஃவா வரலாற்றில் புதியதொரு திருப்புமுனையாக அமைந்தது. இதனால் குறைஷிகள் சித்திரவதைகளை விட்டு விட்டு பேச்சு வார்த்தைக்கும் ஆசை வார்த்தைக்கும் களமிறங்கினார்கள்.

### நபித்துவத்தின் 6-9ஆம் ஆண்டு வரையான காலம்

நபியவர்களும் தோழர்களும் 'ஷிஃப் அபீ தாலிபில்' சமூக பகிஷ்கரிப்புக்கு உட்படுத்தப்பட்டு முற்றுகையிடப்பட்டார்கள். இதில் நபித் தோழர்களது கொள்கை உறுதியை நபியவர்கள் தெளிவாகவே கண்டார்கள்.

### நபித்துவத்தின் 9-11ஆம் ஆண்டு வரையான காலம்

நபியவர்களின் மனைவி கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களும் சிறிய தந்தை அபூதாலிபும் மரணமடைந்தார்கள். இதனால் மக்கா தஃவாவுக்கு பொருத்தமான களமல்ல என எண்ணி மக்காவுக்கு வெளியே புதிய களமொன்றைத் தேடும் பணியை மேற்கொண்டார்கள். இதற்காக மேற்கொண்ட இருபத்து ஆறு முயற்சிகளும் தோல்வியிலேயே முடிவுற்றன.

- நபித்துவத்தின் 11ம் ஆண்டு: அன்ஸார்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது தூதை ஏற்றுக் கொண்டனர்.
- நபித்துவத்தின் 12ம் ஆண்டு: அன்ஸார்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை தமது தலைவராக ஏற்று மதீனாவுக்கு அழைத்த '2ம் அகபா' உடன்படிக்கை நடைபெற்றது. மதீனாவின் விவகாரங்களுக்குப் பொறுப்பாளராக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மாறினார்கள். இஸ்லாத்துக்கும் ஒரு தேசம் கிடைத்தது.
- நபித்துவத்தின் 13ம் ஆண்டு: நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள். ஹிஜ்ரத் மொத்தம் 14 நாட்களைக் கொண்ட பயணம். 3 நாட்கள் தௌர் குகையிலும் 4 நாட்கள் கூபா நகரிலும் 7 நாட்கள் பிரயாணத்திலும் கழிந்தன.

### மக்கா கால படிப்பினைகளும் நாமும்...

1. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு மகத்துவமிகு கொள்கையை ஏற்று பூமியில் சீர்த்திருத்தப் பணியை மேற்கொண்டார்கள். அப்பணியை ஸஹாபிகள் சுமந்து அதற்காகவே வாழ்ந்தார்கள்.

- எமது சிந்தனையையும் உள்ளங்களையும் நிரப்பும் ஓர்

**நாம் கற்பனைவாதிகளாக இருக்க வேண்டிய அவசிய மில்லை. எமது எழுச்சிப் பயணத்தில் விடப்படும் பிழைகளால் நாம் பாடம் கற்க வேண்டும். தோல்விதான் உன்னைப் பலப்படுத்தும்; உனது வெற்றியை சமீபமாக்கும்.**

எழுச்சிமிக்க கொள்கைக்காக நாம் வாழத் தயாரா?

2. பொறுமை, கொள்கையில் உறுதி, பொருள் அர்ப்பணம், உயிர்த் தியாகம் என்பவற்றை எல்லாத் தூதுத்துவ சமூகமும் அனுபவித்தன. இதற்கு ஸுமையா, பிலால் (ரழியல்லாஹு அன்ஹுமா) போன்றோர் சிறந்த சான்று.

• நபிகளாரின் வாழ்வைப் பின்பற்றுவோர் என வாதிடுவோர் "பிரதேச மக்களின் எழுச்சிக்காக எதையும் அர்ப்பணிக்கத் தயாரா?" என்ற கேள்வியை மீட்டி மீட்டிக் கேட்கட்டும்.

3. எழுச்சி மற்றும் சீர்திருத்தத்தை விரும்பும் ஒரு சமூகத்தை உருவாக்க அறிவும் பயிற்சியும் அடிப்படையாகும். (உதாரணம்: தாருல் அர்கம்)

• தமது பிரதேச அல்லது நாட்டின் எழுச்சிக்காக உழைப்பவர்களுக்கு தொடர்ச்சியான பரிபூரண பயிற்றுவிப்பு அவசியம். நீ பயிற்சி பெறத் தயாரா?

4. நுணுக்கமான திட்டமிடலை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது தஃவா வாழ்வில் மேற்கொண்டார்கள். இறை வஹி கொள்கை, கோட்பாட்டையே முன்வைத்தது. அற்புதங்களை வழங்கியது. திட்டமிடலின்றி அவற்றின் விளைவை அற்புதமாக ஒருபோதும் பெற முடியாது.

இறை நம்பிக்கையுடன் இறை வஹியின் ஒளியில் எமது பிரதேசங்களின் எழுச்சிப் பயணத்தில் சீரான சிந்தனை, திட்டமிடல் அவசியம். நாம் திட்டத்துடன் செயற்படுகின்றோமா?

5. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் முஸ்லிமல்லாதவர்களோடு சகவாழ்வுடன் வாழ்ந்திருக்கின்றார்கள். ஒருபோதும் இஸ்லாம் தனித்து வாழ மாட்டாது.

• எமது எழுச்சியானது கிழக்கு, மேற்கு உலகோடு சக வாழ்வுடன் அமைந்தாலே சாத்தியமாகும்.

6. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களோ, தோழர்களோ தமக்கு குறைஷிகள் எவ்வளவுதான் அநியாயம், சித்திரவதை செய்தாலும் எந்தவொரு ஸஹாபியும் எந்தவொரு சிலையையும் உடைக்கவில்லை. குறைஷிகளது ஒன்றுகூடும் எந்தவொரு தளத்தையும் தகர்க்கவில்லை. எந்தவொரு குறைஷித் தலைவரையும் கொலைசெய்யவில்லை. சமூகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது அடிப்படையாகும்.

• எமது தேசத்துக்கெதிராக பலாத்காரம், வன்முறை கூடாது.

7. நபிகளாரின் தஃவா வரலாற்றில் பெண்ணின் பங்களிப்பு அளப்பரியது. சிலபோது அது ஆணை விட மிஞ்சியது. நபியவர்கள் குகையில் இருந்தபோது பாது காப்பளித்தது ஒரு பெண். அன்னாரை முதன் முதலில் ஏற்றுக் கொண்டது ஒரு பெண். உமரின் இஸ்லாத்திற்குக் காரணமானவளும் ஒரு பெண்.

• இஸ்லாம் பெண்ணுக்கு வழங்கியுள்ள பணியை முழு மையாக நிறைவேற்ற நாம் இடமளிப்போமா?

8. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் திட்டமிடல்களில் சில பிழைத்துமுள்ளன. அனைத்துத் திட்டமிடலின் பின்னும் முஷ்ரிக்குகள் நபிகளார் ஒளிந்திருந்த குகையைச் சென்றடைந்தார்கள். சுராகா நபியவர்களின் பயணப் பாதையை அறிந்து கொண்டான்.

• நாம் கற்பனைவாதிகளாக இருக்க வேண்டிய அவசியமில்லை. எமது எழுச்சிப் பயணத்தில் விடப்படும் பிழைகளால் நாம் பாடம் கற்க வேண்டும். தோல்விதான் உன்னைப் பலப்படுத்தும்; உனது வெற்றியை சமீபமாக்கும்.

9. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பதின்மூன்று வருட இருண்ட யுகத்தில் எதிர்பார்ப்பு எனும் ஒளி என்றும் மங்கியதில்லை. நபியவர்கள் வசித்து வந்த இரு ஒடுங்கிய குகைகள் அன்னாருக்கு பெரு வெற்றியை ஈட்டிக் கொடுத்தன.

ஹிராக் குகை- தூதுத்துவம் கிடைத்தது.

தௌர் குகை- புதிய தேசம் கிடைத்தது.

• கஷ்டங்கள் எவ்வளவுதான் உங்களைத் தீண்டினாலும் நம்பிக்கையிழக்க வேண்டாம். நிச்சயமாக கஷ்டத்தின் பின் விடுதலை இருக்கின்றது.

10. அல்லாஹ்வின் மீது கொண்ட தவக்குல்- நம்பிக்கை.

"அபூபக்ரே! நாம் இருவர் என நீர் எண்ணுகின்றீரா! அல்லாஹ் எம்முடன் மூன்றாமவனாக உள்ளான்."

• இன்று எம்மத்தியில் திட்டமிடுவோர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளாதிருக்கின்றனர். வேறு சிலர் திட்டமிடாது இறை உதவியை மாத்திரம் எதிர்பார்த்திருக்கின்றனர். இவையிரண்டும் கலந்ததே நபிகளாரின் ஈமான் ஆகும். இத்தகு திட்டமிடலுடன் கூடிய ஈமானின் மூலம் எமது எழுச்சியை சாத்தியப்படுத்துவோம்.

11. மக்கா காலத்தில் முஸ்லிம்களோடு தொடர்ந்திருந்த அடிப்படைப் பண்புகளாவன: உண்மை, அமானிதம், கச்சிதம், நம்பிக்கை, நாணயம், வாக்குறுதி மீறாமை.

• இன்று எழுச்சியை விரும்புகின்ற ஒவ்வோர் இளைஞரும் நபியவர்களின் பண்பாடுகளை அணிகலனாகப் பெற்று அவரது எட்டுக்களைப் பின்தொடர வேண்டும்.

12. மக்கா காலம் சொல்லும் ஒரு முக்கியசெய்திதான் குறைஷிகள் இத்தூதை மறுத்ததற்கான காரணங்கள். அவை வெறுமனே சுயநலம், செல்வம், பதவி, புகழ் போன்றவையே காரணங்களுக்காகவே ஆகும்.

அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். உவைஸ் (இஸ்லாஹி)



வேண்டிய முக்கிய தகைமை பொறுமையாகும்.

*"நீங்கள் பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் அல்லாஹ்விடத்தில் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறு மையாளர்களுடன் இருக்கிறான்."* **(அல்பகரா: 153)**

பொறுமைக்கான மகத்தான வெகுமதி சுவனமாகும்.

*"அவர்களின் பொறுமைக்கு நாம் சுவனத்தையும் பட்டாடைகளையும் வழங்குவோம்."* **(அத்தஹ்ர்: 12),**

மேலும் பார்க்க **(ஸூரா அர்ரஃத்: 23, 24), (ஸூரா புர்கான்: 75)**

இத்திருவசனங்கள் அனைத்தும் எமக்கு உணர்த்தி நிற்கும் பெரும் உண்மை என்னவெனில், விலை மதிக்க முடியாத சுவனத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் கொடுக்க வேண்டிய விலை பொறுமை யாகும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு அல்லாஹ் இவ்வாறு கட்டளை பிறப்பிக்கிறான்:

*"மனஉறுதிமிக்க இறைதூதர்கள் கடைபிடித்த பொறுமையை நபியே நீரும் கடைபிடிப்பீராக!"*

நபி நூஹ், நபி இப்ராஹீம், நபி மூஸா, நபி ஈஸா (அலைஹி முஸ்ஸலாம்) ஆகியோர் இறை பணியில் பொறுமையுடன் ஈடுபட்டதைப் போன்று நபியே நீங்களும் அத்தகைய பொறுமையுடன் பணிபுரியுங்கள் என பொறுமைக்கான முன்மாதிரியை அல்லாஹ் எடுத்துக்காட்டுகிறான்.

இவ்வளவு முக்கியத்துவம் பெறும் பொறுமை எனும் பண்பு முஃமினுடைய முழு வாழ்வையும் தழுவியதாக இருக்க வேண்டும்.

# சுவனத்தில் தடம்பதியச் செய்யும் பொறுமை

> இன்று நோன்பு நோற்றவர்கள் அதிகரித்த அளவில் பொறுமையாளர்கள் எமது சமூகத்தில் அதிகரிக்கவில்லை. இன்று பலர் வாழ்க்கையில் அதிருப்தியுடனும் விரக்தியுடனும் வாழ்வதைவிட மடிவது மேல் என்று நினைக்கிறார்கள். இன்னும் சிலர் உலகில் ஏற்படும் ஒரு சில கஷ்டங்களை குறிப்பிட்ட சில காலங்களுக்கு பொறுத்துவிட்டு தாம் பெரிய பொறுமைசாலிகள் என்றும் கருது கிறார்கள்.

**நோன்பு** பொறுமையின் மாதம். பொறுமைக்கான கூலி சுவனமாகும். ரமழான் சுமந்துவந்த சிறப்புக்களில் மிக முக்கியமான ஒன்று பொறுமையாகும்.

ஒரு முஃமினின் சிறப்பு அணிகலன்களில் பொறுமை பிரதானமானது. இதனை இஸ்லாம் தாய்ப்பண்புகளில் ஒன்றாகவே கருதுகிறது. குர்ஆனும் ஸுன்னாவும் மிகவும் வலியுறுத்திக் கூறுகின்ற, ஒரு முஃமினிடம் இருக்க அதற்காக அல்லாஹ் ஏற்பாடு செய்து தந்துள்ள பயிற்சிப் பாசறையே ரமழான்.

இன்று நோன்பு நோற்றவர்கள் அதிகரித்த அளவில் பொறுமையாளர்கள் எமது சமூகத்தில் அதிகரிக்கவில்லை.

இன்று பலர் வாழ்க்கையில் அதிருப்தியுடனும் விரக்தி யுடனும் வாழ்வதைவிட மடிவது மேல் என்று நினைக்

கிறார்கள்.

இன்னும் சிலர் உலகில் ஏற்படும் ஒரு சில கஷ்டங்களை குறிப்பிட்ட சில காலங்களுக்கு பொறுத்துவிட்டு தாம் பெரிய பொறுமைசாலிகள் என்றும் கருதுகிறார்கள்.

இவை அனைத்திற்கும் அப்பால் நின்று நாம் பொறுமையை விளங்கிக் கொள்ள வேண்டும். பொறுமை எமது முழு வாழ்வையும் தழுவியதாக இருக்க வேண்டும்.

**1. வாழ்க்கை ஒரு சோதனைக் களம்**

*"அவன் எத்தகையவனென்றால், உங்களில் செயலால் மிக்க அழகானவர் யார் என்று உங்களை சோதிப்பதற்கே மரணத்தையும் வாழ்வையும் படைத்தான். மேலும் அவன் யாவற்றையும் மிகைத்தவன்; மிக்க மன்னிப்பவன்."*

(அல்முல்க்: 2)

அல்லாஹ் மனித வாழ்க்கையை ஒரு சோதனைக் களமாக ஆக்கியுள்ளான். ஒவ்வொருவரும் வாழ்வில் பல்வேறு வகையான சோதனைகளை சந்திப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். வாழ்க்கையில் சந்திக்கும் அத்தனை சோதனைகளின்போதும் நிலைகுலையாமல், தைரியமிழக்காமல் அவற்றை எதிர்கொள்வதற்கு பொறுமை மிக முக்கியமானதாகும். இதில்தான் வாழ்வின் வெற்றி தங்கியுள்ளது.

வாழ்வில் பல்வேறு இழப்புக்கள், கஷ்டங்கள், நெருக்கடிகள் வருவது இயல்பு. இவற்றின் மூலம் அல்லாஹ் வாழ்க்கையை புடம்போடுகிறான்; வெற்றிக்கு தகைமைப் படுத்துகிறான். அல்குர்ஆன் இதனை இவ்வாறு சுட்டிக் காட்டுகிறது:

***"சிறிதளவு அச்சத்தாலும் பசியாலும் உடமைகள், உயிர்கள் மற்றும் விளைபொருட்கள் ஆகியவற்றில் இழப்பை ஏற்படுத்தியும் உங்களை சோதிப்போம். இந்நிலையில் பொறுமையை மேற்கொண்டவர்களுக்கு நீர் நற்செய்தி கூறுவீராக!"***

**(அல்பகரா: 153-157)**

நாம் எமது வாழ்வில் எதிர்கொள்கின்ற தீராத நோயாக இருக்கலாம், பாரிய இழப்புக்களாக இருக்கலாம், அழிவும் அனர்த்தமுமாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் இவற்றின்போது பொறுமையை கடைப்பிடிப்பதினூடாக இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெற முடியும்.

**2. இறை கட்டளைக்கு கீழ்ப்படிவதில் பொறுமை**

அல்லாஹுத் தஆலா ஏவியவற்றை எடுத்து நடப்பதற்கும் அவன் தடுத்தவற்றிலிருந்து விலகி அவனுடைய கட்டளைகளுக்கு முற்று முழுதாகக் கட்டுப்பட்டு நடப்பதற்கும் பொறுமை மிக அவசியமாகும்.

*"தொழுகையைப் பேணிவருமாறு உம்முடைய குடும்பத்திற்கு நீர் கட்டளையிடுவீராக! நீரும் அதிலே பொறுமையாக நிலைத்திருப்பீராக!" (தாஹா: 132), பார்க்க (ஸூரா மர்யம்: 65)*

ஓர் அமலை இஹ்லாஸுடன் நிறைவேற்ற பொறுமை தேவை. வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவதற்கு தடையாக நிற்கும் பொடுபோக்கிலிருந்து தவிர்ந்து, உரிய முறையில் இறை கட்டளைகளை நிறைவேற்ற பொறுமை அவசியம்.

குறித்த ஒரு செயலை நிறைவேற்றியதன் பின்னர் அதனை அடுத்தவர்களுக்கு பிரபல்யப்படுத்தி, புகழையும் அந்தஸ்தையும் எதிர்பார்த்து அவற்றை வீணடிக்காமல் இருக்க பொறுமை தேவை.

"நீங்கள் தர்மங்களைச் செய்து விட்டு சொல்லிக்காட்டியும் உள்ளங்களை நோகடித்தும் நீங்கள் செய்த தர்மங்களை பாழாக்கி விடாதீர்கள்!" என அல்குர்ஆன் சொல்கிறது.

**03. விருப்பு, வெறுப்புக்களின்போது பொறுமை**

உலக வாழ்வு அழகும் கவர்ச்சியுமிக்கதாகும். இவற்றுக்கு அடிமைப்பட்டு விடாமல் வாழ்வதற்கு பொறுமை மிகவும் அவசியமாகும். மனிதர்களுடைய உள்ளங்களில் ஏற்படும் கீழ்த்தரமான ஆசைகள், மோசமான எண்ணங்கள், பாவச் செயல்களை தூண்டும் விருப்புகள்... இவற்றின் மூலம் நடக்கும் தீமைகள் ஆகியவற்றின்போது மனதைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு பொறுமை அவசியம்.

கீழ்த்தரமான ஆசைகளினால் இழிவடைந்து செல்லாமல் இருப்பதற்கும் உலக ஆசையில் மதிமயங்கி கடைசியில் முகம் குப்புற விழாமல் இருப்பதற்கும் பொறுமை தேவை. நோன்பு இவற்றுக்கான மிகச் சிறந்த ஒரு பயிற்சியாகும்.

உணவையும் பானத்தையும் அடக்குவது அல்ல நோன்பு. ஆசைகளையும் அடக்கிக் கொள்வதுதான் நோன்பு. இதன் மூலம் பொறுமை ஏற்படுகிறது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "பிறரை கீழே வீழ்த்துபவன் வீரனல்ல, தனக்கு கோபம் ஏற்படும்போது அதனை அடக்கிக் கொள்பவன்தான் உண்மையான வீரனாவான்."

**04. இஸ்லாமியப் பணியில் பொறுமை**

இஸ்லாமியப் பணி என்பது நபிமார்கள் உலகத்தில் ஆற்றிய பணியாகும். இப்பணி இன்று எம்மீது சுமத்தப்பட்டுள்ளது. இதனை நிறைவேற்றும்போது பல்வேறு சிரமங்கள், கஷ்டங்கள் வரும். இவற்றின்போது சோர்ந்து விடாமல் நிமிர்ந்து நிற்பதற்கு பொறுமை தேவை.

எமது பணியை மக்கள் அங்கீகரிக்காதபோது ஏற்படும் மனக் கஷ்டம், எமக்கு எதிராக சொல்லப்படும் மோசமான வார்த்தைகள், இப்பணிக்கு எதிராக தீட்டப்படும் சதித் திட்டங்கள்... இவற்றின் மூலம் வரும் கஷ்ட துன்பங்களின்போது பொறுமையும் நிதானமும் அவசியமாகும்.

இப்பணியில் தொடர்ந்து ஈடுபடும் பாக்கியம் பொறுமையுடையோருக்கு மட்டுமே கிட்டும்.

**05. பிற மனிதர்களுடனான உறவின்போது பொறுமை**

பிற மனிதர்கள் எமக்குத் தீங்கிழைத்தாலும் துன்பங்கள் கொடுத்தாலும் அவர்களுக்கு நன்மை செய்வதற்கு பொறுமை தேவை.

நாம் வாழும் சமூகத்தில் வித்தியாசமான இயல்புகள், தன்மைகள் கொண்டவர்களை நாம் காண்கிறோம். எல்லோரது இயல்புகளும் குணங்களும் தன்மைகளும் எம்மைக் கவரும் வகையில் இருப்பது சாத்தியமில்லை.

(53ஆம் பக்கம் பார்க்க)

# சமூகவியலாளர்களுக்கான பல்கலாசாரக் கல்வி

முஸ்லிம் பண்பாட்டு, கலாசாரக் கல்வி மற்றும் சமய நிறுவனங்களில் இறைபணியாளர்களிடம் இருக்க வேண்டிய ஆளுமைத் திறன்கள் பற்றிய சமூகவியல், உளவியல் பார்வையும் பரிந்துரைகளும்

ஏ.ஜே.எல். வஸீல் (M.Ed, M.Phil)
உதவி விரிவுரையாளர்
மெய்யியல், உளவியல் ஆலோசனைப் பிரிவு,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
வருகைதரு விரிவுரையாளர் (கல்வி, விஷேட தேவைகள்சார் கல்வி)
திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம்

***முஸ்லிம்*** பண்பாட்டுக் கல்வி நிலையங்களில், மக்களை சமூகமயப்படுத்தும் பணியை கதீப் அல்லது பேஷ் இமாம், நம்பிக்கையாளர்கள், முஅல்லிம்கள், முஅத்தின், இறையில்ல ஏனைய ஊழியர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் கடமைகளும் பொறுப்புக்களும் சமூகத்தில் இவர்களிடம் தங்கியிருப்பவர்களை சமூகமயப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மனிதனை ஆளுமைமிக்கவனாக மாற்றும் நிறுவனங்களான பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் அடிக்கடி சீர்திருத்தப்படுகின்றன. அதன் முக்கியத்துவம் பற்றியும் அடிக்கடி பேசப்படுகிறது. அதேவேளை, சமய நிறுவனங்களின் சமூக முக்கியத்துவம் பற்றி பேசப்படாதிருப்பது வருந்தத்தக்கதாகும். அந்த வகையில் முஸ்லிம் கல்வி நிலையங்களாகக் கருதப்படும் மத்ரஸா (ஆரம்ப குர்ஆன் பாடசாலை), பள்ளிவாசல் முதலானவற்றில் கடமையாற்றும் இறைபணியாளர்களின் முக்கியத்துவம் பற்றி இவ்வாய்வுக் கட்டுரை பேசுகின்றது.

சமூகமயமாக்கலில் சமய நிறுவனங்களும் எண்ணக்கருக்களும்

1. மஸ்ஜித் 2. மத்ரஸா 3. தலைமைத்துவம் 4. ஆளுமைத்திறன்
5. தொழில்வாண்மை

**மஸ்ஜித்- பள்ளிவாசல்**

மஸ்ஜித் என்ற அரபுப் பதம் 'ஸஜதா' என்ற மூலச்சொல்லிலிருந்து பெறப்பட்டது. ஸஜதா என்றால் சிரம்பணிதல் என்று அர்த்தம். இறைவனின் மகத்துவம், கண்ணியம், மேலாதிக்கம், மனிதனின் அடிமைத்துவம், கீழ்ப்படிவு, நன்றியுணர்வு முதலியவற்றை ஸஜதா வெளிப்படுத்தும். இச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதே மஸ்ஜித் என்பதாகும். மஸ்ஜிதுகளின் முதன்மையான பொருள் அல்லாஹ்வை வணங்கி வழிபடும் இடம் என்பதாகும்.

இஸ்லாமிய வரலாற்றுப் பார்வையில் சமூக, அரசியல், கலாசார நடவடிக்கைகளின் மையமாகவும் பள்ளிவாசல் இருந்து வந்துள்ளது. அவ்வகையில் மஸ்ஜித்கள் நிர்வாக ஆலோசனை மன்றங்களாகவும் கல்வி நிலையங்களாகவும் நீதிமன்றங்களாகவும் நூல்நிலையங்களாகவும் வைத்திய முகாம்களாகவும் செயற்பட்டு வந்துள்ளன. இவ்வாறான சமூக வகிபாகமுடைய மஸ்ஜிதில்தான் இறைபணியாளர்கள் (இமாம், முஅல்லிம், பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள், முஅத்தின்) கடமை புரிகின்றனர்.

> இத்தகைய இரண்டு நிறுவனங்களும் இஸ்லாமியக் கல்வி, கலாசார விழுமியங்களை கட்டியெழுப்பும் மிக உன்னதமான கல்வி நிறுவனங்களாக முஸ்லிம் சமூகத்தில் பார்க்கப்படுகின்றன. இதனையே இஸ்லாமும் வலியுறுத்தி நிற்கின்றது. இத்தகைய நிறுவனங்களின் மூலம் இன்றை நவீன உலகம் எதிர்நோக்கும் பல்வேறு சவால்களுக்கு முகங் கொடுக்கின்ற ஆளுமைகள் உருவாக்கப்பட வேண்டும்.

மஸ்ஜித் நிர்வாகிகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றி குர்ஆன் பின்வருமாறு பேசுகிறது:

*"அல்லாஹ்வின் மஸ்ஜிதுகளை பரிபாலனம் செய்யக்கூடியவர்கள் அல்லாஹ்வின் மீதும் இறுதிநாள் மீதும் ஈமான் கொண்டு தொழுகையைக் கடைப்பிடித்து ஸகாத்தை முறையாகக் கொடுத்து அல்லாஹ்வைத் தவிர வேறெதற்கும் அஞ்சாதவர்கள்தாம். இத்தகையவர்கள்தாம் நிச்சயமாக நேர் வழி பெற்றவர்கள்."* (9: 18)

அவ்வாறாயின் இன்று பள்ளிவாசல்களை நிர்வகிப்போர் பற்றிய எமது பார்வை என்ன என்பது பற்றி சிந்தித்து மீள்பார்வை செய்ய வேண்டிய தேவை உள்ளது. குறிப்பாக மஸ்ஜிதுகளை நிர்வகிப்போர் அதற்குத் தகுதியானவர்களா? எனப் பார்த்து தகுதியானவர்களை இனங்கண்டு நியமிக்க வேண்டும். இது குடிவழியாயினும் (பரம்பரை) இம்முறை கவனிக்கப்பட வேண்டும்.

**இமாம்**

மஸ்ஜிதுகளில் தொழுகையை முன்னின்று நடத்துபவர் பொதுவாக இமாம் என அழைக்கப்படுகின்றார். இவர் கண்ணியமிக்கவரும் சிறப்புமிக்கவரும் பொறுப்புவாய்ந் தவரும் ஆவார். இமாம்கள் குர்ஆன், ஹதீஸ் அடிப்படை யில் மக்களுக்கு வழிகாட்டுவதோடு மக்களுக்கு தலைமை தாங்கி அவர்களைத் தூய்மைப்படுத்தி பயிற்சியளிப்பர். இமாம் மஸ்ஜித் தலைவராக மட்டும் இமாம், தலைவராக அல்லாமல் குடியிருப்பில் வாழும் மக்கள் அனைவருக்கும் தலைமைத்துவம் வழங்கி, வழிகாட்டுபவராகத் திகழ வேண்டும். ஆனால், இன்று மஸ்ஜித் வணக்க வழிபாடு களுக்கான ஒரு தளமாக மாத்திரம் சுருங்கி விட்டது.

**மத்ரஸா- ஆரம்ப அறநெறிப் பாடசாலை**

மத்ரஸா எனும் அரபுச் சொல் கல்விக்கூடம், பாடசாலை என்று பொருள்படும். முதர்ரிஸ் (ஆசிரியர்), போதனாசிரி யர் என்ற சொற்களும் இம்மூலத்திலிருந்தே பிறந்தவை. இஸ்லாமிய வரலாற்றில் மத்ரஸாக்கள் உலகக் கல்வியையும் மார்க்கக் கல்வியையும் பண்பாட்டு விழுமியங்களையும் ஒருங்கே வழங்கும் பிரதான பணியை நிறைவேற்றி வந்தன. அத்தகைய மத்ரஸாக்களில் கற்றவர்களான இப்னு ஸீனா, இப்னு ருஷ்த் (மருத்துவம்), உமர் கையாம் (வானியல்), நிஸா முல்த்துாஸி (அரசியல்), தேச சஞ்சாரி இப்னு பதூதா (வரலாறு) முதலானோர் உலகறிந்த முஸ்லிம் பல்துறை அறிஞர்களாகத் திகழ்ந்தார்கள். அவ்வாறாயின், இவர்களைப் போன்று ஏன் இன்றைய மத்ரஸாக்களில் அறிஞர்கள் உரு வாவதில்லை?

பொதுவாக சமூகத்தில் மத்ரஸாக்கள் இரண்டு வித மாகப் நோக்கப்படுகின்றன. ஒன்று பாடசாலை செல்லும் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குரியவை, மற்றது உயர் இஸ்லாமியக் கல்வியைப் போதிப்பதை இலக்காகக் கொண்டவை. இத்தகைய இரண்டு நிறுவனங்களும் இஸ் லாமியக் கல்வி, கலாசார விழுமியங்களை கட்டியெழுப்பும் மிக உன்னதமான கல்வி நிறுவனங்களாக முஸ்லிம் சமூகத்தில் பார்க்கப்படுகின்றன. இதனையே இஸ்லாமும் வலியுறுத்தி நிற்கின்றது. இத்தகைய நிறுவனங்களின் மூலம் இன்றை நவீன உலகம் எதிர்நோக்கும் பல்வேறு சவால்களுக்கு முகங் கொடுக்கின்ற ஆளுமைகள் உருவாக்கப்பட வேண்டும்.

**சமூகமயமாதல்**

சமூகம் ஏற்றுக்கொண்ட நோக்கம், குணவியல்புகளை இளம் சந்ததியினருக்கு ஏற்படுத்தி தனியொருவருக்கு அவரது ஆளுமையை விருத்தி செய்து சமூகத்திற்கேற்ற பிரஜையாக மாற்றுதல் சமூகமயமாக்கலாகும். இவ் வெண்ணக்கரு இஸ்லாத்தில் மிகப் பரவலாக இடம் பெற்றுள்ளது. இதற்கான சிறந்த கருவிகளாக பள்ளிவாசல், மத்ரஸா, மிம்பர் மேடை என்பன அமைந்துள்ளன.

**தற்காலத்தில் இறைபணியாளர்களின் தொழிலை தொழில்வாண்மைமிக்கதாக மாற்றும் நுட்பங்கள்**

தற்காலத்தில் இறை இல்லங்களில் கடமையாற்று பவர்களின் அந்தஸ்து குறைவடைந்து செல்வதாக உள் ளது. அவ்வாறாயின் அதனோடு தொழில்வாண்மை என் பது இணைக்கப்பட வேண்டும். இது சமய நிறுவனங் களுக்கு விதிவிலக்கல்ல. ஒருவர் குறித்த தொழிலை அல்லது விஷேட பணியைப் புரிவதற்கு அவசியமான கல்விசார் தகுதிகளையும் திறன்களையும் கொண்டிருத்தல் தொழில் வாண்மை எனப்படும். இது கிடைக்கின்றபோது தொழில் மதிப்புள்ளதாக மாறும். இதனை இறைபணியாளர்களிட மும் ஏற்படுத்தலாம்.

1. இறைவன் மீதான அச்சம்.
2. தொழில் சார்ந்த அர்ப்பணிப்பு.
3. தொழிலுக்கான அறிவும் திறனும் இருத்தல்.
4. கொள்கைகளை செயற்பாடாக பிரயோகிக்கக்கூடிய ஆற்றல்.
5. தொழிலுக்கான புதிய பயிற்சிகள்.
6. ஒழுக்கக் கோவை, சட்டதிட்டம் மூலம் நிர்வகித்தல்.
7. தன் பணியில் மேலும் விசேடத்துவம் பெறல்.
8. தனித்துவமான கலாசாரம், இலக்கியம் காணப்படல்.
9. தனிப்பட்டவர்களின் சாதனைகள் மதிக்கப்படல்.
10. பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்றிருத்தல்.
11. முறைசார் அனுபவமும் பயிற்சியும் பெற்றிருத்தல்.

மேற்குறிப்பிட்ட தொழில்வாண்மைக் காரணிகளோடு கீழ்வரும் சமய நிறுவன பொறுப்புதாரிகள் பின்வரும் ஆளுமைப் பண்புகளை பெறுதல் அவசியமாகும். அவை வருமாறு:

**1. மத்ரஸா- முஅல்லிம் (ஆசிரியர்)**

★ மனனம் செய்யும் ஆற்றல்
★ குர்ஆன் பற்றிய பொதுவான விளக்கமும் தஜ்வீத் முறையில் அறிவும் திறனும்
★ குழந்தை உளவியலும் சிறுவர் உளவியலும்
★ சிறுவர் பற்றிய விளக்கம், சிறுவர் உரிமை
★ கவாச்சியான முன்மாதிரி
★ தேசிய, சர்வதேச வாசிப்பாற்றல்
★ மொழிப்புலமை இருத்தல்
★ கல்வித் தகைமை (மௌலவி, ஹாபிழ், பயிற்சி)
★ குற்றமும் தண்டனையும் பற்றிய விளக்கம்
★ அரபு எழுத்தணிக் கலை
★ நல்லுறவு பேணல்
★ நவீன கற்பித்தல் முறைகள்
★ முரண்பாடு தீர்த்தல் தொடர்பான விளக்கம்
★ புகைத்தல், வெற்றிலை பாவிக்காதிருத்தல்
★ பர்ளான, சுன்னத்தான விடயங்களை செயற் பாட்டு ரீதியில் நடைமுறைப்படுத்தல்.

(தொடரும், இன்ஷா அல்லாஹ்)

**(ஷெய்க் கர்ளாவியின் தகிய்யா...)**

18ஆம் பக்கத் தொடர்

சிரியாவில் யார் வெற்றி பெறுவர் என்ற விடயத்தை அலசிப் பார்ப்பது இக்கட்டுரையின் பரப்புக்கு வெளியிலுள்ள ஒன்று. இஸ்ரேல் அரபுகளுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான பல யுத்தங்களில் வெற்றி பெற்றமை பலரை ஆச்சரியத்துக்கு உட்படுத்தாதது போன்று, சிரியாவில் ஒரு வேளை ஹிஸ்புல்லாஹ் வெற்றி பெற்றால் நான் ஆச்சரியப்பட மாட்டேன். ஏனெனில், பேரழிவு தரும் ஆயுத பலம், நுட்பமிக்க யுத்தப் பயிற்சி, மிக நுணுக்கமான திட்டமிடல் ஆகியவற்றிலே இத்தகைய யுத்த வெற்றிகள் தங்கியுள்ளன.

உலகக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, எவரிடம் மேற்படி தகைமைகள் உள்ளனவோ அவரது கையே யுத்தத்தில் மேலோங்கி நிற்கும். இருப்பினும், சத்தியத்துக்கும் அசத்தியத்துக்கும் எதிரான போராட்டத்தில் திண்ணமாக சத்தியமே வெற்றி பெறும். திரிபுபடுத்தப்பட்ட கோட்பாடுகள், பொய்களைப் பரப்புதல், குர்ஆனின் பெயரால் கதைகளை இட்டுக்கட்டல் ஆகியவை மீது கட்டியெழுப்பப்பட்ட ஒரு கொள்கை சத்தியத்தின் காப்பாளனாக ஒரு போதும் இருக்க முடியாது.

முஃமின்களின் அணிக்கே முடிவான வெற்றி கிடைக்கும்.

*"சத்தியம் வந்து விட்டது. அசத்தியம் அழிந்து விட்டது. நிச்சயமாக அசத்தியம் (அதன் இயல்பில்) அழிந்தே தீரும்."* (அல்இஸ்ராஃ: 81)

## (சுவனத்தில்)...

50ஆம் பக்கத் தொடர்

இவ்வாறு பல இயல்புகளைக் கொண்டவர்களுடனும் இணங்கி, தொடர்ந்தும் சமூக உறவைப் பேணியவாறு வாழ்க்கைப் பயணத்தை தொடர பொறுமை அத்தியவசியமாகும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"மனிதர்களுடன் கலந்து வாழ்கின்றபோது அவர்களின் மூலம் ஏற்படும் தீங்குகளை சகித்துக் கொள்கின்ற ஒரு முஃமின், மனிதர்களுடன் கலந்துறவாடாத, அவர்களால் ஏற்படும் தீங்குகளைச் சகித்துக் கொள்ளாத விசுவாசியைவிடச் சிறந்தவராவார்." (அத்திர்மிதி)

மக்களுடன் உறவாடி பொறுமையாளர்களாகத் திகழும் போது மனித உள்ளங்களை சம்பாதித்துக் கொள்ள முடியும். பொறுமையின் மூலம் எதிரிகளைக் கூட நண்பர்களாக மாற்ற அல்குர்ஆன் வழிகாட்டுகிறது.

"நன்மையும் தீமையும் சமமாக மாட்டா. (ஆதலால் நபியே!) எது மிக அழகானதோ அதைக் கொண்டு தீமையைத் தடுத்துக் கொள்வீராக! அப்போது எவருக்கும் உமக்குமிடையே பகைமை இருந்ததோ அவர் உமது உற்ற நண்பரைப்போல் ஆகிவிடுவார்." (புஸ்ஸிலத்: 34,35)

இவ்வாறு பொறுமை குறித்துச் சொல்லும்போது, எமக்கு இழைக்கப்படும் அநீதி, பாரபட்சம் ஆகியவற்றின் போது எதுவும் பேசாமல் மௌனித்துச் செல்வதுதான் பொறுமையென்று கருதிவிடக் கூடாது. இஸ்லாம் கோழைத்தனத்தை வன்மையாகக் கண்டிக்கிறது.

இன்பத்திலும் துன்பத்திலும், செல்வ நிலையிலும் ஏழ்மையிலும் பொறுமை அவசியம்.

பிர்அவ்ன் தனது வாழ்க்கையில் எல்லா வசதிகளையும் பெற்றிருந்தான். ஆனால், பொறுமையை இழந்தான். அல்லாஹ்வை நிராகரித்துச் சென்றான். சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களும் அனைத்து வசதி வாய்ப்புக்களையும் பெற்றிருந்தார்கள். ஆனால், அவர் பொறுமையிழக்கவில்லை. "இவை அனைத்தும் எனது இரட்சகனின் அருட்கொடைகள்; நான் நன்றி உடையவனா அல்லது நிராகரித்தவனா என்பதை சோதிப்பதற்காகவே அல்லாஹ் எனக்குத் தந்திருக்கிறான்" என்று கூறினார்கள்.

பொறுமை முழு வாழ்வையும் தழுவியதாக ஒரு சமூகத்திடம் காணப்படும்போது அச்சமூகம் ஒருபோதும் அவமானமுறவோ, இழிவடையவோ மாட்டாது. அத்தகையோருடன் அல்லாஹ் எப்போதும் இருப்பான். இது இறைவனின் வாக்காகும். இப்படி ஒரு தகைமை கிடைக்கும்போது அது அவனை சுவனத்தில் நுழைவிக்குமல்லவா?

எனவே, ரமழான் எம்மை இவ்வுயர் அந்தஸ்திற்கு அழைத்துச் செல்லுமா? உணவையும் பானத்தையும் குறித்த சில நேரங்களில் தடுத்துக் கொள்ளும் சம்பிரதாயத்துடன் நிறுத்தி விடுமா?

## சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்கு உதவி கோருகிறார்

இலக்கம் 10/1, யோனக்க மாவத்தை, பாணதுறையைச் சேர்ந்த எஸ்.எப். முஹம்மத் றலீன் (வயது-29) என்பவர் தனது இரு சிறுநீரக செயற்பாட்டையும் இழந்து, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு உடனடியாக சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டுமென கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வைத்தியர் ஏ.எல்.எம். நசார் தெரிவித்துள்ளார். இதற்காக O+ (பொசிடிவ்) வகையைச் சேர்ந்த சிறுநீரகமும் சத்திர சிகிச்சைக்காக 20 இலட்சம் ரூபாய் பணமும் தேவைப்படுகின்றது. இவ்வளவு பெரும் தொகையை திரட்ட முடியாது சிரமப்படும் இவரது குடும்பத்தினர், நலன் விரும்பிகளிடம் உதவியை எதிர்பார்க்கின்றனர்.

**மேலதிக விபரங்களுக்கு: 0755268646**

**வங்கிக் கணக்கிலக்கம்:**

**S.F. Sihan, Sampath Bank,**
**Ac-No: 115154067042**

# ‘இஜ்திஹாத்’ கோட்பாடும் நடைமுறையும்

## நூல் குறித்த சில அறிமுகக் குறிப்புகள்

ஏ.எம்.எம். மன்சூர் (M.A), பணிப்பாளர், கதீஜதுல் குப்ரா மகளிர் உயர் கல்வி நிறுவனம், வடதெனிய




கலாநிதி எம்.ஏ.எம் சுக்ரி தனது அணிந்துரையில் சொல்வதுபோல அஷ்ஷெய்க் நவாஸ் ஸனூர்தீன் விரிவான வாசிப்பும் ஆழமான பகுப்பாய்வும் தர்க்கரீதியான அணுகலும் கைவரப் பெற்ற ஓர் அறிஞர் என்பதை அவரது உரைகளில்கூட நான் அவதானித்துள்ளேன். இஸ்லாத்தின் உயிர்ப்புக்கும் மறுமை வரை அது நிலைத்திருப்பதற்கும் காரணமாக அமைகின்ற ‘இஜ்திஹாத்’ பற்றிய சிந்தனைகளின் தொகுப்பே அவரது முதல் நூலாக அமையப்பெறுவது உடுநுவரை மண்ணும் மத்திய மலைநாடும் ஜாமிஆ நளீமியாவும் உருவாக்கிய அறிவுச் சுடராய் அவர் பிரகாசிப்பதை ஊர்ஜிதம் செய்கிறது.

ஐந்து தலைப்புகளில் இஜ்திஹாத் பற்றி ஆய்வு செய்யும் இந்நூலில் பதப் பிரயோகம் பற்றிக் குறிப்பிடும் (ج), ஹா(ح), தால்(د) ஆகிய மூன்று எழுத்துக் களினதும் அடியாகப் பிறக்கும் ஜிஹாத், இஜ்திஹாத் எனும் இரு பதங்களும் இஸ்லாமிய ஷரீஆவின் உயிர்ப்புக்கு துணையாகும் அடிப்படைகளாகின்றன எனக் குறிப்பிடும் கருத்து முஜ்தஹித்களின் எழுதுகோல்களும் முஜாஹித்களின் போராட்டங்களும் ஒன்றோடொன்று இணைந்து சமூக எழுச்சிக்குத் துணை நிற்பதை தெளிவுபடுத்துவதாகும்.

கலாநிதி ஹஸன் அஹ்மத் மர்ஆ அவர்களது வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டு இஜ்திஹாத் எனும் பதத்தை வரைவிலக்கணப்படுத்தும் பொறுப்பு வாய்ந்த பணியை ஆசிரியர் அழகுற இலகுபடுத்தித் தருகிறார்.

இஜ்திஹாத் பற்றிய கருத்தோட்டத்தோடு படிமுறையாக அமைத்துச் செல்லும் ஆசிரியர், இஜ்திஹாதுக்கான சட்ட அங்கீகாரம் இஜ்திஹாதின் வகைகளை அடுத்து வரும் ஷரீஆ விடயங்களுக்குள் உளவியல் ரீதியான ஓர் அணுகுமுறையைப் பிரயோகிப்பதும் அதிலும் குறிப்பாக அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஆகிய அடிப்படைகளையும் அவற்றை அடியொட்டிச் சென்ற அறிஞர் பெருமக்களது வழிகாட்டல்களையும் கொண்டு, குழந்தைகளின் வளர்ச்சிப் படிகளுக்கேற்றவாறு வாழ்க்கைக்குள் இட்டுச் செல்லும் ஒரு புதுமையான அனுபவத்தைத் தரும் அந்த நூலின் பாங்கு நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டியது.

இஜ்திஹாத் செய்யத் தகுதி பெறுவோரும் அதன் படித்தரங்களும் எனும் இரண்டாவது அத்தியாயம், இஜ்திஹாத் வேண்டி நிற்கும் மகத்தான பண்புகளைக் கோடிட்டுக் காட்டுகிறது. அறிவும் அதன் பிரயோகமும், அவற்றைக் கொண்டோரின் அழகிய பண்பாகும். ஒன்றிணைந்த ஆளுமைக்குரியோராக வாழ்ந்து மக்களை வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய முஜ்தஹித்களது மகத்தான வரலாற்று சமூகத்தின் சில துளிகளாய் மூன்றாவது அத்தியாயம் குறிப்பிடும் இஜ்திஹாதின் பரிணாமம் அமைந்துள்ளது. அது வாசகரின் அறிவுத் தாகத்தை அதிகரிக்கச்செய்கிறது.

மூன்றாவது அத்தியாயத்தின் தொடராக அமையும் பிக்ஹின் பொற்காலம் நான்காவது அத்தியாயமாக அமைகிறது. இங்கு நூலாசிரியர் ஹிஜ்ரி 2ஆம் நூற்றாண்டு முதல் 4ம் நூற்றாண்டு மத்திய பகுதி வரை பல்வகைப்பட்ட பங்களிப்புகளை இஜ்திஹாத் துறையில் செய்துள்ள ஒன்பது முஜ்தஹித்களின் சில வரலாற்றுத் துளிகளைத் தெளித்து வாசகரின் அறிவுத்துறை வேட்கையைத் தட்டிக் கொடுக்கிறார். இந்த அத்தியாயத்தின் இறுதியில் இந்த நூற்றாண்டு வரை தொடரும் துன்பியல் தொடராய் காணப்படும் இஸ்லாமிய பிக்ஹில் ‘தேக்கமும் விளைவுகளும்’ எனும் உப தலைப்பாக முத்திரையிட்டு மூன்று பக்கங்களுக்குள் சுருக்கித் தரும் வரலாற்றுக் குறிப்பு, உண்மையில் நூலாசிரியரின் எதிர்கால எழுத்துலகப் பணியில் தேவைப்படும் பாரிய பங்களிப்புக்கான அழைப்பாய் அமையுமெனக் கருதுகிறேன்.

இறுதி அத்தியாயம், இஜ்திஹாதின் சமகாலச் செல்நெறிகள் எனும் தலைப்பில் இன்று முஸ்லிம் உலகம் எதிர்நோக்கும் நவீன சவால்கள் மத்தியில் பல்வேறு வாழ்க்கைத் துறைகளில் உருவாகியுள்ள நிலைகளை அடிப்படையாகக் கொண்டு இஜ்திஹாதின் அவசியத்தை வலியுறுத்தும் நிஜங்கள் பேசப்படுகின்றன. இங்கு எமது ஆய்வின் துறைசார்ந்த இஜ்திஹாத்கள் பெறும் முக்கியத்துவம் பற்றிய சில அறிமுகக் குறிப்புகள் மாத்திரமே இடம்பெற்றன என நூலாசிரியர் குறிப்பிடுவது, நூலாசிரியரின் எதிர்கால எழுத்துப் பணியின் இலக்கை வகைப்படுத்துவதாகவே எனக்குத் தோன்றுகிறது.

அவரது முன்னுரையில் குறிப்பிடப்படுவதுபோல, இந்நூல்:

1. பிக்ஹு பற்றிய ஒரு பொதுவான வாசகன்.
2. ஜீ.சீ.ஈ. உயர் தர வகுப்பு மாணவன்.
3. அங்கு பிக்ஹு கற்பிக்கும் ஆசிரியர்.
4. G.A.Q, B.A தரத்தில் பிக்ஹுக்கான உசாத்துணை என்பன பயன்படக்கூடிய ஒரு கருவூலமாக அமையும் என நம்புகிறேன்.

இறுதியாக, ஒரு முஸ்லிம் பெரும்பான்மைச் சமூகமொன்றின் பிரதிநிதியாக வாழும் வேளையில் அவனுக்குரிய சட்ட ஒழுங்குகள் எவ்வாறு அமையுமோ அதற்கு சற்றும் குறைவில்லாத வகையில் சிறுபான்மைச் சமூகமொன்றின் பிரதிநிதியாக அவன் வாழும்போதும் அவனுக்குரிய சட்ட ஒழுங்குகளை வரைந்து வழங்கும் அடிப்படையாக இஜ்திஹாத் சமகாலத்தில் வாழ்கிறது என நூலாசிரியர் முடிவுரையில் குறிப்பிடுவது இந்நூல் தரும் மகத்தான செய்தியின் முத்துத் துளியாகும்.

**"டடி!** பெருநாளைக்கு இன்னம் எத்தின நாள்?" ஷீமா கேட்டாள். "அஞ்சு நாள்" அஹ்மத் சொல்லவும் "ஒன்டு... ரெண்டு... மூனு... நாலு... அஞ்சு..." இத்தின நாள் சரிதானே! அப்ப பெருநாள் கிட்ட வந்திட்டுது." முகமெல்லாம் சிரிப்பு, "அப்போ நான் மருதோண்டி போடவேணுமே!" மருதோன்றியின் ஞாபகம் வரவும் உம்மாவைத் தேடி ஓடினாள்.

நோன்புக்கு முன்பு தொடங்கிய பெருநாள் உடுப்பு வாங்கும் படலம் இன்னும் முடிவதாயில்லை. நோன்பில் உடுப்பு வாங்கும் வேலையை வைத்துக் கொள்வதில்லை என ஒவ்வொரு வருடமும் அஹ்மத் முடிவெடுப்பார். அவர் வைக்கும் முற்றுப்புள்ளியைத் தொடரிசைக் குறியாக மாற்றிவிடுவர்கள் மனைவியும் பிள்ளைகளும். "இதக் கொஞ்சம் பாருங்களேன். அழகுதானே! புதுசா வந்த டிசைனாம். இந்த க்ரீன் எனக்குப் புடிச்சிருக்கு" கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்துப் பழக்கி விட்டார். இப்போது மட்டும் எப்படிக் குறுக்கே நிற்பது? இப்படி மாறிமாறி ஒவ்வொன்றாகக் கேட்டுக் கொண்டேயிருந்தார்கள்.

"டடி... பெருநாளைக்கு உம்மும்மா, வாப்பும்மா எல்லாரையும் எங்கட ஊட்டுக்கு வரச் சொல்லுங்களேன்" என்றான் ஸைத்.

"நாங்க ஒவ்வொரு முறையும்தானே கூப்பிடுற. அவங்க வரமாட்டாங்க மகன்" என்றால் யமீனா. "பெருநாள் அந்திக்கு இல்லாட்டி அடுத்த நாளைக்குத்தான் அவங்களப் பாக்கப் போக வேண்டி வரும்"

"ஏன்ட ப்ரென்ட்ஸ் எல்லாரையும் லஞ்சுக்கு வரச் சொல்லுவோமே!" என்றார் அஹ்மத்.

"டடி, இது நல்ல ஐடியா" மகள் ஷஹாமா அவரது ஐடியாவை வரவேற்றாள். வியாபாரத் தொடர்பின் மூலம் அஹ்மதுக்கு நிறைய நண்பர்கள் இருந்தனர். அவர்களில் பலர் குடும்பசகிதம் வந்துபோவதுண்டு. "டடி! அப்துல்லா அங்கள், ரிஸா அங்கள் எல்லாரும் வாரதானே" துள்ளிக் குதித்தாள் ஷீமா. "இன்ஷா அல்லாஹ் டடியிட ப்ரென்ட்ஸ் எல்லாரையும் கூப்பிடுவோமே!"

அன்றிலிருந்து பெருநாள் ஏற்பாடுகள் பற்றி அடிக்கடி பேசினார்கள். பெரிய இரண்டு மாடி வீடு, சுற்றி வர அழகிய தோட்டம். எத்தனை பேர் வந்தாலும் இடப் பிரச்சினை ஏற்படாது.

"பெமிலியக் கூப்பிட்டா சின்னப் புள்ளைகளும் வருவாங்களே. பெருநாளைக்கு சின்னப் புள்ளைகளுக்குக் குடுக்க கிப்ட் வேணும்" உம்மாவிடம் சொன்னாள் ஷஹாமா. "டடிக்கிட்டக் கேளுங்கோ" என்றாள் யமீனா. டடியிடம் கேட்டது மட்டுமல்லாமல், அவரைக் கூட்டிக் கொண்டு போய் வாங்கிக் கொண்டே வந்து விட்டாள் ஷஹாமா. அவற்றை ஷீமா உரிமை கொண்டாட விடாமல் பாதுகாப்பது பெரும்பாடாய்ப் போய்விட்டது.

"இதெல்லாம் தங்கச்சிட தான். ரிஸா அங்கள்ட ஸப்னா பபாக்கு ஷிஹாமுக்கு அப்துல்லா அங்கள்ட ரினோஸா தாத்தாக்கு எல்லாம் தங்கச்சி கிப்ட் குடுக்கப் போறாம்" ஷஹாமா சொல்லவும் ஷீமாவுக்குப் பெருமையாக இருந்தது.

"மினிஸ்டரும் வாறாரா?" யமீனா ஆவலோடு கேட்டாள். "பாப்போம் அவருக்கு வர நேரமிருக்குமோ தெரியா" என்றார் அஹ்மத். வீடு வழமையாகவே பளிச் என்றுதான் இருக்கும். என்றாலும் வேலைக்காரர்கள் எல்லா இடங்களையும் பார்த்துப் பார்த்து துடைத்துத் துப்பரவு செய்தார்கள்.

"யமீனா இங்க பாருங்களேன். இந்த ஸோபாவுக்குக் கீழ தூசு. ஒழுங்கா க்ளீன் பண்ணச் சொல்லுங்களேன்.

# அவர்கள் வருகிறார்கள்...



இப்படி இருந்தா வாரவங்க என்னப் பத்தி என்ன நெனைப் பாங்க!" யமீனா வேலைக்காரியைக் கூப்பிட்டு அந்த இடத்தைக் காட்டினாள்.

"ஓங்கட ப்ரெண்ட் பாருக்க மிச்ச நாளா ஒன்டுக்கும் கூப்பிடல்லையே! நாளைக்காவது கூப்பிடுங்களேன்"

"நானும் கோல் பண்ணிப் பாத்தேன். அவன் குடும்பத் தோட உம்ராக்குப் போயிட்டானாம். அது சரி கோக்கி நானா அந்திக்கே வருவார். கரீம் தேவையான சாமான்களை யெல்லாம் வாங்கிக் கொண்டு வருவான். வாரவங்களக் கவனிக்கிறதுதான் ஒங்கட பொறுப்பு" என்றார் அஹ்மத்.

"சின்னவங்களப் பாருங்களேன். கிப்ட் பெக் பண்ணு றதுல அவங்களும் பிஸி!" சொல்லிச் சிரித்தாள் யமீனா.

பெருநாள் விடிந்தது. கோக்கி நானாவும் உதவியாளும் தோட்டத்தில் பின்புறமாக உள்ள சமையலறையில் பிஸியாக இருந்தனர்.

"நானா, வேலைய நிப்பாட்டிட்டு வீட்டுக்குப் போங்கோ. குளிச்சி பள்ளிக்குப் போயிட்டு வந்து வேலையைச் செய் யுங்கோ" குளித்துவிட்டுப் பள்ளிக்குப் போகத் தயாராகிக் கொண்டிருந்த அஹ்மத் சொன்னார். "உண்மதான் குளிச்சி ரெடியாக நேரம் சரி. அவசரமாப் போகோணும்" உதவி யாளைத் துரிதப்படுத்தினார் கோக்கி நானா.

அஹ்மத் குடும்ப சகிதம் போய்த் தொழுது விட்டு வந் தார். உற்சாகம் கரை புரண்டோடியது. கண்ணாடிக்கு முன்னால் அடிக்கடி போய் நின்று தனது உடையின் அழகைப் பார்த்துப் பார்த்து ரசித்தாள் சின்னவள் ஷீமா. ஸைத் உம்மாவும் வாப்பாவும் மாமாமாரும் தந்த பெருநாள் சல்லியை எண்ணிக் கொண்டிருந்தான்.

ழுஹர் தொழுகை முடிந்தது. அழைப்பு மணி ஒலித்தது. ஸைத் ஓடிப்போய்க் கதவைத் திறந்தான். "யாரன் மகன்?" உள்ளேயிருந்து வந்த யமீனா கேட்டாள்.

"அந்த நொண்டிப் பக்கீர் நானா. பெருநாளன்டும் வந்திக்கிறதப் பாருங்களேன் உம்மா. பத்து ருவாத் தாங்கோ"

"ஹா... ஹா... இன்டைக்கு நல்ல நாள். ஒரு அம்பது ரூவாக் கொடுத்தனுப்புங்கோ" என்று மகனிடம் பணத்தை நீட்டினாள். இந்த ஆரவாரம் கேட்டு மேலிருந்து ஓடி வந்தார் அஹ்மத்.

"யாரு பெல் அடிச்ச?"

"அந்த நொண்டிப் பக்கிரு. அம்பது ரூவாக் குடுத்தாப் போதும்தானே!" யமீனா கேட்டாள்.

"மகன் அதக் குடுக்க வேணாம். கொஞ்சம் நில்லுங்கோ" அவசரமாக வாயிற் கதவை நோக்கிப் போனார் அஹ்மத்.

"அஸ்ஸலாமு அலைக்கும் பக்கீர் நானா. வாங்கோ! வாங் கோ!" அவரது கைகளைப் பிடித்து அழைத்து வந்தார் அஹ்மத். யமீனாவுக்கு எரிச்சலாக இருந்தது.

"நல்ல மனுஷர் நாலு பேர் வார நேரத்தில் இந்த மனுஷன் இந்தப் பக்கீரையும் இருக்கச் சொல்ற என்னத் துக்கு? இவருக்கு ஒன்டுமே வெளங்குதில்ல" அவள் புறு புறுத்தாள்.

கதவு திறந்தே கிடந்தது. அழைப்பு மணியை அழுத்த வேண்டிய அவசியம் யாருக்கும் இருக்கவில்லை. விருந் தினர்கள் வரத் தொடங்கினார்கள். அஹ்மத் உற்சாகமாக அவர்களை வரவேற்றார். யமீனா திகைத்துப்போய் நின்றாள்.

நாட்டாமை ஸயீது நானாவும் குடும்பமும் செருப்புத் தைக்கும் பரீதின் குடும்பம் வெற்றிலைக் கடை வைத் திருக்கும் பொடி நோனாவும் பேரப் பிள்ளைகளும் ஆட்டோ டிரைவர் சந்திரசிறியின் குடும்பமும் கோக்கி நானாவின் மனைவியும் மகனும் செல்லையாவும் வேலம் மாவும் குப்பை கொண்டு போகும் லாபிர் நானாவும் மகளும் எனத் தொடராக வந்து கொண்டேயிருந்தார்கள்.

"தொரே! ஷேர்ட் எப்பிடி? நீங்க வாங்கித் தந்ததுதான்" அஹ்மதின் காதருகில் மெல்லச் சொன்னார் லாபிர் நானா. அவரது முதுகில் அன்பாய்த் தட்டி விட்டு யமீனாவைப் பார்த்தார். அவள் இன்னும் இயல்பு நிலைக்கு வரவில்லை. அவள் எதிர்பாராதது நடந்து கொண்டிருக்கிறது. நேரத்தோடு சொல்லியிருந்தாள் அவள் உடன்பட்டிருக் கவே மாட்டாள்.

"யமீனா, இவங்கெல்லாம் எங்கட ப்ரெண்ட்ஸ் தானே! ஒவ்வொரு நாளும் இவங்க எங்களுக்கு ஒதவிக் கொண்டி ருக்கிறாங்கதானே! அவங்களுக்கு ஸலாம் சொல்லி வரவேற்க வேணுமே. சுணங்காம சாப்பாட்டுக்குக் கூட்டிப் போங்க." யமீனா உணர்ச்சியில்லாமல் தலையாட்டி னாள்.

ஷஹாமா நிலைமையைப் புரிந்து கொண்டாள். ஷீமாவுக்கும் ஸைதுக்கும் விளக்கினாள். மூவரும் வந்திருந்த பிள்ளைகளுக்கு கிப்ட் பார்சல்களை பங்கிடத் தொடங் கினார்கள். யமீனா ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக் கொண்டு விருந்தினர்களை சாப்பாட்டுக்கு அழைத்தாள்.

பெருநாள் விருந்து விமரிசையாக நடந்து கொண்டிருந்தது.


ஓர் அரிய சந்தர்ப்பம்

கண்ணில் வெள்ளை படர்தல் நோய்க்கான
சத்திர சிகிச்சை (Cataract Surgery)

கட்டணம் ரூபா 9500.00

விஷேட வில்லை தேவைப்படின்

கட்டணம் ரூபா 15000.00

குவைத் வைத்தியசாலை புத்தளம்
தொடர்புகளுக்கு:
0322266480, 0777272107, 0773171720

மாதம் இருமுறை கத்னா
செய்யப்படும் 2950.00 மட்டுமே

ஆகஸ்ட் 24ஆம் திகதிக்கான பதிவுகளுக்கு
முந்திக் கொள்ளுங்கள்

# 'சதிவழி சென்று...

-சுஹைனா கையூம்-

அல்ஹஸனாத்தின் ரமழான் சிறப்பிதழ் ரமழானின் மான்பினை விளக்கும் கருவூலமாய் அமைந்திருந்தது.

"பெண்கள் ரமழானைச் சிறப்பாகப் பயன்படுத்த சில வழிகாட்டல்கள்" சிறப்பாயுள்ளது.

'ஒலிபெருக்கிப் பாவனை' குறிப்பில் இன்றைய கால கட்டத்தில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளை விளக்கியுள்ளார் அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். பளீல் (நளீமி) அவர்கள்.

ஒலிபெருக்கி இன்று ஒரு தேசிய பிரச்சினையாகி விட்டது. பெரும்பான்மை சமூகத்தின் தூக்கத்தைக் கெடுத்துவிட்ட தாகக் கூறிக் கொள்கின்றார்கள்.

ஊரிலுள்ள எல்லாப் பள்ளிவாசல்களிலும் ஒலிபெருக்கி, பாவனைக்கு வந்து விட்டது. போட்டி போட்டுக் கொண்டு 'அதான்' ஒலி எழுப்பப்படுகின்றது. மூன்று நிமிட 'அதான்' முப்பது நிடம் வரை நீடிக்கின்றது.

ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் பற்றிய சுருக்க அறிமுகம், 'இப்தார் பண்டிகை' ஆகிய கட்டுரைகள் பயனுடையன.

'சதிவழி சென்று, நல்வழி பெற்ற கதை'யில்

"நான் வெவ்வாறு இஸ்லாத்தில் நுழைந்தேன் என்பது பல கபட திட்டங்களின் ஒரு கதை. நான் திட்டம் தீட்டி னேன்; நான் அங்கம் வகித்த குழுவும் திட்டம் தீட்டியது; அல்லாஹ்வும் திட்டம் தீட்டினான்; திட்டம் தீட்டுவதில், அல்லாஹ் மிகச் சிறந்தவனாக இருக்கின்றான்." என்று குறிப்பிட்டுக் காட்டும் முன்னாள் கிறிஸ்தவரான சகோதரி ஷரிபா கார்லோ, எப்படி இஸ்லாத்தில் இணைந்து கொண் டார் என்பதைக் கதையாகச் சொல்லிக் காட்டுகின்றார்.

"முஸ்லிம் பெண்களும் 20ஆம் நூற்றாண்டின் சுதந் திரக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்ற அவா எனக் கிருந்தது. இதற்காக அவர்களை வழிநடத்த வேண்டும் என்று நினைத்தேன். காரணம், முஸ்லிம் பெண்களை நலி வுற்று ஒடுக்கப் பெற்ற ஒரு குழுவாகவே தொலைக்காட் சிகளில் பார்திருக்கிறேன்" என்கிறார் அவர்.

எந்த அளவுக்கு ஊடகங்கள் இஸ்லாத்திற்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை இக்கூற்று மெய்ப்பிக்கின்றது.

இதற்குச் சவால் விட எம்மிடையே எந்த மீடியாவும் இல்லாதிருக்கின்றதே!

இதுவரை எத்தனையோ மேற்குலகத்தார் இஸ்லாத் தைத் தழுவிய காரணக் குறிப்புக்கள் அவ்வப்போது, அல்ஹ ஸனாத்தில் வெளிவந்துள்ளன. அவற்றைத் தொகுத்து நூல் வடிவாக்கி வெளியிடுவதோடு, குறிப்பாகச் சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டால், அதுவும் ஒரு தஃவா பணியாக அமையுமென்று நினைக்கின்றேன்.

# பாராட்டும் ஆக்கபூர்வமான விமர்சனமும்...

-ஷாறா-

அங்கக் குறைபாடுகளுடன் பிறந்த குழந்தையைப் பார்க்கும் தாயைப் போலத்தான் சென்ற இதழில் வெளிவந்த எனது 'ஒரு விடியலில்' சிறுகதையைப் பார்க்க வேண்டியிருந்தது. சொற்கள், வசனங்கள் விடுபட்டு, சொற்கள் திரிபடைந்து, இரு பந்திகள் ஒன்றாக இணைந்து ஒருவர் சொல்வது இரண்டாகப் பிரிக்கப்பட்டு எத்தனையோ சிதைவுகள். "எங்கட கஷ்டம் உங்களுக்கு வெளங்குவதில் லையா?" என்று மிஸ்கீன் கேட்பது பிரசுரமாகியிருக்கும் விதத்தில் ஹதியா கொடுப்பவர் சொல்வது போலவே இருக்கிறது.

வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற் காகவே இதை எழுதுகிறேன். ஏனெனில், அல்ஹஸனாத் எனது சிறுகதையை குறைபாடுகளுடன் பிரசுரித்தது என்று எழுத எனக்கு வேதனையாக இருக்கிறது.

இதற்கு முன் அல்ஹஸனாத் எனது பத்தொன்பது சிறுகதைகளை ஒழுங்காகப் பிரசுரித்தது. அதற்கெல்லாம் நன்றி தெரிவித்து, பாராட்டி எழுதாமல் இருந்துவிட்டு, பிழையானபோது மட்டும் சுட்டிக்காட்டி எழுதுவது நியாயமில்லை.

இதேவேளை அல்ஹஸனாத் வாசகர்களுக்கு இன்னு மொன்றையும் சொல்லலாமென்று நினைக்கிறேன். பாராட்டுவதும் உற்சாகப்படுத்துவதும் ரஸூலுல்லாஹ் வின் அழகிய ஸுன்னாவாகும். தான் உருவாக்கிய சமூகத்தில் இதனை அவர்கள் தொடர்ந்து கடைபிடித்து வந்தார்கள். அதனால் மிகச் சிறந்த ஆளுமைகளை அவர் களால் உருவாக்க முடிந்தது. இந்தப் பண்பை நாங்கள் தொலைத்து விட்டு நிற்கிறோம்.

அல்ஹஸனாத் மாதாந்தம் ஆயிரக்கணக்கான பிரதி கள் விற்பனையாகின்றன. அவற்றை ஆகக் குறைந்தது ஒரு லட்சம் பேராவது வாசிக்கிறார்கள்.

ஒரு சஞ்சிகையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானவை வாசகர்களின் கடிதங்களாகும். பாராட்டல், ஆக்கபூர்வமாக விமர்சித்தல் அந்தச் சஞ்சிகை மேலும் மேலும் வளர உரமாக அமையும். ஒரு லட்சம் பேரில் ஒரு ஐந்து வாசகர்களாவது இந்தப் பணியைச் செய்ய முன்வருவதைக் காணோமே!

இனியேனும் வாசகர்கள் கவனத்திற் கொள்வார்களா?

# நிகாஹ் சேவை

## மணமகன் தேவை

களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமும் கொண்ட தையற் கலையில் தேர்ச்சி பெற்ற க.பொ.த. சாதராண தரம் வரை கற்ற மணமகளுக்கு (வயது 35, உயரம் 5', 3") மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமுமுள்ள 35-43 வயதுக்கிடைப்பட்ட மணமகனை அவரது பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தாரமிழந்தோரும் விண்ணப்பிக்கலாம்.

**தொடர்புகளுக்கு: 077 7551882**

களுத்துறை மாவட்டம், தர்ஹா நகரைச் சேர்ந்த தரம் 10 வரை கல்வி கற்ற மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமுமுள்ள உடலில் ஏற்பட்ட நோயின் காரணமாக உயரமான இடங்களில் ஏறுவதற்கு சிரமப்படுகின்ற ஆனால், தனது வேலைகளை சுய மாக செய்யக்கூடிய தையல், பின்னல் ஆக்கத்திறன் கொண்ட மணமகளுக்கு (வயது 26) மார்க்கப்பற்றும் தொழிலுமுள்ள 40 வயதுக்குட்பட்ட பொருத்தமான மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 077 3987629**

கொழும்பைச் சேர்ந்த நல்லொழுக்கமும் மார்க்கப்பற்று முள்ள AAT, CMA படித்த மணமகளுக்கு (வயது 24, உயரம் 5' 4") மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமும் கொண்ட 32 வயதுக் குட்பட்ட படித்த தொழில் புரியும் பொருத்தமான மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 077 5238218**
**asproposal55@gmail.com**

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த மேல் மாகாண முஸ்லிம் அரச பாடசாலையில் கடமையாற்றும் மார்க்கப்பற்றும் நல் லொழுக்கமுமுள்ள மணமகளுக்கு (வயது 31) அரசாங்க அல்லது சொந்தத் தொழில் புரியும் மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகளுக்கு சொந்த வீடு உண்டு.

**தொடர்புகளுக்கு: 077 9286545**

கண்டி மாவட்டத்சை் சேர்ந்த நல்லொழுக்கமும் மார்க்கப் பற்றும் கொண்ட உயர் கல்வித் தகைமையுடைய அரசாங்கத் தொழில் புரியும் மணமகளுக்கு (வயது 31, உயரம் 5') மார்க்கப் பற்றுள்ள படித்த தொழில் புரியும் பொருத்தமான மணமகனை ஆசிரியப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். கண்டியை அண்மித் தவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு: 077 1369235 (காலை 7-8.30 க்குட்பட்ட நேரத்தில் தொடர்பு கொள்ளவும்)**

வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த தந்தையை இழந்த உயர் தரம் வரை கற்ற மௌலவியா மணமகளுக்கு (வயது 22 உயரம் 5' 2") பொருத்தமான மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 077 0470899**

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த உயர் தேசிய ஆங்கில டிப் ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்து ஆங்கில ஆசிரியை யாகப் பணியாற்றும் மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 30) பொருத்தமான மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். **தொடர்புகளுக்கு: 077 6289589**

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த கா.பொ.த. உயர் தரம் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்ற நல்லொழுக்கமும் மார்க்கப்பற்றுமுள்ள மணமகளுக்கு (வயது 29, உயரம் 5' 3") 35 வயதுக்குட்பட்ட மார்க்கப்பற்றுள்ள பொருத்தமான மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். **தொடர்புகளுக்கு: 077 6020076**

களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த மார்க்கப்பற்றும் நல் லொழுக்கமும் உள்ள கௌரவமான, எளிமையை விரும்பும் Acountancy stage-ii, CMA Stage-ii தேர்ச்சி பெற்ற மணம களுக்கு (வயது 29, உயரம் 5' 3") தகுந்த துணையை பெற் றோர் (தந்தை ஓய்வு பெற்ற அதிபர், தாய் ஆசிரியை) எதிர்பார்க் கின்றனர். **தொடர்புகளுக்கு: 071 8219767**

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த தஃவாப் பணியில் ஈடுபா டுள்ள க.பொ.த. உயர் தரம், தாதியர் பயிற்சி நெறி என்பவற் றைப் பூர்த்திசெய்துள்ள மணமகளுக்கு (வயது 25 உயரம் 4' 11") நல்லொழுக்கமுள்ள பொருத்தமான துணையை எதிர்பார்க் கின்றனர். **தொடர்புகளுக்கு: 0777 907611**

கேகாலை மாவட்டம், மாவனல்லையைச் சேர்ந்த ஆசிரிய டிப்ளோமா பட்டம் பெற்ற ஆங்கிலம், கணனியில் தேர்ச்சியுள்ள மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமுமுள்ள ஜமாஅத் வேலைகளில் ஈடுபாடுள்ள வெள்ளை நிறமுடைய ஹபாயா அணியும் மணம களுக்கு (வயது 22, உயரம் 5' 3") தகுந்த துணையை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சஊதி, கட்டாரில் உயர் தொழில் புரிபவர் களும் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு: 0777 957034, 071 7321248**

அநுராதபுரம் மாவட்டத்தில் வசிக்கும் மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமுமுடைய தனியார் துறையில் ஆசிரியையாகக் (Special Training) கடமையாற்றும் மணமகளுக்கு (வயது 32, உயரம் 5' 2") படித்த, தொழில் புரியும் மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். அநுராதபுரம் மாவட்டத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு: 025 7910507, 071 5546318**

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த க.பொ.த. உயர் தரம் வரை கல்வி கற்ற மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமுமுள்ள திருமணம் முடிக்காத மணமகளுக்கு (வயது 33, உயரம் 5' 3") மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க் கின்றனர். தகுந்த காரணங்களுக்காக விவாகரத்துப் பெற்ற பிள்ளைகளற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**தொடர்புகளுக்கு: 0777 874 984**




# ENGLISH SKILLS DEVELOPMENT

**இப்பொழுது பம்பலப்பிட்டி - நுகெகொடை - தெமட்டகொடை**

## ஆங்கிலம் கதைக்க மட்டும் விரும்புகின்றவர்களுக்கு

கொப்பி, புத்தகம் இல்லாமல் கதைக்கமட்டும் விஷேட பயிற்சிகள் - கதை, கட்டுரை, போட்டி, விவாதம், பேச்சு விரைவில் ஆங்கிலம் கதைப்பதற்கு உத்தரவாதம். 9-12 வரை 3 மாதம் 27,000/=

## தொழில் புரிந்துக் கொண்டிருப்பவர்களுக்கு

சனி, ஞாயிறு, மாலை வகுப்புக்கள் தொழில் உயர்வு அடைவதற்கும் திறமையாக செயற்படுவதற்கும் விஷேட பயிற்சிகள் காலை முதல் மாலை வரையிலான வகுப்பு 3 மாதக் காலம் 24,000/=

## வெளிநாடு, PR, மைக்ரேசன், உயர்கல்விக்கு அவசியமான IELTS வரையிலான வகுப்புக்கள்

- வெளிநாடு, PR, மைரேசன், உயர்கல்விக்கு அவசியமான IELTS வரையிலான வகுப்புக்கள்
- வெளிநாட்டு உயர்கல்விக்கும், இலங்கையில் உயர்கல்வி கற்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும்
- தூதரகங்களுக்கு, நேர்முகப்பரீட்சைகளுக்கு தொழில் வாய்ப்புக்கும் விஷேட கவனத்துடன் 3 மாதகாலம் சனி, ஞாயிறு கிழமை நாட்களில் 27,000/=

**18-08-2013 முன் பதிவுகளை மேற்கொள்ளவும்**

- CD, மல்டிமீடியா, புரஜக்டர், UK, புத்தகங்களும் கேம்பிரிஜ்(UK) பட்டதாரி ஆசிரியர்களால் வகுப்பு நவீன தொழில் நுட்பங்களுடன் நடைபெறும்.
- முற்றிலும் குளிரூட்டப்பட்ட வகுப்புகள்
- விபரங்கள் அறிந்துக் கொள்வதற்கான T.P: 0776346913 S.M.S செய்து Email விலாசத்தை அனுப்பிவைக்கவும்.
- Missed Call செய்யவும்.
- S.M.S மூலம் வீட்டு விலாசத்தை அனுப்பிவைத்தால் விபரங்களை தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும்.
- தூரபிரதேசத்திலிருந்து வருகை தருவதற்கு கஷ்டப்படுகின்றவர்கள் வங்கி விபரங்களை அறிந்து ரூபா 1000/- வங்கியில் வைப்பு செய்ய முடியும்.

LONDON COLLEGE

## LONDON COLLEGE OF HIGHER STUDIES PVT LTD

0711 60 10 40 / 0776 34 69 13

0774 32 31 31 / 0778 588 777

0772 166 222 / 0774 833 444

ISO Certified 9001&2008

# A/L இன் பின்னர்.....
# 3 மாத கற்கைநெறியுடன் நீங்களும் பொறியியல் துறையினுள் நுழைந்திட ...

கிழக்கிலங்கையில் **MEP & Civil ENGINEERING** கற்கை நெறிகள் மூலம் கட்டார், சவூதி அரேபியா, ஓமான் & UAE போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் **100,000/-** லிருந்து **175,000/-** மேல் சம்பாதிக்கக் கூடிய உயர் சம்பளத்துக்கான வேலை வாய்ப்புக்களை இரண்டு வருடத்துக்கு மேல் வழிகாட்டிவரும் முன்னனி கல்வி நிறுவனமாகும். தொழில் வழிகாட்டலுக்கான **100%** பயிற்சி நெறியை **OCEAS College** இப்பொழுது **Maruthamunai, Akkaraipattu & Oddamavadi** ஆகிய இடங்களில் வழங்கிக்கொண்டிருகின்றது.

## MEP Engineering Services




இப் பயிற்சி நெறியானது **Building Services** துறையில் **MEP Draftsman / MEP CAD Operator / MEP QS** ஆக மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட **100%** பயிற்சி நெறியாகும்.

**Note: Free Auto CAD Study**

இப் பயிற்சி நெறியில் இணையும் மாணவர்களுக்கு **Auto CAD Free** ஆக கற்றுக்கொடுக்கப்படும்.

## MEP Quantity Surveyor

இப் பயிற்சி நெறியானது **Building Services** துறையில் **Mechanical QS / Electrical QS / Plumbing QS** ஆக மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட **100%** பயிற்சி நெறியாகும்.

## Practice Quantity Surveyor

இப் பயிற்சி நெறியானது **Engineering Contractions** துறையில் **CIVIL Quantity Surveyor** ஆக இலங்கையிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் வேலை செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட **100%** பயிற்சி நெறியாகும்.

**077 94 230 64 | www.oceas.lk | 075 94 230 64**

எமது கல்வி நிறுவனத்தில் அம்பாறை மாவட்ட மாணவர்கள் மட்டுமல்லாமல் வெளி மாவட்ட மாணவர்களும் கல்வி கற்பதே சிறப்பம்சமாகும்.



| MSM. AROOS | MRM. RINAZ | MUM. RUZLAN | MR. WAZEER | MI. EJAZ AHMED | SM. MAYIS | AMM. RIFKI | MAM. INFAS |
|---|---|---|---|---|---|---|---|
| Kegalle | Kandy | Akurana | Matale | Matale | Madampe | Madampe | Puttalam |

**ISO 9001 & 2008** சான்றிதழ்களுடன் Professional கற்கை நெறிகளான **MEP Q/S** யும், **Civil Q/S** யும், **MEP Draftsmen** களையும் மத்திய கிழக்கு நாடுகளில் 10 வருடத்துக்கு மேல் வேலை செய்து அனுபவமிக்க விரிவுரையாளர்களைக் கொண்டு பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தல்.

**OCEAS**
OXFORD COLLEGE OF ENGINEERING APPLIED STUDIES

மருதமுனை
அக்கரைப்பற்று
ஓட்டமாவடி

மிக விரைவில்
கண்டி யிலும்....
OCEAS

தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

CERTIFIED ISO 9001:2008


edexcel | UNIVERSITY OF WOLVERHAMPTON

# சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்

## UK Degree in

## Marketing
## Business Management
## Human Resources Management

- பகுதி / முழு நேர பாடநெறியை தொடரும் வாய்ப்பு
- உங்கள் தொழில் தகைமையை கூட்டிக் கொள்வதற்கான அரிய வாய்ப்பு
- இலகு தவனை கட்டண முறைமை
- பட்டப்படிப்பு வரை இலங்கையிலேயே நிறைவு செய்ய முடியும்
- நவீன கற்றல் சூழலில் கற்பதற்கு ஓர் அரிய வாய்ப்பு





Macro Ads

www.bcas.lk | ISO 9001:2008 CERTIFIED | 14 Years of Trust & Excellence in Higher Education

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

| | | |
|---|---|---|
| **Corporate Office** | 32, Dharmarama Road, Colombo 06, Sri Lanka. | **T:** 0112 559255 |
| **Kandy Campus** | 344, Peradeniya Road, Kandy, Sri Lanka. | T: 081 2224731 |
| **Batti Campus** | 294 1/4, Trinco Road, Batticaloa, Sri Lanka. | T: 065 2228451 |
| **Wayamba Campus** | 103, Dambulla Road, Kurunegala, Sri Lanka. | T: 037 2221144 |
| **Jaffna Campus** | 16, Point Pedro Road, Jaffna, Sri Lanka. | T: 021 2219910 |
| **Qatar Centre** | PO Box: 35406, No: 36, Al-Ain St, Hilal, Doha-Qatar. | T: +974 44366572 |

*Building Careers - Transforming Lives*

Registered as a News Paper in GPO/QD/27/NEWS/2013

Printed by AJ Prints (Pvt) Ltd 44, Station Road, Dehiwala

ISO 9001 : 2008 CERTIFIED IT INSTITUTE

TURNKEY IT CAMPUS Join the No.1

# இலங்கையின் மிகப்பெரிய ஹார்ட்வெயார் நெட்வர்க் பயிற்சி நிலையம்

IT துறையில் அதிகூடிய ஊதியம் பெறக்கூடிய NETWORK துறையில் இன்றே இணையுங்கள்.

Great offer for CISCO & Microsoft exam takers at TURNKEY Test Center

PEARSON VUE-Authorised Test Centre

PROMETRIC TEST CENTER

## Do You Want to be an Internationally Recognized Network Engineer!!

**DACHNP**

**Diploma in Advanced Certified Hardware & Network Professional**

Six Recognized Certifications

- CISCO CCNA — **Cisco Certified Network Associate** (CCNA 640 - 802)
- Microsoft Certified Technology Specialist — **Microsoft Certified Technology Specialist** (MCTS 70 - 680)
- DLNA — **Diploma in Linux Network Administration with Security**
- DWNA — **Diploma in Windows Network Administration**
- DHEN — **Diploma in Hardware Engineering with Networking**

**MCITP**
Server Administrator
Enterprise Administrator

**MCSA**
Server 2012

**MCSE**
Server 2012

**CCNA**
Voice, Security

**CCNP**
IP Routing, IP Switch
IP Tshoot

**CCIE**
Routing & Swithing written Exam
350 - 001

CompTIA A+ N+

C|EH

## TURNKEY ஏன் தெரிவு செய்ய வேண்டும்?

- இலங்கையில் Hardware & Network துறையில் அதிகமான வல்லுனர்களை உருவாக்கிய முதன்மை நிறுவனம்.
- Authorized Test Centre for CISCO & Microsoft Examinations
- வெளிநாட்டு தூதரகங்களிலும் தொழில் வாய்ப்பு வழங்குனர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச சான்றிதழ்.
- CISCO, Microsoft & Network பாடநெறிகளுக்கு உயரதரமிக்க பரிசோதனைக் கூடம்.
- மறைமுகக் கட்டணங்கள் இல்லை.

*Our Accreditations*

Microsoft Partner

ISO 9001: 2008 CERTIFIED COMPANY

**10% SPECIAL DISCOUNT** on any Microsoft Online Exams for TURNKEY students

TURNKEY IT TRAINING
*Dedicated for Professional Coaching*
2 581581

**COLOMBO**
562/15B, Lower Bagathale Road,
(Road adjoining Premadasa Jewellers-Sea side) Colombo 03.
Tel: 2 581581, 2 595336, 077 2286988

**KANDY**
504/1, Peradeniya Road, Kandy. Tel: 081 2205678, 077 5077456

**Email: info@turnkey.lk**

**HOTLINE 0772 286 988**

Now register for any course online @ www.turnkey.lk